விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 19 திங்கட்கிழமை (04.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 016

# 6 மாதங்களுக்குள் வீடு கட்ட நிலங்கள்

## முகாம் மக்களுக்கு வழங்குவேன் - ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற யுத்த பாதிப்புக்களில் சிக்குண்டு முகாம்களில் வாழுகின்ற 10 ஆயிரம் பேருக்கு அடுத்த ஆறு மாதங்களுக்குள் வீடுகளை கட்டுவதற்கான நிலங்கள் வழங்கப் படவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு - கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பெரு மளவு நிலங்களை மக்களிடம் மீள ஒப்படைப்பேன் என வும் உறுதியளித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் இன்று விசேட உரை



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று திங்கட்கிழமை காலை 9.30

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்.வருகிறார் பிரி.அமைச்சர்

(கொழும்பு)

பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலக இராஜாங்க அமைச்சர் ஹுகோ ஸ்வைரி அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அரசா

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை வந்தார் ரொனி பிளேயர்

(கொழும்பு)

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கை வந்துள்ளார்.

விஷேட விமானம் மூலம் பயணம் மேற்கொண்ட இவர் நேற்று இரவு 7.30 மணியளவில் இலங்கையை வந்தடைந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

கம்பவாரிதியின் மடலுக்கு புருசோத்தமனின் விளக்கம் உள்ளே....►►►►►►►►

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரசாங்க, அரச அங்கீகாரம் பெற்ற சகல தனியார் பாடசாலைகள் மற்றும் அனுமதிக கப்பட்ட பிரிவேனாக்கள் யாவும் 2016ஆம் ஆண்டிற்கான கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று 4 ஆம

02ஆம் பக்கம் பார்க்க....

## இனவாதத்தை தூண்டும் செயல்!

(கொழும்பு)

சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல்கள் என்ற இன வாதத்தை பரப்பும் வகையில், நாடு முழுவதும் சிங்கத்தின் இரத்தம் (சிங்கலே) என்று எழுதப்பட்ட ஸ்ரிக்கர்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இதன் பின்னணியில் பேரின வாத சக்திகள் இருப்பதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. சிங்கள இனப்பற்றுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களில் இந்த ஸ்ரிக்கர்களை ஒட்டவேண்



டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள் ளன. இதன் ஊடாக சிலர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முனைவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. குறித்த இலட்சினை பொறிக்கப்பட்ட ரீசேர்ட்டுக்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

சமூக வலைத்தளங்களிலும் இந்த குறியீடுகள் பரப்பப்பட்டு லட்சக்கணக்கான விருப்பக் குறிகள் இடப்பட்டு திட்டமிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறான பிரசாரங்கள் எதிர் காலத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட கல

23ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியின் பக்கமே நான்



(கொழும்பு)

நான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கமே என நாடாளு

23ஆம் பக்கம் பார்க்க....

## செல்வம் அடைக்கலநாதன் மருத்துவமனையில் அனுமதி

### திடீர் மாரடைப்பு காரணமாக

(பனிக்கன்குளம்)

திடீர் மாரடைப்பு காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் சிறிஜெயவர்த்தன



23ஆம் பக்கம் பார்க்க....

## இரகசிய முகாம்களை நடத்த இராணுவத்துக்கு தேவையில்லை!

(கொழும்பு)

இராணுவத்தினர் இரகசிய முகாம்களையோ, சித்திரவதை முகாம்களையோ நடத்தவில்லை அவ்வாறான முகாம்களை நடத்த வேண்டிய தேவை இராணுவத்தினருக்கு இருந்ததில்லை என இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

கடந்த 25 வருடகாலமாக இர்ராணுவத்தினரின் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருந்து கடந்த 29-ம் திகதி விடுவிக்கப்பட்ட வீமன்காமம் பகுதியில் இரு வீடுகள் இராணுவத்தினரின் சித்திரவதை கூடமாக இயங்கி இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

24ஆம் பக்கம் பார்க்க....

## முழுமையான விசாரணைக்கு கால அவகாசம் தேவை

### - பரணகம

(கொழும்பு)

இதுவரையில் 23ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஐயாயிரம் முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள கால அவகாசம் தேவை என்றும் காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். எதிர்வரும் பெப்ரவரி 16 ஆம் திகதியுடன் அவரது பதவிக் காலம் நிறைவடைகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## உ/த பரீட்சை முடிவுகள் வெளியாகின

### "சென் ஜோன்ஸ், யாழ்.இந்து மாணவர் இருவர் தேசிய ரீதியில் 2-ம், 3-ம் இடத்தில் முன்னணி"



பாலசுப்பிரமணியம் ஞானகீதன்

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை வெளியாகிய கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் தோற்றிய யாழ்.மாணவர்கள் இருவர் அகில இலங்கை ரீதியில் 2ஆம், 3ஆம் இடங்களை பெற்று முன்னணி

23ஆம் பக்கம் பார்க்க....



கருணைநாயகம் ரவிகரன்

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## குமுழமுனை மண்ணில் சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்

2015ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதல்முறையாக 185 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 2ஆம் நிலை பெற்ற செல்வி சிவலோகநாதன் பவித்திரா அவர்களையும்

2015 ஆம் ஆண்டு A/L பரீட்சை முதல்முறையாக குமுழமுனை மகா வித்தியாலத்தில் வணிகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதில் சாதனை படைத்த மாணவியான செல்வி யோகராசா சயிந்தவி 3A மா.நி-2 அவர்களையும்

**கலைப்பரிவில் சித்தியடைந்த**

செல்வி இலக்குணநாதன் திவியா 2AC மா.நி 18
செல்வி கிஸ்நானந்தன் தனுசா ABC மா.நி 26

ஆகியோரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
குமுழமுனை ம.வித்தியாலய சாரணர் அணியின் இணைப்பாளர்
திரு.திருமதி பாலசிங்கம் - பரமேஸ்வரி
6ஆம் வட்டாரம், குமுழமுனை மத்தி, முள்ளியவளை, முல்லைத்தீவு.

(C-3295)



**Architectural CAD Center**
Prsonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo

**Auto CAD**

2D-drawing & 3D Modeling

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo

Link:0775116320-0718617972

(C-3315)



**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## ஐ.நா. ஆணையாளரின் வருகை எப்போது?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனின் இலங்கை விஜயம் தொடர்பில் இன்னும் திகதி தீர்மானிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச மாதத்துக்குள் அவர இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இன்னும் அவரின் விஜயத்துக்கான திகதி தீர்மானிக்கப்படவில்லை என்று ஆணையாளரின் பேச்சாளர் ரவினா சம்டாசனி ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் புதிய அரசாங்க ஆட்சியின் பின்னர் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து கண காணிக்க வருமாறு ஆணையாளருக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் நல்லிணக்க முன்னேற்றங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் எதிர்வரும் ஜுன் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்ஆணையகத்துக்கு அறிக்கை சமர்பபிக்கவுள்ளமை குறிபபிடத்தக்கது. (செ-12)

## பாடசா...

தகதி திங்கட்கிழமை ஆரம்ப மாகவுள்ளன.

இதற்கமைய சிங்கள-தமிழ் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை 2016 ஜனவரி 04ஆம் திகதி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி 2016 ஏப்ரல்மாதம் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவு பெறவுள்ளது.

இரண்டாம் தவணை 2016 ஏப்ரல் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 20 16 ஜுலை 29ஆம் திகதி வெள்ளிக் கிழமை நிறைவுபெறவுள்ளது.

மூன்றாம்தவணை 2016 ஆகஸ்ட் 31ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 2016 டிசம்பர் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவு பெறவுள்ளது.

நாட்டிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை 2016 ஜனவரி 04ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 2016 ஏப்ரல் 11ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவு பெறவுள்ளது. (செ-12)





BM Business Management
CSD Computing & Systems Development
CE Civil Engineering
QS Quantity Surveying
BMS Biomedical Science
LLB Law

பிரித்தானிய
உயர் தேசிய டிப்ளோமா
மற்றும் பட்டப்படிப்புகள்




- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

16, Point Pedro Road,
Jaffna, Sri Lanka.
Tel : 021 221 9910

For Details 077 710 2131

16 YEARS
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR

(C-3311)



**பணிப்பெண் தேவை**

மருத்துவர் குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்றுவேலை செய்யக் கூடிய பணிப் பெண்தேவை

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 0777113480, 0778804439, 0776047241

(3065)

# சேவை செய்வதே எனது நோக்கம்

## உயிரியல் பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற ஹரிஷங்கர் தெரிவிப்பு



எதிர்காலத்தில் வைத்தியராக வந்து எங்கெல்லாம் எனது சேவை தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் சேவை செய்வதே எனது நோக்கம் என க.பொ.த உயர்தரப்பரீட்சையில் உயிரியல் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் ஆனந்தராஜா ஹரிஷங்கர் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பெறுபேறுகள் குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எனது பெற்றோர்களும் ஆசிரியர்களும் உறவினர்களும் எனது சிறு வயதில் இருந்தே எனக்கு கல்வித் துறையில் போதியளவு ஊக்கமும் ஒத்துழைப்பும் தந்திருந்தார்கள்.

யாழ்.மாவட்டத்தில் கல்வித்துறைக்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதால் எதிர்காலத்தில் கல்வியில் அதிகூடிய கவனம் செலுத்தி கற்க வேண்டியது அவசியம் ஆகும். கூடுதலாக படிக்கும் போது கூடிய இலக்கை அடைவதற்கு இலகுவாக இருக்கும். சிறு வயதில் இருந்து எத் துறையை தேர்ந்தெடுத்து கல்வி கற்கின்றோமோ அத்துறையில் கூடிய கவனம் செலுத்தி இலக்கை மாற்றாமல் கல்வியைத் தொடர்ந்து வந்தால் சிறந்த வெற்றியை பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பெற்றோரும் ஆசிரியர்களும் உதவினால் மாணவர்கள் இலக்கை அடைய முடியும்

## உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாமிடம் வந்த மாணவன் ரவிகரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் எத்துறையை விரும்புகிறார்களோ அத்துறையில் கல்வி கற்க பெற்றோரும் ஆசிரியர்களும் உதவினால் மட்டுமே மாணவர்கள் தமது குறிக்கோளை அடைய முடியும் என உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற யாழ். பரியோவான் கல்லூரி மாணவன் கருணைநாயகம் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பெறுபேறுகள் குறித்து மாணவன் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்கள் தமது பாடத்துறையை தேர்வு செய்யும் போது பெரியவர்கள் துணையாக இருக்க வேண்டும்.

எத்துறையில் சிறப்பாக செயற்படுவோம் என்பது பற்றி மாணவர்களுக்குத் தான் தெரியும். எனவே அவர்களின் விருப்பங்களுக்கு தடையாக இல்லாமல் அவர்களின் கல்விக்கு ஊக்கமளித்தால் வெற்றி அடைவது நிச்சயமாகும்.

இப் பாடத்துறை முதன் முதலாக அறிமுகமான நிலையில் தேசிய ரீதியில் 2 ஆம் இடத்தை பெற்றதில் மகிழ்ச்சி. இறைவனுக்கும் எனது பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு அவர்கள் தான் எனது வெற்றிக்கு முக்கிய பங்காற்றியுள்ளார்கள்.

எதிர்காலத்தில் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே எனது இலக்காக இருப்பதால் அதை நோக்கி பயணிக்கவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நாம் கற்க விரும்பும் துறையை நாமே தேர்வு செய்ய வேண்டும்



## கணித பிரிவில் தமிழ்மொழிமூலம் யாழில் முதலிடம் வந்த மதனாஹரன்

கல்வியில்நாம் கற்கவிரும்பும் துறையை மற்றவர்களின் கட்டாயம் இன்றி நாமே தேர்வு செய்து கற்று வந்தால் சிறப்பான வெற்றியை பெறமுடியும் என கணித பிரிவில் தமிழ்மொழி மூலம் தோற்றி யாழ்.மாவட்டத்தில் முதலிடம் வந்த நெல்லியடி மத்திய கல்லூரிமாணவன் கலாமணிமதனாஹரன் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் , மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 22 ஆவது இடத்தையும் பெற்ற மதனாஹரன்மேலும்தெரிவிக்கையில்,

சிறுவயதில் இருந்து எனது பெற்றோரும் ஆசிரியர்களும் நான் விரும்பிய பாடங்களை கற்பதற்கு துணையாகவும் ஊக்கப்படுத்தியும் வந்தனர்.

வீட்டிலும் பாடசாலையிலும் கல்வி கற்பதற்கு பலரது ஆதரவும் எனக்கு கிடைத்த காரணத்தால் நான் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடிந்தது.

சிறந்த பொறியியலாளராக வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தபடியால் எனது இலக்கை நோக்கி விருப்புடன் கற்று வெற்றி பெற்றுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-60)

# முயற்சியும் நோக்கமும் இருந்தால் எந்தத்துறையிலும் சாதிக்க முடியும்



## பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் தேசிய ரீதியில் மூன்றாமிடம் வந்த யாழ். மாணவன்

நோக்கமும் முயற்சியும் இருந்தால் நாம் எந்தத் துறையிலும் சாதிக்க முடியும் என யாழ். மாவட்டத்தில் பொறியியல்தொழில்நுட்ப்பிரிவில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 3 ஆவது இடத்தையும் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாண வன்பாலசுப்பிரமணியம் ஞானகீரன் தெரிவித்துள்ளார்.

தனது உயர்தரப் பெறுபேறு குறித்து மாணவன் மேலும்தெரிவிக்கையில், எமது பாடத்தெரிவு இடம் பெறும் போது நான் இத்துறையை தேர்வு செய்தவுடன் எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இத் துறையில் எதையும் சாதிக்க முடியாது என தெரிவித்தனர். ஆனால் உண்மை அது அல்ல. அந்தத் துறையிலும்சாதிப்பதற்குஎமது நோக்கமும் முயற்சியும் இருக்க வேண்டும்.

எனது வெற்றிக்கு முக்கிய காரணமாக எனது பெற்றோர்கள்என்னுடன்துணையாகஇருந்தார்கள். அத்துடன் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பகுதித் தலைவர் ஆகியோர் என்னை மிகவும் ஊக்கப்படுத்தியிருந்தனர்.

மேலும் இனிவரும் காலங்களில் இத்துறையை தேர்வு செய்து கற்கும் மாணவர்கள் கூடுதலான பயிற்சியைப் பெற்று மிகவும் கவனத்துடன் கல்வி கற்று வெற்றி பெற வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் நலிவடைந்துள்ள தொழில்நுட்ப துறையை கட்டியெழுப்புவதே தனது இலட்சியமெனவும் எதிர்கால இலக்கு ஒரு மென் பொறியியலாளராக வர வேண்டும் என்பதே. வெளிநாடுசெல்வதற்கு எனக்குநூறுவீதம் விருப்பம் இல்லை. யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்ப துறை மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனை கட்டியெழுப்புவதற்கு நான் முயல்வேன். இதுவே என் எதிர்கால இலக்கு என மேலும் தெரிவித்தார். (இ-4-9)

# சிறந்த சட்டத்தரணியாக வந்து மக்களுக்கு சேவை செய்வேன்

## கலைப்பிரிவில் யாழில் முதலிடம் பிடித்த மாணவி நிதர்ஷனா தெரிவிப்பு



எதிர்காலத்தில் ஒரு சட்டத்தரணி யாக வந்து எமது மக்களுக்கு சேவை யாற்றுவதே எனது இலட்சியம் என கலைப்பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ்.அச்சுவேலி இடைக் காடு மகா வித்தியாலய மாணவி குணபாலசிங்கம் நிதர்ஷனா தெரிவித்தார். தனது உயர்தரப் பெறுபேறுகுறித்துஅம்மாணவி மேலும் தெரிவித்ததாவது,

எனது தந்தை ஒரு விவசாயி. அவர் தனது உழைப்பில் என்னை அக்கறையுடன் படிக்கவைத்தார்.ஆடம்பரசெலவுகள் என்றால் எனது தந்தையிடம் பணம் கேட்க சற்று தயக்கமாகவே இருக்கும்.

ஆனால் கல்விச் செயற்பாடுகளுக்கு பணம் கேட்க எனக்கு எந்த வொரு தயக்கமும் இல்லை. ஏனென் றால் கல்விச் செயற்பாட்டுக்காக பணத்தை தருவதற்கு தந்தை சிறிது கூட தயங்கமாட்டார்.

அத்துடன் எனது வெற்றிக்கு காரணமாகவுள்ள கடவுள் மற்றும் பெற்றோர், சகோதரிகள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின் றேன். எனது படிப்பை மிகவும் கடினமான முறையில் மேற்கொள்ளவில்லை.

சிறுசிறு குறிப்புக்களாக எழுதியே படித்துக் கொண்டேன். ஒவ்வொரு மாணவரும் தமது குடும்ப நிலையை மனதில் ஞாபகப்படுத்தினால் நிச்ச யம் வெற்றியடைய முடியும் என அவர் தனது வெற்றி குறித்து தெரிவித்தார். (இ-5)

# அன்றாடம் கற்பதன் மூலம் நாம் இலக்கை அடையலாம்

## வர்த்தகப் பிரிவில் முதலிடம் வந்த யாழ்.மாணவன் லயீவன் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிக்கப்படுவதை பரீட்சைக் காலத்தில் மட்டும் கற்காது அன்றாடம் கற்றுவந்தால் எமது இலக்கை இலகுவில் அடைய முடியும் என யாழ். மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் மாணிக்கவாசகர் லயீவன் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பெறுபேறு குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய காலத்தில் பல தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன. பாடசாலை முடிந்தவுடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்றுவிட்டு வீடு வரும் போது மிகவும் சோர்வடைந்து போகின்றார்கள். எனவே கற்பித்தவற்றை கற்பதற்கு நேரம் போதிய அளவில் காணப்படுவதில்லை.

ஆகவே நாம் கற்கும் ஆசிரியர்கள் மீது நம்பிக்கை வைத்து பொறுமையுடன் கற்றால் வெற்றி பெற முடியும்.

அத்துடன் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஊக்குவிப்பும் என்மீது வைத்த நம்பிக்கையுமே எனது வெற்றிக்கு காரணம் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஓராண்டு கால ஆட்சியில் நாட்டுக்கு பாரியளவு பாதிப்பு

(கொழும்பு)

ஓராண்டு கால ஆட்சியில் நாட்டுக்கு பாரியளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் விளை யாட்டுத்துறை அமைச்சர் மஹிந் தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அரசியல், பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட பல் வேறு வழிகளில் கடந்த ஓராண்டு காலமாக நாடு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது.

இந்த அரசாங்கம் நீண்ட காலம் ஆட்சி நடத்தக் கூடிய சாத்தியங்கள் கிடையாது. இந்த அரசாங்கத்தின் திருமண பந்தம் நீண்ட காலத்திற்கு நீடிக்க வாய்ப்பில்லை.

வரவு செலவுத் திட்டத்தை பிரத மர் தயாரித்தார், நிதி அமைச்சர் வாசித்தார், ஜனாதிபதி மைத்திரி ரிபால சிறிசேன அந்த வரவு செலவுத் திட்டத்தின் சிறகுகளை வெட்டி னார்.

இதுவே இந்த அரசாங்கம் நீண்ட காலம் நீடிக்காது என்பதற்கான சிறந்த உதாரணமாகும்.

இந்த அடிப்படையில் நீண்ட காலம் நீடிக்க முடியாது என்பதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். என அவர் வார இறுதி பத்திரி கையொன்றுக்கு நேர்கா ணல் வழங்கியுள்ளார். (இ-7)



## பாதுகாப்பு பிரிவினரின் வாகனம் விபத்து

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் குழுவொன்று பயணித்த டிபெண்டர் வாகனம் முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி உள்ளது.

குறித்த விபத்து தம்புள்ளை நீதிமன்ற சந்தியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் முச்சக்கரவண்டி முற்றாக சேதமடைந்துள்ள நிலையில், டிபெண்டர் வாக னத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை


ஆண்டுத்திட்டம் 2016
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்




- அரச நிர்வாக அலுவலர்கள்
- தனியார் துறை
- சட்டம் நீதிசார் நிபுணர்கள்
- அரச சார்பற்ற நிறுவன அலுவலர்கள்
- மாணவர்கள்

என அனைவருக்கும் பயனுள்ள 2016ஆம் ஆண்டுக்கான அழகிய, வர்ணபக்கங்களுடன் கூடிய முக்கிய நாட்கள் அடங்கிய

YEAR PLANNER - 2016

பிரதி ஒன்றின் விலை ரூபாய் 200 மட்டும்
அதிரடி விலைக்குறைப்பு ரூபாய் 120 மட்டும்

உடனடியாக உங்கள் பிரதியினை பெற்றுக்கொள்ள நாடுங்கள்

1. பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ்ப்பாணம், நல்லூர், கொழும்பு)
2. அருணோதயம் மல்ரி றேட் சென்றர் (புத்தூர்)
3. K.K Phone Shop (யாழ்ப்பாணம்)
4. சபேஸ் ரேடர்ஸ் (புத்தூர்)
5. அருள் குளோபல் எக்ஸ்பிரஸ் (யாழ்ப்பாணம்)

குறிப்பு : 10 பிரதிகள் ஒரே தடவையில் கொள்வனவு செய்வோருக்கு ஒரு பிரதி இலவசம்.

(C-3300) தொடர்புகளுக்கு : 072 441 2014


# மரண அறிவித்தல்



## திருமதி பாக்கியம் பிலிப்

யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பாக்கியம் பிலிப் அவர்கள் 02.01.2016 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து - அலங்காரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - வறோணிக்கா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிலிப்பின் அன்பு மனைவியும், ஆன்மேரி புஷ்பராணி (ராசாத்தி - பிரான்ஸ்), அன்ரன் சின்னராசா (கனடா), கிறேஸ் ருக்மணி (இலங்கை), லில்லி செல்வமணி (பிரான்ஸ்), பெஞ்சமீன் ராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை, சாமிநாதர் மற்றும் மரியம்மா காலஞ்சென்ற சாமிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலங்கநாதன், சகாயநாயகிதேவி, அந்தோனிப்பிள்ளை (முத்து), நகுலன், அன்னமேரி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மரியமுத்து, மனுவேல் பிள்ளை, ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரமேஸ் லக்சி, ரமா அனஸ்ரின், எட்வேட், வீணா, மேசி பிரசன்னா, பப்பிரிஸ், பிறெடரிக், புளோரா, அபிநயா, ஆருரன், அமிர்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராயன், ராகல், ஜெசிக்கா, யூலியானா, யூலியன், இரம்மியா ஆகியோரின் அன்பும் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் நாளை (05.01.2016) செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணியளவில் கரவெட்டி புனித பரலோக மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கரவெட்டி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேசி இல்லம் விக்னேஸ்வரா வீதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : 021 321 8149
077 340 0516

(C-3300)

# மரண அறிவித்தல்கள்

## மழவராயர் நாகம்மா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளை, விசுவமடு ஆகிய இடங்களை வதிவிடமாகவும், மீசாலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மழவராயர் நாகம்மா அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் ஆள்வாப்பிள்ளை(அமரர்), இலட்சுமிப்பிள்ளை(அமரர்) ஆகியோரின் அன்பு மகளும் சித்தர்(அமரர்), தில்லைநாச்சன் (அமரர்) ஆகியோரின் அன்பு மருமகளும் மழவராயர்(அமரர்) அவர்களின் அன்பு மனைவியும் கந்தசாமி (அமரர்), வேலாயுதம், இலட்சுமி(அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரன், பரமேஸ்வரி, கமலேஸ்வரி, செல்வராஜா (சுவீடன்), கணேசமூர்த்தி (அமரர்), வினாயகமூர்த்தி (சுவிஸ்), கலாதேவி(பிரான்ஸ்), புவனேஸ்வரி, சறோசாதேவி (உதவிக் கல்விப்பணிப்பாளர், முன்பள்ளி, தென்மராட்சி கல்விவலயம்), விஜயராணி(அமரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, யோகேஸ்வரி, செல்லையா, இராமலிங்கம், சிவகுமாரி (சுவீடன்), சிவமலர்(சுவிஸ்), கந்தசாமி(அமரர்), அரியநாயகம்(அமரர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபன்(சுவிஸ்), விஜிதா(அமரர்), கவிதா, சிந்துஜா (பிரான்ஸ்), சந்திரகுமார்(சுவிஸ்), சந்திரலேகா(சுவீடன்), சந்திரவதனா(ஆசிரியர், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை), சந்திரகாந்தன்(லண்டன்), சந்திரலோஜி, பாஸ்கரன், சுதாகரன்(பிரான்ஸ்), ஜீவகரன், சங்கரன், குணாகரன் (லண்டன்), உமாகரன் (லண்டன்), இராமகீர்த்தி(பிரான்ஸ்), சிந்துஜன்(அமரர்), சோபனா(சுவீடன்), சர்மினி(சுவீடன்), அபிராம்(சுவிஸ்) விதுசாளினி, அதுர்சனன்(சுவீடன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சினேஜா, ஆதவன், தருண், அருண், அஜய், சரணிகா, சுஜன், சங்கீர்த்தன், பிரணவி, பரணிதன், யாதவி, சோபிதன், லிதுர்ஜா, சுவேதா, தாட்சாயினி, லக்சன், கனிக்கா, கிரிசாந்த், சாளினி, சாயினி, சுபராம் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.01.2016 (இன்று) நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| அ.சறோசாதேவி | - | 0776406374 |
| செ.பரமேஸ்வரி | - | 0772055615 |
| க.இராமலிங்கம் | - | 0766408649 |
| ம.செல்வராசா | - | 0046761500816 |
| க.கலாதேவி | - | 0033782768455 |

தகவல் :
குடும்பத்தினர்

(C-3314)

## கந்தசாமி ஐயர் விசாலாட்சியம்மா



தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆலயங்களின் பிரதம குருவாகிய அமரர் நாகலிங்கஐயர் கந்தசாமி ஐயர் அவர்களின் அன்புத் துணைவியார் விசாலாட்சியம்மா

அவர்கள் 03.01.2016 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04/01/2016) திங்கட் கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனக் கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :-
க.இலட்சுமணசர்மா (மகன்) , க.பாஸ்கரக்குருக்கள் (மகன்)
க.ஜெயராமக்குருக்கள் (மகன்) , க.ரமணீகரசர்மா (மகன்)
க.பாலகிருஸ்ணசர்மா(மகன்) மற்றும் மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்

(3064)
சந்நிதி வீதி , தம்பாலை
அச்சுவேலி. T.P - 0212058326 / 0773248911

## அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்

**இசை ஆராதனை**

நிகழ்ச்சி
04.01.2016 திங்கட்கிழமை
பாட்டு: சி.கௌரிசங்கர் சர்மா
மிருதங்கம்: N.சிவசுந்தர சர்மா
வயலின்: S. கோபிதாஸ்

**இசை ஆராதனை** முற்பகல் 11 மணிக்கு

அனுசரணை வழங்குவோர்
லோகேஸ்வரன், மானிப்பாய்

(2901)

## கண்ணீர் அஞ்சலி

### ஐயாத்துரை ஜெயச்சந்திரன் (சந்திரன்)


அன்பு நண்பன் ஐயாத்துரை ஜெயச்சந்திரன் அவர்கள் 31.12.2015 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவயோக சுவாமிகளின் குஞ்சிதபாதத்தை வழுத்தி வணங்குகின்றேன்.

என்றும் நட்புடன்

பொன்னம்பலம் சிவச்செல்வன், எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ்.

## மரண அறிவித்தல்

### திருமதி பாலாம்பிகை செல்வநாயகம்



யாழ். வேலணை மேற்கு, சிற்பனையைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா, Toronto வை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாலாம்பிகை செல்வநாயகம் அவர்கள் 01.01.2016 வெள்ளிக்கிழமையன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான வாதவூர்- அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வநாயகம் (வறக்காப்பொல- பிரபல வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வரதி, செல்வன் (ராஜன்)- கனடா, செல்வராணி (UK), சரவணபவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலச்சந்திரன் (தியாகராஜா ஸ்ரோர்ஸ்- காலி), நந்தினி (கனடா), மனோகரலிங்கம் (UK), ரமணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தங்கசாமிப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அருணகிரி, மகாலட்சுமி, திருச்செல்வம், தவச்செல்வம் மற்றும் வரதலெட்சுமி (கனடா), அருட்செல்வம் (N.S.P.S- கொழும்பு), காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாமதி, பாமினி, பிரசாந்த், பகீரதன், ராஜிகா, ஆரபி, அபிலாஷ், அபிலன், அக்ஷயா, அஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.01.2016 இன்று திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (இ)

தகவல்: பாலச்சந்திரன் (மருமகன்)-077 751 2739, 011 236 4197
ராஜன் செல்வநாயகம் (மகன்) கனடா- 416 759 4624, 416 312 7613
சரவணபவன் செல்வநாயகம் (மகன்) கனடா- 416 451 6669

## மரண அறிவித்தல்

### திருமதி கெங்கேஸ்வரன் தீபா



முள்ளியவளை 4-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கெங்கேஸ்வரன் தீபா (02.01.2016) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கிருஷ்ண மூர்த்தி - நகுலேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வியும், கெங்கேஸ்வரனின் அன்புத் துணைவியும், உஷாலினியின் அன்புத் தாயாரும், அகல்யா (பிரான்ஸ்), சரண்ஜா, சிந்துஜன் (துளசி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் வடிவேல் மற்றும் சிவகங்கை ஆகியோரின் அன்பு மருமகளும், சுதர்சன் (பிரான்ஸ்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2016) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 4-ம் வட்டாரம் முள்ளியவளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தொ.பே இல : 0775959483 (சி-3292) குடும்பத்தினர்

## கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரிப்பு

நெல்லியடி நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.காலை வேளையில் தெருக்களில் நாய்கள் குவிந்து காணப்படுகின்றன.வேலைக்கு செல்வோர் மற்றும் பொது மக்களை நாய்கள் துரத்திச் சென்று கடித்து விடுகின்றன.

இதனால் வீதியால் செல்வோர் தினமும் நாய்க்கடிக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் கட்டாக்காலி நாய்களுடன் வீட்டில் வளர்க்கும் நாய்களும் வீதியில் கூடுதலாக காணப்படுகின்றன. தெருக்களில் உள்ள நாய்கள் கடித்து விட்டால் பொது மக்கள் தமது உயிருக்கு ஆபத்து என அச்சப்படுகின்றனர்.

ஏனெனில் தெருக்களில் உள்ள நாய்கள் தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட நாய்களா? என்பதில் சந்தேகம் நிலவுகிறது. நெல்லியடி நகரப்பகுதியில் நாய்க்கடிக்கு இலக்காகி பலர் உயிரிழந்துள்ளனர்.மேலும் நாய்கள் காலைவேளையில் குவிந்து காணப்படுவதால் வீதி விபத்துக்களும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வீட்டு வளர்ப்பு நாய்களை தவிர கட்டாக்காலி நாய்கள் தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று எண்ணுகின்றீர்களா...

சனி - ஞாயிறு தினங்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை
திங்கள் - வெள்ளி முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை (2714)

**எம்முடன் பேசுங்கள்**

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மதசார்பற்றது ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored By Enlightnment Circle, UK


## முதலாம் ஆண்டு நினைவலைகள்




**நமசிவாயம் பாலசுப்பிரமணியம்**

பிறப்பு
02.09.1930
இறப்பு
16.12.2014
திதி:04.01.2016

ஆண்டொன்று
ஓடிச் சென்றதப்பா ஆற்ற முடியாத
நினைவுகளுடன் வாழ்கின்றோம்
நீண்டோடும் காலங்களெல்லாமே
நினைவழியா நாட்களாகி விட்டதப்பா
வேண்டுகிறோம் வேளைகள் முழுவதுமே
விடையேறும் சிவனிடம் சேர்ந்தீர்களென்று

நினைவழியா நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

32/4, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.



**குகநேசன் கயந்தன் (யாழ். இந்து மாணவன்)**

மலர்வு
29.05.1998
உதிர்வு
10.01.2015

அன்னை வயிற்றினில்
குடியிருந்தவனே
அடுத்துவந்து அவனியில் பிறந்தவனே
கண்ணை விரித்து உலகை ரசித்தவனே
மெல்லச் சிரித்து மழலை மொழிந்தவனே
பள்ளி சென்று பாடம் பயின்றவனே
பாரிலின்று எங்களைப் பிரிந்து எங்கு சென்றாய்...?

அப்பா, அம்மா, அண்ணன், பெரியம்மாமார்,
பெரியப்பாமார், மாமாமார்,
மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.

(3043)

# உயர்தரப் பெறுபேறுகள் நேற்று வெளியீடு

2015 ஆம் ஆண்டுக்கான க.பொத. உயர்தரப் பெறுபேறுகள் நேற்றைய தினம்வெளியிடப்பட்டன. இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் ...

**யாழ்.வட்டு இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

ஜே.றொசான்–ஏ2பி, எஸ்.நிரோசன்–ஏபிசி, பி.பிரசாந்–3பி, எஸ்.இராமேஸ்வரன்–3பி,எஸ்.கிரிசாந்–2பிசி, ஆர்.மனோஜா–2சிஎஸ், என்.விமல்ராஜ்–2சிஎஸ்

**விஞ்ஞானப்பிரிவு**

எஸ்.சிந்துஜா–2ஏசி, ஆர்.அனோஜனா–2பிசி, எம்.விவிதாரணி–பி2சி, பி.கர்சனா–3சி

**வணிகப்பிரிவு**

என்.சங்கவி–3ஏ, கே.அபர்ணா–3ஏ, ஆர்.தமிழினி–2ஏபி,கே.ரேணுசாந்–2ஏபி, எஸ்.கஜேந்திரன்–2ஏசி,வி.அஜித்தா–ஏபிசி

**கலைப்பிரிவு**

எஸ்.குகதாசன்–3ஏ, கே.டிலாஜினி–ஏ2பி,எஸ்.கிரிசா–ஏ2பி, பீ.சங்கீர்த்தனா–ஏபிசி, பி.சுகன்யா–ஏபிசி,எஸ்.தாரணி–ஏ2சி,பி.பவித்திரா–ஏபிசி,வி.மகிந்தன்–2ஏஎஸ்

**பொறிமுறைத் தொழில்நுட்பப்பிரிவு**

எம்.தேவகரன்–ஏபிசி, யு.பிரசன்னா–ஏபிசி, ஏ.அனுதாஸ்–3சி, கே.மணிவண்ணன்– பி2எஸ், ஜே.ஐங்கரன்–2சிஎஸ், பி.விஜயகுமார்–சி2எஸ்

**உயிர்முறை தொழில்நுட்பம்**

ஜே.சுதாகரன்–2சிஎஸ், ஏ.டிசாந்தன்–சி2எஸ், எம்.மாதவி–சி2எஸ்.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

எம்.லஜீவன்–3ஏ, ரி.துஸ்யந்தன்–3ஏ, எம்.சாரங்கன்–3ஏ, ஆர்.கிருசானி–3ஏ, என்.செந்தூரம்–3ஏ, கே.மதீசன்–3ஏ, என்.அபிராமி–3ஏ, கே.உசாந்தி–3ஏ, எஸ்.சோபனா–2ஏபி, பி.ஹரிகரசர்மா–2ஏபி, ரி.ஜினோசன்–2ஏபி, கே.மதிவதனி–2ஏபி, எஸ்.சுருதிகா–ஏ2பி, ரி.சஜிகாந்–ஏ2பி, பி.சனுசன்–ஏ2பி, எம்.திவாகரன்–3பி, ஆர்.பிரசாந்தன்–ஏ2பி

**கணிதப்பிரிவு**

எஸ்.தனுசன்–3ஏ, கே.சதுர்சன்–3ஏ, எஸ்.சாருஜன்–3ஏ, எம்.நிரோசன்–3ஏ, ரி.அபிராமி–2ஏபி, பி.மதீசன்–ஏ2பி, ரி.மதுரன்–2ஏசி, எஸ்.மாதங்கி–ஏ2பி, என்.சிவகஜன்–ஏ2பி, எஸ்.சுஞ்சய்க்குமார்–3பி, பி.பாலஜீவன்–ஏபிசி, கே.தர்சன்–ஏபிசி, கே.சசிதன்–பி2சி, எஸ்.சிறிதர்சன்–ஏ2சி, ரி.சிஹிசஸ்வதனன்–பி2சி, ரி.தரணி–பி2சி, கே.கஜானன்–2பிசி, எஸ்.லக்ஷிகா–ஏ2சி, ஆர்.நிருஜன்–3சி, ரி.திவாசன்–பி2சி, கே.அபிராமி–பி2சி, எல்.சுபஜனனி–2பிஎஸ், எஸ்.லேபிரணவன்–3சி, எல்.மிளிரன்–3சி, பி.சங்கீதன்–பிசிஎஸ்,

**கலைப்பிரிவு**

ஜே.ரதீபன்–2ஏபி, ஆர்.நிரோஜன்–2ஏபி, என்.சுபாங்கி–2ஏபி, எம்.அனோஜா–பிசிஎஸ், பி.விஷ்னுஜன்–3ஏ, ஜி.ஜனனி –2ஏபி, எஸ்.ஜனனி–2ஏசி, எம்.மகிந்தா–ஏபிசி, ஆர். கலையமுதன்–ஏ2பி, எல்.துர்க்கா–ஏபிசி, ரி.தனுஸ்டன்–2ஏபி, ஏ.தனுஸ்டா–2ஏபி, ஜி.சாரங்கி–2பிசி

**உயிரியல் பிரிவு**

ஈ.சாலுஜா–2ஏசி, ஜி.வினுசா–ஏ2பி, வி.தட்ஷாயினி–ஏ2பி, பி.அபிராமி–ஏ2பி, பி.பாலஜீவன்–ஏபிசி, ஜி.தனுசன்–பிசிஎஸ், எஸ்.சிசுதன்–3சி

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

**கணிதப்பிரிவு**

ரா.ஜெனார்த்தனன்–3ஏ, ஜெ.மயூரன்–2ஏபி, து.மேதுஷா–3பி, கி.விஷ்ணுகா–2சிஎஸ்

**உயிரியல் பிரிவு**

ப.கௌதமன்–2சிஎஸ், ஆ.கிரிஷா–2சிஎஸ், ச.தரண்யா–2சிஎஸ், மோ.சதீஸ்வரன்–2சிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**

வா.விதுஷா–3ஏ, ஜெ.சுதாகரன்–3ஏ, ரா.சண்ராஜ்–2ஏபி, பா.தனுசாந்–2ஏபி, ச.சுதாகரன்–2ஏபி, மோ.பவன்–ஏபிசி, த.மாதங்கி–ஏபிசி

**கலைப்பிரிவு**

லோ.சஜிதா–3ஏ, ம.லோஜினி–2ஏபி, ஜெ.சௌந்தரராஜன்–2ஏபி, க.சுஜேனி–2ஏபி, க.டிபர்சன்–2ஏபி, செ.கதீஷ்–2ஏபி, க.சிவகாயத்திரிநாயகி–ஏ2பி

**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**

**கணிதத்துறை**

க.மதனாஹரன்–3ஏ, சி.ஜெனோசன்–3ஏ, வி.லிங்கரட்ணம்–2ஏபி, த.அனோஜன்–2ஏபி, செ.வினோசன்–2ஏசி,வி.அஜந்தன்–2ஏபி, தே.இரட்சகன்–2ஏபி, செ.சஞ்சயன்–2ஏபி,யோ.சுயந்தன்–2ஏபி, ப.ராம்ஜி–2ஏசி

**உயிரியல்துறை**

கி.சாய்ரூபன்–3ஏ, வி.சத்தியப்பிரியன்–3ஏ,நே.ராஜமனோகரி–2ஏபி, தி.அலன் றொக்ஸி–2ஏபி,கி.மாதுளா–2ஏசி

**வர்த்தகத்துறை**

ஸ்ரீ.சஜீபன்–3ஏ, பி.மயூரிகா–3ஏ,ம.லக்ஸ்மன்–2ஏபி, க.கோபி கிருஸ்ணா–2ஏபி, ஜெ.நிவேதா–2ஏபி

**தொழில்நுட்பத்துறை**

ச.அகிம்சா–ஏபிசி, நா.திருபரன்–ஏ2பி,ப.ரிசந்தன்–2பிசி,பி.சசிகரன்–3சி

**கலைத்துறை**

வா.டக்சன்–3பி

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு (3ஏ)**

என்.சுதர்சனன், ஆர்.சிவேஸ்வரன், எஸ்.லவனராஜ், ரி.நிரோஜன், வி.சஜீவன், ஏ.கிருஷிகன், பி.தினேசன், ரி.நினுஜன், எஸ்.சர்வக்ஜன், எஸ்.நிரோஜிதன், பி.ஹஜமுகன், எஸ்.அனுராம், ஜி.நிஷாகரன், எஸ்.சபேசன், என்.சுமன், எம்.சிந்துஷன், பி.மணிகாந்த், வி.கஜகரன்

(2ஏபி)

சி.விவேக்வினு சாந்த், எம்.புவேந்திரன், ரி.சோபிதன், எஸ்.ஹரிவர்தன், என்.பாலகுமார், ஆர்.மத னராஜா

(ஏ2பி)

எஸ்.அனோஜன், எஸ்.சாரங்கன்,எம்.ஜெசுரன்

**உயிரியல் பிரிவு (3ஏ)**

ஏ.ஹரிசங்கர்,எஸ். வித்யாசாகர், ஆர்.சுதர்சன், ஆர்.பனுவரன், ஆர். மயூரெதன், வி.கோகுலன்

(2ஏபி)

எம்.அனுஜன், எஸ்.அரவிந்தன், கே.கோபிசாந்த்

(ஏ2பி)

கே.பிரியதர்சன்

**தொழில்நுட்பப்பிரிவு**

எஸ்.சஞ்ஜீவன்– ஏபிசி, ஏ.ஜிந்துசன்– ஏபிசி, ஆர்.விதுசன்– பி2சி, வி.குகானன்–ஏ2சி

**வர்த்தகப்பிரிவு (3ஏ)**

ரி.டினேஸ், கே.கௌதமன், எஸ்.கபிலன்

**கலைப்பிரிவு (3ஏ)**

எஸ்.சேந்தன்

**விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் (3ஏ)**

பி.ஞானகீதன்

**யா/இராமநாதன் கல்லூரி**

**கலைப்பிரிவு**

சி.மிதிலா–3ஏ, செ.தர்சகா–3ஏ, சி.பிறேமிளா–ஏ2பி, சி.நிக்ஷனா, சு.சிந்துஜா–ஏ2பி, க.கலையரசி–ஏபிசி, சோ.சிந்துஜா–ஏபிசி, ச.விமலா–ஏபிசி, சோ.யுரோனிக்கா–ஏபிசி, உ.ஜன்சிகா–ஏ2சி, ச.பவித்திரா–ஏ2சி, அ.அஜந்தா– 3பி, யு.தியாந்தினி–2பிசி, சி.துஷ்யந்தினி–2பிசி, சோ.யுரேனிக்கா–2பிசி, ஜ.தரணிகா–2பிசி, சி.நஜீறா–2பிசி

**கணித, விஞ்ஞானப்பிரிவு**

சு.நிலுஜா–பி2சி, பு.மதியுகா–2பிசி

**வர்த்தகப்பிரிவு**

செ.டசாளினி–2பிஎஸ், வ.வர்த்திகா–2பிசிஎஸ்,

**சன்மார்க்க மகா வித்தியாலயம்**

தோற்றியோர் எண்ணிக்கை–03

ந.கீர்த்திகா–3ஏ, க.கார்த்திகா–பிசிஎஸ், யோ.தர்சிகா–3எஸ்

---

**2010ம் ஆண்டில் பெறப்பட்ட புத்தகங்களே மீட்கப்பட்டன**

வடமராட்சி கட்டைவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சியசாலையில் கடந்த 30 ஆம் திகதி மீட்கப்பட்ட பாடப்புத்தகங்கள் அனைத்தும் 2010 ஆம் ஆண்டில் சங்கத்தில் முகாமையாளராக இருந்தவரால் பெறப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி பாடப் புத்தகங்கள் மீட்கப்பட்டது தொடர்பான செய்தி வலம்புரி பத்திரிகையில் வெளிவந்தது.

இதனையடுத்து இது தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இதற்கமையவே இப்புத்தகங்கள் முன்னாள் முகாமையாளரால் பெறப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தற்போதைய நிர்வாகத்தினால் முறையிடப்பட்டுள்ள தாகவும் இப் புத்தகங்கள் மீட்பு தொடர்பில் தற்போதைய நிர்வாகத்திற்கு எந்தவித தொடர்பும் இல்லை எனவும் இம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–5–60)

---

# வடக்கு விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 99.66 வீதம் செலவழிக்கப்பட்டுள்ளது

## விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

வடமாகாண விவசாய அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களுக்கு கடந்த 2015ஆம் ஆண்டின் பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் 99.66 வீதம் செலவழிக்கப்பட்டிருப்பதாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டிருந்த அந்த ஊடக அறிக்கையில்,

வடக்கு மாகாணசபையின் 2015ஆம் ஆண்டுக்குரிய பாதீட்டில், விவசாய அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களுக்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியாக 193 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிதி விவசாயத் திணைக்களத்துக்கு 90.84 மில்லியன் ரூபா, நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு 52.36 மில்லியன் ரூபா, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கு 43.8 மில்லியன் ரூபா, கூட்டுறவுத் திணைக்களத்துக்கு 6 மில்லியன் ரூபா என்ற வகையில் பிரித்து வழங்கப்பட்டிருந்தது. 2015 டிசெம்பர் 31ஆம் திகதிக்குரிய நிதிநிலை அறிக்கையின்படி ஒதுககப்பட்ட நிதியில் 192.34 மில்லியன் ரூபா, அதாவது 99.66 வீதம் செலவழிக்கப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக விவசாய அமைச்சுக்கும், அமைச்சுக்குபட்ட திணைகளங்களுக்கெனவும் 14.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்நிதி விவசாய அமைச்சுக்கு 8 மில்லியன் ரூபா, விவசாயத் திணைக்களத்துக்கு 2.5 மில்லியன் ரூபா, நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஆகியவற்றுக்குத் தலா 1 மில்லியன் ரூபா என்ற வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2015 டிசெம்பர் 31ஆம் திகதிய நிதிநிலை அறிக்கையின்படி இந்நிதி முழுமையாக, அதாவது 100 வீதம் செலவழிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சுக்கும் அதன் கீழ் உள்ள திணைக்களங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இந்நிதியில் எதுவும் அவசரம் அவசரமாகச் செலவழித்து முடிக்கப்படவில்லை. ஆண்டுத் தொடக்கத்தில் திட்டமிட்டவாறு கருத்திட்டங்கள் யாவும் எவ்வித மாற்றமும் இன்றி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையில் பூரணமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபைக்குரிய நடப்பு 2016ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் விவசாய அமைச்சுக்கும், அதற்குரிய திணைக்களங்களுக்கெனவும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியாக 410 மில்லியன் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக 26.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டைப் போன்றே, இந்நிதியிலும் எதுவும் வீண் போகாத வகையில் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவும் உரிய காலத்தில் வினைத்திறன் மிக்கதாகவும் விளைபயன் மிக்கதாகவும் நிறைவேற்றப்படும் என்று உறுதி கூறுகிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ–7)



சங்கானை சுழிபுரம் பகுதியில் நவீன மீன் சந்தை வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக ஆலய வழிபாட்டை தொடர்ந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து தேவாரம் பாடப்பட்டு புதிய கட்டடம் மாகாண சபை உறுப்பினரால் திரைநீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்:–உ.சாளின்)

# ஒரு இலட்சத்து 22 ஆயிரம் ஈழ அகதிகள் இந்தியாவில்

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினை காரணமாக அண்டை நாடான இந்தியாவில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 553 இலங்கை அகதிகள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் இதனை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் சுமார் 50 ஆயிரம் பேர் உள்ள நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து கடந்த வருடம் முதல் கால் பகுதியில் 231 பேர் தாயகம் திரும்பினர்.

இந்தநிலையில் இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப ஏதுவாக இந்திய அரசாங்கம் உரிய ஊக்குவிப்புகளை வழங்கவேண்டும் என்று ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் தலைவர் எஸ்.சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் தற்போது சுமார் 700 ஏக்கர் நிலங்கள் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# அத்தியாவசிய உணவு பொருட்களை நிர்ணய விலையில் விற்க முடியாது

வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டதுபோல் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றை நிர்ணய விலையில் விற்பனை செய்ய முடியாது. எனவே, வரவு - செலவுத் திட்டத்தினூடாக விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலையினை உடனடியாக நீக்க வேண்டும் என உணவுப்பொருட்கள் இறக்குமதியாளர் மற்றும் மொத்த வியாபாரிகள் சங்கம் என்பன நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் தெரிவித்துள்ளன.

உலக வர்த்தக சந்தையில் குறித்த உணவுப் பொருட்களின் விலை அதிகளவில் உயர்ந்திருப்பதுடன், வரவு - செலவுத்திட்டத்தில் குறித்த உணவுப் பொருட்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படவில்லை.

என்வே, அந்த உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து சந்தைக்கு விடும் போது நிர்ணய விலையை விட அதிகளவான செலவு ஏற்படுவதாகவும் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனி, பருப்பு, நெத்தலி, உழுந்து, கடலை ஆகிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும்போது நிர்ணய விலையை விட அதிகளவான செலவை இறக்குமதியாளர்கள் எதிர்கொள்கின்றனர்.

87 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வெள்ளை சீனி ஒரு கிலோ கிராமுக்கு 93 ரூபாவும், 169 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும்.

பருப்பு ஒரு கிலோ கிராமுக்கு 175 - 180 ரூபா வரையிலும், 300 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் உழுந்து ஒரு கிலோ கிராமுக்கு 450 ரூபாவும், 410 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நெத்தலி ஒரு கிலோ கிராமுக்கு 500 ரூபாவும் செலவாவதாகவும் குறித்த சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைக்கப்பட்டது.

அத்துடன், கடந்த நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலும் உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:26 செவ் 8 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:O/L/
சொந்ததொழில்
தொ.இ: B/5365

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 14
தகைமை/தொழில்:வங்கியாளர்
லண்டன் PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5366

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 25
தகைமை/தொழில்:பிரான்ஸ்
தொ.இ: B/5367

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 34 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:CBF/
வங்கியாளர்
தொ.இ: B/5369

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22செவ் 7 இல்
உயரம்: 164cm
தகைமை தொழில்: பல்கலைக்கழக
மாணவி
தொ.இ: G/3949

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 32
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HNDA/
அரசதொழில்
தொ.இ: G/3950

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 39 செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSC/
பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/3957

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:மருந்தாளர்
தொ.இ: G/3959

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


## இராசி பலன்

04.01.2016
(மார்கழி 19, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு,
தசமி பின்னிரவு 4.45 மணிவரை
சுவாதி பின்னிரவு 5.07 மணிவரை
சுபநேரம் 12.31-2.01 மணிவரை
இராகுகாலம் 8.01-9.31 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி | | |
| சூரி புத | சனி சுக் | செவ் சந் | குரு ராகு |

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் சுமை குறையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, பெருமைகள் வந்துசேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்:** தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பகைவர்கள் விலகுவர், நண்பர்களின் தொடர்புகள் நன்மைதரும்.

**கன்னி:** உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் நன்மைதரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர்களின் வருகையுண்டு.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், பொதுவாழ்வில் புகழ்கூடும், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** புதிய பொருட்கள் வாங்கப் போட்ட திட்டங்கள் கைகூடும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், போசனசுகமுண்டு.

**கும்பம்:** தொழிலில் அதிகாரிகளின் ஆதரவை பெறுவீர்கள், தந்தைவழி உறவினர்களால் நன்மையுண்டு, பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்:** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலையேற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 5,612 பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

## மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவலின்படி

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 612 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக மாவட்ட செயலகத்தின் புள்ளி விபர தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

2009 ஆம் ஆண்டின் பின்னரான மீள் குடியேற்றத்தின் போது 41 ஆயிரத்து 322 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள அதேவேளை. இவற்றில் 5 ஆயிரத்து 612 குடும்பங்கள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் ஆயிரத்து 577 குடும்பங்களும். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆயிரத்து 852 குடும்பங்களும். ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 919 குடும்பங்களும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 432 குடும்பங்களும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 498 குடும்பங்களும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவின் கீழ் 334 குடும்பங்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து 612 குடும்பங்கள வாழ்ந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 2 ஆயிரத்து 151 பேர் மாற்றுத்திறனாளிகளாக காணப்படுகின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு போரினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்த மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்னரும் அடிப்படை வாழ்வாதார வசதிகளின்றி அல்லற்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




## காணி விடுவிப்பு தொடர்பில் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

முள்ளிக்குளம் பிரதேச மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்று மன்னார் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்தவருடம் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி குறித்த மகஜர் மன்னார் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக தேசிய மீனவர் இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சோபி தெரிவித்தார்.

குறித்த மகஜரின் பிரதிகள் மன்னார் ஆயர். பிரதமர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்தோடு. கடந்த ஒக்டோபர் மாதம் முள்ளிக்குள மக்களிடம் கடற்படை தளபதி இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியதாகவும். இதில் தாம 500 ஏக்கர் காணி தருவதாகவும் குறித்த காணியை ஏற்றுக கொள்ளுமாறு தெரிவித்ததாகவும் இவர் குறிப்பிடடார.

இதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததுடன். தமகக்கு தம்முடைய காணி விடுவிக்கப்பட வேணடும் எனவும். தமது பிரதேசத்தில் இருந்து கடற்படையினர் முற்றாக வெளியேற வேண்டும எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

காணிகள் விடுவிக்கப்படும் வரை தம்முடைய போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும எனவும் பிரதேச மக்கள் எச்சரிக்கை விடுத்ததாகவும் சுட்டிக் காட்டினார். கட்டளைத்தளபதி பொதுமக்களிடம் தருவதாக தெரிவித்த காணிகள் மக்கள் குடியிருக்க முடியாத காடு மற்றும் குளம் சார்ந்த பிரதேசம் அது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, பிரதேச மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில் கடற்படை கட்டளைத் தளபதியின் கருத்து அமைவதாகவும் அவர் தெரிவித்தார். (2-281)

## ஜெயந்தி நகர்-திருநகர் ஊடான வீதி திருத்த வேலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி ஜெயந்தி நகர், திருநகர் ஊடான வீதி திருத்த வேலை தற்போது நடைபெறறு வருகிறது. இவ்வீதிக்கு அருகாமைகளில் நீர் வடிந்தோடும் வகையில் வடிகான்கள் உரிய முறையில் அமைக்கப்படவில்லை. இதனால் வீதி விரைவில் சேதமடையும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாக இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறிப்பாக திருநகர், ஜெயந்திநகர் ஆகிய பகுதிகளில் இத்தகைய நிலை காணப்படுகிறது. அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பன இயங்கி வருகின்றன. இருந்த போதிலும் எவரும் இத்தகைய நிலையைக் கவனத்தில் எடுக்கவில்லையென பொதுமக்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. இதேவேளை இந்த வீதிக்கு அருகாமையில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தமது வேலிக்கழிவுகள் மற்றும் தடிகள் போன்றவற்றை இந்த நீர்வடிகான்களிலேயே போட்டு வைக்கின்றனர். அவர்கள் மீது எவரும் சட்டநடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. பலகால இடைவெளிக்குப் பின்பு பல மில்லியன் வரையிலான செலவுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய வேலைத திட்டங்கள் நீடித்த காலத்திற்கு நிலைத்து மக்களுக்கு பயன்தரத்தக்கதாக இருப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பொது அமைப்புக்கள் நடவடிககை எடுக்கவேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடப்படுகிறது. (2-254)

## முதியோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவில் காலதாமதம்

### பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

வவுனியா ஓமந்தைப் பகுதியில் வசிக்கின்ற எழுபது வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுத் தொகை உரிய நேரத்திற்கு வழங்கப்படுவதில்லையென பாதிக்கப்பட்ட முதியோர் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், வவுனியா ஓமந்தை தபாலகத்தில் ஒவ்வொரு மாதமும் 4 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிக்குள் இப்பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு கிடைப்பதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்

கடந்தாண்டு நவம்பர் மாதக் கொடுப்பனவு மாத இறுதியில் 23 ஆம் திகதியே வழங்கப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதக் கொடுப்பனவு இதுவரை முதியோர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர். பல்வேறு இடத்திலிருந்து இயலாத் தன்மையுடன் வரும்முதியோர் இதனால்பாதிக்கப்படுகின்றனர்.

சிலவேளை தபாலக உத்தியோகத்தர் தமது பணத்தில் முச்சக்கர வண்டி பிடித்து சில முதியோரை வீட்டுக்கு அனுப்பியதுமுண்டு.

இருப்பினும் இக்கொடுப்பனவானது வவுனியா வடக்குப் பிரதேசத்திலும் வவுனியா நகர பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது, இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதியோருக்கான மாதாந்த உதவிப்பணத்தை உரிய காலத்தில் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட முதியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-303)

## தழிழ் பேசும் பெண் பொலிஸாரை நியமிக்குக

### முல்லை.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் பொதுமக்கள் கோரிக்கை

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு தமிழ் பேசும் பெண் பொலிஸாரை நியமிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முள்ளியவளை பொலிஸ் நிலையமானது 18 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும்.நாளாந்தம் தமது தேவைகளைப்பூர்த்தி செய்ய பெருமளவான பொதுமக்கள் இங்கு வருகை தருகின்றனர்.

இங்கு சிறுகுற்றப்பிரிவு, சிறுவர், பெண்கள் பிரிவு, போக்குவரத்து பிரிவு, நிர்வாகப் பிரிவு, சிவில் பாதுகாப்புப் பிரிவு எனும் பல பிரிவுகள் உள்ள போதிலும் இரண்டு பெண் பொலிஸாரே கடமையாற்றுகின்றனர்.

ஆனாலும் அவர்களுக்கு தமிழ் தெரியாத காரணத்தால் முறைப்பாடுகளை பதிவு செய்ய வரும் பெண்கள், சிறுவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகளை சிறந்த முறையில் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தமிழ் பேசும் பெண் பொலிஸாரை நியமிக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (2-310)

## சுருக்குவலை மீன்பிடியை தடுக்குமாறு மன்னார் மீனவர்கள் கோருகின்றனர்

மன்னார் மாவட்டத்தில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி சிங்கள மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும் சவுத்பார், சிலாவத்துறை மற்றும் மன்னார் பழைய பாலம் ஆகிய பகுதிகளில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான தொடரச்சியான அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் மீனவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தாம் சுருக்கு வலையை பயன்படுத்தினால் எதிர்ப்பு ஏற்படுவதாகவும் சிங்கள மீனவர்கள் சுருக்கு வலையை பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை சுருக்கு வலையை பயன்படுத்தும் தமிழ் மீனவர்களை கைது செய்யும் கடற் படையினர் உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்து தண்டனை கொடுத்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆதலால் இவ்வாறான செயற்பாடுகளுக்கு தீர்வை பெற்றுத்தரவேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-281)

## கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வாகனங்கள் மீது மோதி விபத்து

(குருமன்காடு)

வவுனியா இரண்டாம் குறுக்கு தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீது அவ் வீதியால் பின்புறமாக வந்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரிய வருவதாவது.

புது வருடத்தை முன்னிட்டு வவுனியா நகரமே களைகட்டியிருந்த வேளையில் இரண்டாம் குறுக்குத் தெருவில் வழமைபோல் வெளி மாவட்டத்திற்கு செல்லும் தனியார் பேருந்துகள், ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அவ்வேளையில் நூறு மீற்றருக்கு மேல் பின்புறமாக பிறேக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பேருந்து ஒன்று ஏனைய வாகனங்கள் மீது மோதியதில் இவ்விபத்து நிகழ்ந்தது.

இச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவ்வித உயிரிழப்புக்களும் இடம்பெறவில்லை. இருப்பினும் இரண்டு வான்கள். இரண்டு முச்சக்கர வண்டிகள், அலுவலகங்களுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் வண்டிகள் என்பன சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர். (2-250)



வவுனியா ஈச்சங்குளம் தவசியாகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கு புத்தகப்பைகள், பாதணிகள் என்பன இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# க.பொ.த (உ/த) பரீட்சை-2015

## மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றோர் பெயர் விபரம்

### சிறந்ததொரு கணக்காளராக வேண்டும்

**வர்த்தக பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடம் பெற்ற கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவி தெரிவிப்பு**



எதிர்காலத்தில் சிறந்ததொரு கணக்காளராக வந்து சமூகத்திற்கு சேவையாற்றுவதே எனது குறிக்கோளாகும் என வர்த்தக பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலய மாணவி ஸ்ரீநந்தகுமார் சிந்துஜா தெரிவித்துள்ளார். எனவே கல்வியை தரம் -1 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை கிளி.உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வந்தேன். இந்தபெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள என்னை தயாப்படுத்திய அதிபர் இ.மீனலோஜினிக்கும் ஆசிரியர்களுக்கும் என்னை மேலும ஊக்கப்டுத்திய கல்வி நிலையத்திற்கும் என்னை பயிற்சியளித்த உயர் நிலையை அடைய வழி செய்த ஆசிரியர்களுக்கும் என பெற்றோர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன். இதிலிருந்து படித்த பாடங்களை மீண்டும் மீண்டும் படிப்பதன் மூலமும் தெரிந்த வினாக்களாயினும் மேலும் மேலும் பயிற்சி செய்வதன் மூலமும் பல்வேறு இடங்களில் இருந்தும் பரீட்சை வினாத்தாள்களை பெற்றுக் கொண்டு நன்றியை தெரிவிக்கிறேன்.

இதிலிருந்து படித்த பாடங்களை மீண்டும் மீண்டும் படிப்பதன்மூலமும் தெரிந்த வினாக்களாயினும் மேலும் மேலும பயிற்சி செய்ததன் மூலமும் பல்வேறு இடங்களிலிருந்தும் பரீட்சை வினாத்தாள்களை பெற்றுக்கொண்டு பயிற்சி செய்ததன் மூலமும் என்னால் இப்பெறுபேற்றை பெற முடிந்தது.

கடின முயற்சி வெற்றி தரும் எனபதுடன் எதிர்காலத்தில் ஒரு சிறந்த கணக்காளராக வந்து சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டுமென்பதே எனது குறிக்கோள் என அவர் மேலும் தெரிவித்தார். (2-309)

### எனது குறிக்கோளிலிருந்து விலகாமையால் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை அடைந்தேன்

**பொறியியல் தொழில்நுட்பத்தில் முல்லைத்தீவில் முதலிடம் பெற்ற மாணவன் தெரிவிப்பு**

எதிர்காலத்தில் சிவில் பொறியியலாளராக வந்து நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது குறிக்கோள் என பொறியியல் தொழில்நுட்பத்தில் மாவட்ட மட்டடத்தில் முதலிடம் பெற்ற மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவன் தேசிங்கராசா தேசிந்தன் தெரிவித்துள்ளார். எனது தந்தையார் சாதாரண சைக்கிள் திருத்தும் தொழிலாளி தாயார் வீட்டுப்பணி செய்பவர்.

எனது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு மு/முல்லைத்தீவு மகா வித்தியானத்தில் க.பொ.த சாதாரண தரம் பயின்ற வேளை எனது உயர் கல்விக்காக மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வீதம் இன்று வரை உதவித்தொகை வழங்கிய ஆசிரியருக்கு நான் நன்றி கூறுகின்றேன். ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருக்கு எனது கல்வியை ஊக்குவித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன் என அவர் மேலும் கூறினார். (2-292)

### சத்திரசிகிச்சை நிபுணராக வந்து மக்களுக்கு சேவையாற்றுவதே நோக்கம்

**உயிரியல் பிரிவில் கிளிநொச்சியில் முதலிடம் பெற்ற மாணவன் தெரிவிப்பு**



கல்வித்துறையில் போட்டியும் முயற்சியும் இருந்தால் மட்டுமே வெற்றிபெற முடியும் என 2015 ஆம்ஆண்டு கா.பொ.த உயர்தரப்பரீட்சை உயிரியல் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் மதுர நாயகம் அஜித் ஜெரோம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் கல்வித் துறையில் எந்தவகையில் கஸ்டம் இருந்தாலும் சலிப்படையாமல் எமது இலக்கை கருத்தில் கொண்டு நாம் தெரிவு செய்த துறையை கற்க வேண்டும்.

எனது பெற்றோரும் ஆசிரியர்களும் எனக்கு மிகவும் உதவியாக இருந்தனர். எனது குறிக்கோளை அடைய பெரிதும் உதவி செய்தனர். ஆவர்களிடம் இருந்து எனக்கு தேவையான உதவிகளை எந்த நேரத்திலும் கேட்டு பெற்றுக்கொண்டேன்.

எதிர்காலத்தில் சத்திரசிகிச்சை நிபுணராக வந்து மக்களுக்கு எனது சேவையை செய்ய வேண்டும் என்பது எனது இலட்சியம் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)


### கிளிநொச்சி



**கலைப்பிரிவு**
மாசில்லாமணி அருள்ஸ்ரீபன் (3ஏ)
(கிளி/பளை மத்திய கல்லூரி)



**வர்த்தகபிரிவு**
ஸ்ரீநந்தகுமார் சிந்துஜா (3ஏ)
(கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)



**கணித பிரிவு**
கோபாலராஜா விதுர்சன் (2ஏபி) (கிளி/பளை மத்திய கல்லூரி)



**உயிரியல் விஞ்ஞான தொழில்நுட்பம்**
சந்திரஸ்ரீ விதுலா (ஏபிசி)
(கிளி/மத்திய மகா வித்தியாலயம்)



**உயிரியல் பிரிவு**
மதுரநாயகம் அஜித் ஜெரோம் (2ஏபி)
(கிளி/இந்துக் கல்லூரி)



**பொருளியல் தொழில்நுட்ப பிரிவு**
கௌடன்சியஸ் மனோகரன் கமலேசன் (ஏபிசி)
(கிளி/மத்தியமகாவித்தியாலயம்)

### மனிதநேயமுள்ள வைத்தியராகி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்

**உயிரியல் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி தெரிவிப்பு**



மனித நேயமுள்ள வைத்தியராகி மக்களுக்கு சிறந்த சேவையாற்றுவதே எனது குறிக்கோள் என க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி ஸ்ரீரங்கன் விதுர்சனா தெரிவித்துள்ளார்.

எனதுஅண்ணா ஒரு மருத்துவபீட 3 ஆம் வருட மாணவன் அவரைப் போன்றே நானும் ஒரு வைத்தியராக வந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று எனது பெற்றோர் ஆசைப்பட்டனர். அவர்களது ஆசை வீண் போகக்கூடாது என்பதற்காக விடாமுயற்சியுடன்படித்து வந்தேன் அதனடிப்படையில் வெற்றியடைந்துள்ளேன்

ஆசிரியர்கள் சிறந்த அக்கறையோடு கற்பித்தனர் நண்பர்களும் பல வழிகளிலும் உதவினார்கள். இவற்றுக்கு மேலாக எனது பெற்றோருக்கும் நன்றி கூறுகின்றேன் நான் ஒரு மனிதநேயமுள்ள வைத்தியராகி எனது மக்களுக்கு சேவையாற்றுவேன் என மேலும் தெரிவித்தார். (2-281)

### முல்லைத்தீவு




**உயிரியல் பிரிவு**
ஸ்ரீரஞ்சன் விதுர்சனா (2ஏபி)
(மு/வித்தியானந்தா தேசியக் கல்லூரி)



**கணித பிரிவு**
விஸ்வலிங்கம் விஜிந்தன் (ஏ2பி) (மு/வித்தியானந்தா தேசிய கல்லூரி)



**கலைப்பிரிவு**
விஜயகுமார் விதுர்சிகா(3ஏ)
(மு/வித்தியானந்தா தேசிய கல்லூரி)



**பொறியியல் தொழில்நுட்பம்**
தேசிங்கராஜா தேசிந்தன் (பிசிஎஸ்)
(மு/வித்தியானந்தா தேசிய கல்லூரி)

**உயிரியல் தொழில்நுட்பம்**
சிவம் சுரைஜிதா (பி2சி)
(மு/வித்தியானந்தா தேசிய கல்லூரி)

### மு/ குமுழமுனை மகா வித்தியாலயம்

**கலைப்பிரிவு**
இ.திவ்வியா-2ஏசி
கி.தனுஷா-ஏபிசி
**வணிகப்பிரிவு**
யோ.சஜிந்தவி-3ஏ (2 -310)

### மு/வித்தியானந்தா தேசிய கல்லூரி

**கணிதப்பிரிவு**
வி.விஜிந்தன்-ஏ2பி
க.பூர்வீகன்-3பி
**உயிரியல் பிரிவு**
ஸ்ரீ.விதுர்சனா-2ஏபி
இ.ரினோஜா-ஏ2பி
**பொறியியல் தொழில்நுட்பம்**
தே.தேசிந்தன்-பி.சி.எஸ்
ஸ்ரீ.வேணிகா
**உயிரியல் தொழில்நுட்பம்**
சி.சுரைஜிதா-பி2சி
கி.சஜித்
கி.சஜிந்தன்
**கலைப்பிரிவு**
வி.விதுர்சிகா-3ஏ
**வர்த்தகப்பிரிவு**
கு.கஸ்தூரன் (2-301)

### கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்


**கலைப்பிரிவு**

எ.ஜெனோஜின்ஸ்-3எஸ்,நீ.பகலவன்- 2சிஎஸ், சி.சிவ அருள்-2சிஎஸ், அ.சுவேதன்- 2சிஎஸ்,ப.துஸ்யந்தன்-சி2எஸ்,சீ.சுரேந்திரன்-பி2சி,ச.நிமல்ராஜ்-3எஸ், ஸ்ரீ.ஷினோயிதா-3சி, அ.அஜந்தா-3எஸ், பா.டிலக்ஷனா-பிசிஎஸ், ர.ஹிருஷனா-பிசிஎஸ், அ.கிருசாந்தி-2பிசி, அ.கிருத்திகா-சி2எஸ், வை. பிரியதர்சினி-சி2எஸ், டா.ரோகினி-3எஸ்,கு.சரணிகா-2ஏபி, ப.ஸ்ரீலோஜினி-2பிசி, செ.சுதர்சினி-2சிஎஸ், க.திலக்சனா- 3சி,கு.துகிதா-2சிஎஸ்,ந.தியாளினி-2பிசி,த.ஜனனி-2சிஎஸ், நி.குகாயினி-ஏ2பி,சி.கஜந்தா- சி2எஸ், இ.நித்திய வதனி-2பிசி,மே.டிசாந்தினி- பிசிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**

ஸ்ரீ.சிந்துஜா-3ஏ, ஸ்ரீ.பிரார்த்தனா-ஏ2பி (2-309)

# கம்பவாரிதிக்கு புருஷோத்தமனின் பதில்



பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

வலம்புரியில் தங்களுக்கு எழுதப்பட்ட அன்பு மடலுக்கு தாங்கள் எழுதிய பதில் மடல் கண்டோம்.

கௌரவர் சேனையில் பீஷ்மர் நின்று போராடியதற்காக பீஷ்மர் மீது எவரும் குற்றம் கண்டிட முடியாது என்பது நம் தாழ்மையான கருத்து. அந்த வகையில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் மீதான மதிப்பும் மரியாதையும் எம்மில் ஒரு துளியேனும் குறைந்தில.

எங்கள் தமிழ் இளைஞர்களை வழிப்படுத்துவது என்றால் அது கம்பவாரிதியின் பேராற்றல் மிகுந்த உரையால் மட்டுமே முடியும் என்பது உறுதியான முடிவு.

கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் உலகம் முழுவதும் சென்று ஆற்றிவரும் உரையால் எங்கள் தமிழ்மண் மார்தட்டி நிற்கிறது என்ற பெருமை தங்களால் தரப்பட்டது. தாங்கள் ஆற்றுகின்ற உரையை இமைத்தல் மறந்து கேட்பவன் நான்.

கம்பவாரிதி ஜெயராஜ் பேசுகிறாரா அல்லது அவருக்குள் இருக்கக்கூடிய பேரருட்சக்தி பேசுகிறதா? என்றெல்லாம் நாம் நினைப்பதுண்டு.

யாழ்ப்பாண மண்ணில் இருக்கவேண்டிய எங்கள் போதி தர்மரை கொழும்பு மண் தனதாக்கிக் கொண்டது. நாங்கள் எங்களுடன் அவரை வைத்திருக்கத்தவறியது எங்கள் தவக்குறை என்றுணர்ந்தேன்.

1995 களுக்கு முன்னர் திருநெல்வேலி சிவன் ஆலயத்திலும் யாழ்ப்பா ணம் கலட்டி அம்மன் கோயிலிலும் உங்கள் இராமாயணத் தொடர் உரை இடம்பெற்றது.

இரவு 7மணிக்கு ஆரம்பமாகும் அந்த உரையைக் கேட்பதற்கு இளைஞர்கள் சாரிசாரியாக ஓடிவருவது கண்டு ஆனந்தமுற்றேன். அது ஒரு காலம் என்று சொல்வதைத் தவிர இப்போது எதுவுமில்லை.

இன்று எங்கள் நிலைமை வேறு. தமிழ்மக்களின் துன்பங்களும் இழப்புகளும் அரசியல்வாதிகளின் வியாபாரப் பொருளாகின.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த பெரும் போரில் எங்கள் அருமந்த உறவுகள் துடிதுடித்துப் பலியாகிப்போன அந்தப் பாவத்தைப் பயன்படுத்தி பதவி பெறுவது என்ற நிலைமை இந்த மண்ணில் உருவாகிய பின்னர் தர்மத்தை எடுத்துக்கூறுவது என்பது காலாவதியான கருப்பொருள் என்றே கருதுகிறேன்.

இருந்தும் எங்கள் பதில் மடல்கள் மாறி மாறி நீண்டு செல்வதும் ஏற்புடையதன்று. என்னசெய்வது நடுவர் இல்லாத பட்டிமண்டபம், நீதிபதி இல்லாத சட்டத்தரணிகளின் வாதங்கள் முடிவிலியாகவே இருக்கும் என்ற உண்மையையும் உணராதவன் அல்ல நான்.

அதிலும் நடுவராக இருக்கக்கூடிய தகைமையுடையவர் ஒரு தரப்பில் நின்று விட்டால் நிலைமை எவ்வளவு ஆபத்தானது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் உணருகிறேன். எது எப்படியாயினும் ஒரு பக்கத்தில் நின்று தமிழ்மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சி என்றும் மாற்று அரசியல் தலைமை என்றும் கருத்துரைக்கும் தாங்களே நடுவராகவும் இருக்கவேண்டும். உங்கள் தீர்ப்பு எதுவாக இருப்பினும் அதைத் தலை சாய்த்து ஏற்பேன் என்பதை சத்தியப் படுத்துகிறேன்.

எனினும் தமிழ்மக்கள் பேரவையின் செயற்பாடு எங்ஙனம் அமைகிறது என்று ஒரு கணம் பொறுத்திருந்து பார்த்து நீங்கள் தீர்ப்புரைப்பதாக இருந்தால் அது கண்டு மகிழ்வுறுவேன் என்பதையும் இவ்விடத்தில் கூறிக்கொள்கிறேன்.

அன்புமிகு கம்பவாரிதி அவர்களே! வலம்புரி பத்திரிகை என்றும் நடுவுநிலையோடு செயற்படும் என்பதைத் தங்களுக்கு முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்து கோடாமை சான்றோர்க்கு அணி என்றார் வள்ளுவர். எனவே நடுவுநிலை தவறினால் அதற்கான தண்டனை என்ன என்பதையும் அறிந்துள்ளேன். தமிழ்மக்கள் பேரவை தொடர்பில் தங்கள் சந்தேகங்கள் மற்றும் வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மீது நீங்கள் முன்னெடுத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் வலம்புரி தனது நாளிதழில் வெளிப்படுத்திக்கொண்டது. அதேபோல் யாம் எழுதிய தங்களுக்கான பதிலையும் தங்கள் இணையத்தளத்தில் இணைத்துக் கொண்டீர்கள். அதற்காக நன்றி கூறிக் கொள்கிறோம்.

எனினும் சில ஊடகங்கள் தமிழ்மக்கள் பேரவையின் அனைத்துச் செயற்பாடுகளையும் வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்து விட்டு பேரவைக்கு எதிரான புனைவுகளை மட்டும் பரப்புரை செய்கின்றன. இத்தகைய பக்கச் சார்புடையவர்கள் தமிழ் மக்களின் நலன்சார்ந்து பேசுவதாகவும் காட்டிக் கொள்கின்றனர்.

இவ்விடத்தில் ஒன்றை மட்டும் நாம் கூறிக்கொள்ள முடியும். ஊடக தர்மம் என்பது சகல தரப்பும் தமது பக்க நியாயங்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதாகும்.

இந்தத் தர்மத்தைக் கடைப்பிடிக்கத் தெரியாதவர்கள் தமிழ்மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கிறோம் என்று கூறுவதில் ஏதேனும் உண்மை இருக்க முடியுமா என்ன?

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை முதன்மை வேட்பாளராக அழைத்து வந்தவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் என்பது மறுக்க முடியாத உண்மை. அதே நேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே தேர்தலில் போட்டியிட வருவேன் என்று பதவி ஆசை ஏதுமற்ற நீதியரசர் கூறியிருந்தார்.

இதுபற்றி முன்னைய பதிலிலும் தெரிவித்திருந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களை அழைத்து வந்த போது அதனை முதலில் ஆதரித்தது வலம்புரி என்பதையும் இவ்விடத்தில் கூறிக் கொள்கின்றோம். அதுமட்டுமல்ல ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் ஆதரித்த போது அதற்கு ஆதரவாக வலம்புரி குரல் கொடுத்திருந்தது. ஆக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நீதியரசர் விக் னேஸ்வரனையும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவையும் கூட்டமைப்பு ஆதரித்த போது அதற்கு ஆதரவாக வலம்புரி குரல் கொடுத் திருந்தது எனும் போது கூட்டமைப்பின் நல்ல செயற்பாடுகளை வலம்புரி ஆதரிக்கத் தவறவில்லை என்பது உறுதியாகின்றது.

எனினும் சில ஊடகங்கள் யானையைப் பார்த்த குருடர்கள் போல் எம்மைப் பார்க்கின்றார்கள் என்ற செய்தியை உங்களுக் கான பதிலாக அன்றி, தாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய தகவல் என்ற வகையில் இவ்விடத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

தயவு செய்து நாம் தரும் பதில் எல்லை தாண்டுவதாக நினைத்து விடாதீர்கள். அவ்வாறு நீங்கள் நினைக்க மாட்டீர்கள் என்றும் நம்புகிறோம்.

ஏனெனில் தமிழ் மக்கள் பேரவை உயிர்ப்படைவதற்கு காரணமாக இருந்தவை என்ன என்பதை நீங்களே பட்டியல் படுத்தி இருக்கிறீர்கள். ஆகையால் தாங்கள் அறியாத பல விடயங்களும் பேசுபடு பொருளாக இருக்கும் பேரவையுடன் தொடர்புபட்டவையாக இருப்பதால், அவை பற்றியும் உங்களுக் கான பதிலில் இணைத்துக் கொள்வது ஐயம் தெளிவு படுத்தும் என நம்பி இப்பகு தியில் குறிப்பிட விளைகின் றோம்.

(நாளை தொடரும்)

**புருஷோத்தமன்**

# விழிப்புலன் இல்லாதோர் வாழ்வில் விளக்கொளி ஏற்றிய பிரெயில் எழுத்து முறை



இன்று பிரெயில் தினம்

முன்பொரு காலத்தில் பார்வை இழந்தவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டனர். அந்தக் காலம் போய்விட்டது. கண் பார்வை இழந்தவர்கள் பிரெயில் முறையின் மூலம் இப்போது எல்லோரையும் போல படிக்க முடியும். பிரெயில் முறை பற்றி எல்லோருமே கேள்விப் பட்டிருப்போம். இதைக் கண்டுபிடித்தவர்பிரான்ஸ்நாட்டை சேர்ந்த லூயிஸ் பிரெய்ல் ஆவார். லூயிஸ் பிரெய்ல் நான்கு வயது சிறுவனாக இருந்த போது, செருப்பு தைக்கும் தனது தந்தையின் பெரிய ஊசியை வைத்து விளையாடிக் கொண்டிருந்த போது அந்த ஊசி கண்ணை குத்திவிட்டது. அவர் ஒரு கண்பார்வையை இழந்து விட்டார். அந்தக் கண்ணில் ஏற்பட்ட தொற்று சில மாதங்கள் கழித்து அடுத்த கண்ணிற்கு பரவி முழுப் பார்வையையும் இழந்து விட்டார். அவருக்கு பார்வை போய் விட்டாலும், படிக்கவேண்டும் என்ற ஆவல் அவரிடம் நிறைய இருந்தது. கண்பார்வை இழந்தவர்கள் படிக்க ஏதாவதொரு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்று யோசித்தார்.

ஒருநாள் போர்வீரர் ஒருவரிடம் பேசியபோது, ஒரு தகவல் கிடைத்தது. போரின் போது தகவல்களை பரிமாற்றம் செய்யும் முறை பற்றி அவர் விளக்கினார்.

எனவே இருட்டில் தொட்டுப் பார்த்து படித்தறியும் முறையில் குறியீட்டு எழுத்துகளை அனுப்புவோம்என்று அந்த போர்வீரர் கூறியதை கேட்ட லூயிஸ் பிரெய்ல் யோசிக்க லானார். இவ்வாறு எழுதும் போது எதிர்த் திசையிலிருந்தே எழுத்துக்கள் குத்தப்படுகின்றன. இந்த அமைப்பில் புள்ளிகளை வெவ்வேறு விதமாக துளையிடுவதன் மூலம் ஆங்கில எழுத்துகளையும் அடிக்கடி பயன்படுத்தடும் வார்த்தைகளையும் உண்டாக்கினார். இப்படித்தான் இன்றும் விழிப்புலனற்றோர் முனைவர் பட்டம் வரையில படிக்க உதவும் முறையை 1929 இல் விழிப்புலனற்றோருக்கான எழுத்து முறையொன்றை லூயிஸ் பிரெய்ல் கண்டுபிடித்தார். இதுவே இன்று உலகெங்கும் பயன்படுத்தப்படும் பிரெய்ல் எழுத்து முறையாகும்

பிரெய்ல் முறையை உலகிற்கு அளித்து விழிப்புலனற்றோர் வாழ்வில் ஒளியேற்றிய லூயிஸ் பிரெய்ல் 1809 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி பிறந்தார்.

இத்தினத்தையே நாங்கள் லூயிஸ் பிரெய்ல் தினம் என்று கொண்டாடுகிறோம. 1828 ஆம் ஆண்டு குருடர் கல்விக்கான தேசிய நிறுவனத்தில் விழிப்புலனற்றோருக்கான ஆசிரியராக பணிபுரிய ஆரம்பித்தார். இவர் 1852 ஆம் ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி காலமானார்.

உலகமே பாராட்டிய இந்த முறைக்கு அவரது பெயரையே வைத்து விட்டார்கள். உள்ளூர் தேவாலயத்தில் கீ-போர்டும், செல்லோ இசைக்கருவியும் வாசித்து வந்த லூயிஸ் பிரெய்ல் இசையைக் கூட பிரெய்ல் முறையில் எழுதும் முறையை கண்டு பிடித்தார். பிற் காலத்தில் இவர் சிறந்த இசைக் கலைஞராக புகழ் பெற்றார். தனியொருவராக லூயிஸ பிரெய்ல் செய்த இந்த சாதனைக்கு நாம் எல்லோருமே அவருக்கு கடமைப்பட்டுள்ளோம்.

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி)
யாழ்ப்பாணம்

# மூன்றரை வயது சிறுவன் கார் மோதியதில் மரணம்

## தாய் படுகாயம்

தெஹிவளை பேருந்து தரிப்பிடத்தில் தாயுடன் நின்று கொண்டிருந்த மூன்றரை வயது சிறுவன் கார் மோதியதில் பலியாகியுள்ளான்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட குறித்த விபத்தில் சிறுவன் ஸ்தலத்தில் பலியாகியதுடன் அவனது தாய் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொஸிலார் தெரிவித்தனர்.

தாய் மற்றும் சிறுவன் பேருந்து தரிப்பிடத்தில் அருகே பேருந்துக்காக காத்திருந்த வேளையில், திடீரென்று கட்டுப்பாட்டை இழந்த கார் பாதையை விட்டு விலகி அவர்கள் மீது மோதியதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# கைகலப்பில் யாசகர் பலி

கொழும்பின் புறநகர்ப் பகுதியான நவகமுவவில் யாசகர்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பில் ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 46 வயதான யாசகரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம் பெற்ற சம்பவத்தில், கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த குறித்த நபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த பகுதியில் யாசகம் செய்யும் இரண்டு பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதாலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ -7)

# மக்கள் மீண்டும் போராட்டத்துக்கு செல்லப்போவதாக எச்சரிக்கை


தமது பிரச்சினைக்கு உரிய தீர்வுகிடைக்காது போனால் மீண்டும் வீதிப்போராட்டங் களில் ஈடுபடப்போவதாக கொழும்பின் புறநகர் ரத்துபஸ்வெல மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ரத்துபஸ்வெல குடிநீர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

அத்துடன் அதற்காக வீதிப் போராட்டங்களில் ஈடுபட்ட போது ஏற்பட்ட வன்முறை யில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நட்டஈடுகள் வழங் கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்க செய லாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஜனவரி மூன்றாம் வாரத்துக்குள் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங் கப்படாவிட்டால், பாரிய போராட்டம் ஒன்று நடத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள் ளார்.

2013ஆம் ஆண்டு ஓக ஸ்ட் முதலாம் திகதியன்று குடிநீர் பிரச்சினைக்காக ரத் துபஸ்வெல மக்கள் போராட் டம் நடத்திய போது படையி னர் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண் டனர். இதன்போது மூன்று பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். குறித்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கையுறைகளை தயாரிக்கும் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் நீர் குடிநீரில் கலப்பதாக கூறியே மக்கள் தமது எதிர்ப்பை வெளிக் காட்டி வருகின்றனர். (இ-7)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**கட்டைவிரலில்**

கட்டைவிரலின் மீதாவது அதன் நகத்தின் மீதாவது வெள்ளை மச்சம் தோன்றிக் காணப்பட்டால்அந்தநிலையில் அவர்கள் தொடங்கும் வேலைகளோ வியாபாரமோ மிகவும் சுலபமாக நிறைவேறுவதுடன் இலாபத்தையும் அளிக்கும் காதல் விவகாரங்களில் வெற்றி உண்டாகும். மேற்கண்ட மச்சம் கறுப்பாக இருந்தால் தான் செய்யும் முயற்சிகளில் எல்லாம் தோல்வி அடைவான். காதல் விவகாரங்களில் ஏமாற்றமும் அவமானமும் அடைய நேரிடும். வலது கை கட்டைவிரலில் மீது மச்சம் இருந்தால் அரசாங்க உத்தியோகத்தில் அதிகாரியாக பணிபுரிவான். பேச்சில் வல்லவனாகவும் வசதிகள் நிறைந்தவனாகவும் திகழ்வான்.

**ஆட்காட்டி விரலில்**

ஆட்காட்டி விரலின் மீதாவது அல்லது அந்த விரலின் நகத்தின்மீதாவது வெளுப்பான மச்சம் இருப்பது நல்லது. அந்த நிலையில் எதிர்பாராத வகையில் தன இலாபம் உண்டாம். பட்டம் பதவிகளைப் பெறுவார்கள். அந்நிலையில் எதிர்பாரத வகையில் தன இலாபம் உண்டாகும். பட்டம் பதவிகளைப் பெறுவார்கள். அந்நிலையில் உத்தியோக உயர்வுஊதிய உயர்வுகளைப் பெறுவார்கள். வலது கை ஆட்காட்டி விரலின் மீது மச்சம் இருந்தால் கெட்ட குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாவான். திருட்டு பித்தலாட்டம் ஏமாற்று வித்தைகள் புரிந்து எல்லோராலும் இகழப்படுவான். அடிக்கடி சிறைச்சாலைக்கு சென்று கொண்டிருக்கும் வாய்ப்புகள் நிறைந்தவன்.

**நடுவிரலில்**

நடுவிரலில் வெளுப்பான மச்சம் தோன்றி நன்கு காணப்பட்டால் சிறப்பான வியாபாரம் செய்வதன் மூலம் சுகபோகங்களும் உண்டாகும். இந்தநிலையில் அதிகமாக கப்பற் பிரயாணங்கள் செய்ய வேண்டியதன் அவசியம் ஏற்படும்.

வலது கை நடுவிரலில் மீது மச்சம் உள்ளவன் எதற்கு யாருக்கும் கட்டுப்படாது வாழ்க்கை நடத்துபவன். மது பானங்களை அருந்துவதில் மிக்க விருப்பம் கொண்டு சொத்து சுதந்திரங்களை அழித்து விடுவான்.

**மோதிரவிரலில்**

மோதிர விரல் மீது கறுத்த மச்சம் இருந்தால் எந்தக் காரியத்திலும் தோல்வி ஏற்படும். மக்களிடையே அகௌரவம் ஏற்படும். இவர்கள் செய்யும் எத்தொழிலும் நட்டமே ஏற்படும்.லாபமிராது. இவர்களால் பிறருக்கு உபகாரமே இருக்காது.அதற்கு மாறாக பிறருக்குத்தீங்குவிளைவிப்பவர்கள்.

மேற்கண்ட மச்சம் மோதிர விரலில் நகத்தின் மீது வெளுப்பாக இருந்தால் மிக்க அறிவாளிகளாகத்திகழ்வார்கள். தேர்வுகளில் தோல்வி என்பதையே காணாதவர்கள். இவர்கள் செய்யும் தொழில் இவர்களுக்கு நல்ல இலாபத்தை அளிக்கும். தாம் அனுபவிப்பதுடன் பிறருக்கும் உபகாரம் செய்யும் கொடையாளிகள். பேரும் புகழும் பெற்று வசதியுடன் வாழ்க்கை நடத்துவார்கள்.

வலது கை மோதிர விரலில் மச்சம் இருந்தால் மிக்க அறிவாளியாகவும் பிடிவாத குணமுள்ளவனாகவும் இருப்பான். வாழ்க்கைக்குரிய வசதிகள் நிரப்பப் பெற்றிருப்பான்.

**சுண்டு விரலில்**

சுண்டு விரலின் மீதும் சுண்டுவிரலில்நகத்தின்மீதும் அவ்வப்பொழுது வெளுப்பான மச்சங்கள் தோன்றித் தோன்றிமறையும்.(தோன்றும்)

# மண்ணோடு மண்ணாக மன்னராட்சி அழிந்துவிடும்

## சவுதி மதத் தலைவர் சாபம்

சவுதி மன்னராட்சிக்கு எதிராக இஸ்லாமிய உலகம் வெகு தீவிரமாக கிளர்ந்தெழுந்து அவர்களை மண்ணோடு மண்ணாகிப் போகும் அளவுக்கு புறக்கணிக்க வேண்டும் என ஈரானில் வாழும் ஷியா பிரிவு மக்களின் மிகப்பெரிய மதத் தலைவராக மதிக்கப்படும் அயாத்துல்லா அஹமத் கடாமி தெரிவித்துள்ளார். சவுதி அரேபியா நாட்டில் ஷியா பிரிவு தலைவர் ஷேக் நிமர் அல் நிமர் (56) என்பவருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சவுதி அரேபியாவில் சன்னி பிரிவைச் சேர்ந்த மன்னர் சல்மானின் ஆட்சி நடைபெற்று வருவதால் ஷியா பிரிவு மக்கள் அங்கு இரண்டாம்தர குடிமக்களைப் போல் நடத்தப்படுவதற்கு ஷியா ஆதரவாளர்களின் ஆட்சிக்கு உட்பட்ட ஈரான் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றது.

ஷியா பிரிவு தலைவர் ஷேக் நிமர் அல் நிமருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதும் ஈரான் அரசு கடும் எச்சரிக்கை விடுத்தது. இதற்கு கடும் விலை கொடுக்க வேண்டி வரும் எனவும் ஈரான் கூறியிருந்தது. அதற்கேற்ப, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள சவுதி தூதரகத்தின் மீது நேற்று முன்தினம் அதிகாலை பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கிடையில், நிமர் அல் நிமருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதும் ஈரானில் வாழும் ஷியா பிரிவு மக்களின் மிகப்பெரிய தலைவராக மதிக்கப்படும் அயாதுல்லா அஹமத் கடாமி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். சவுதி ஆட்சியாளர்களால் கொல்லப்பட்ட நிமர் அல் நிமரின் தூய்மையான இரத்தம் சவுதி ஆட்சியாளர்களின் ஆடை களை கரைப்படுத்தி, அவர்களை வரலாற்று ஏடுகளில்இரு ந்து துடைத்தெறிந்துவிடும்என்பதில்எனக்கு சந்தேக மில்லை. வஞ்சகம்மிக்க சவுதி அரச குடும்பத்தின் பழக்கங்களின்படி நிமர் அல் நிமர் கொல்லப்பட்டுள்ளார். (இ-7)

# சவுதி அரேபியாவில் ஒரே நாளில் 47 பேரின் தலைகள் துண்டிப்பு

**தீவிரவாத செயற்பாடுகள் மற்றும் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செயப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட 47 பேருக்கு மிகவும் கொடூரமான முறையில் தலை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றியுள ளது சவுதி அரசு.**

மன்னராட்சியின் கீழுள்ள சவுதி அரேபியா நாட்டில் இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களின்படி, மத துவேஷம், கொலை, பாலியல் பலாத்காரம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதமேந்திய கொளளை ஆகிய கொடும் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மட்டும் 47 பேரின் தலைகளை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. சவுதி அரேபியாவின் பிரபல ஷியா முஸ்லிம் இனத்தவர்களின் தலைவரான ஷேக் நிமர் அல்-நிமரிட்ஸ் மற்றும் 2003-2006 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் சவுதியில் தீவிரவாத தாக்குதல்களை நடத்திய அல் கொய்தா தீவிரவாதிகள் 46 பேருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சவுதி வரலாற்றிலேயே அதிகபட்சமாக கடந்த 1995 ஆம் ஆண்டு 192 பேரின் தலைகளை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. கடந்த (2015) ஆண்டில் மட்டும் 157 பேருக்கு இதைப்போல் தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒரே நாளில் 47 பேரின் தலைகளை துண்டித்துக் கொன்று சவுதி அரசு மரண தண்டனையை நிறைவேற்றியுள்ள சம்பவத்துக்கு ஐ.நா. பொதுச் செய லாளர் பான் கீ மூன், ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே, நிமர் அல்-நிமரிட்ஸுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்து செய்ய வேணடும் என்பது தொடர்பாக சவுதி அரசுக்கு பலமுறை கோரிக்கை விடுத்திருந்த பான் கீ மூன், சவுதி அரசு மரண தண்டனை விதிப்பதை ஒட்டுமொத்தமாக இரத்து செய்ய வேண்டும்எனவும்வலியுறுத்தி வந்தார். நிமர் அல்-நிமரிட்ஸுடன் சேர்த்து 47 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை அறிந்து வேதனை அடைந்துள்ளதாக பான் கீ மூனின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

நிமர் அல்-நிமரிட்ஸ் கொல்லப்பட்டதையடுத்து, பிராந்தியத்தில் பதற்றமும், வன்முறையும் பெருகிவிடாதபடி கவனித்துகொள்ள வேண்டும் என மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களை பான் கீ மூன் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், டெஹ்ரான் நகரில் சவுதி தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து அங்கு நிலவிவரும் நிலவரங்களை அவர் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும பான் கீ மூனின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## 47 பேரின் தலைகள் துண்டிக்கப்பட்டதையடுத்து

# கோபமடைந்த ஈரானியர்கள்; சவுதி தூதரகம் மீது தீ வைப்பு

(தெஹ்ரான்)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 47 தீவிரவாதிகளின் தலைகளை ஒரே நாளில் துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து ஈரானில் போராட்டம் வெடித்துள்ளது. அங்கு சவுதி அரேபியா தூதரகம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

2011-13 காலகட்டத்தில் போராட்டங்கள் நடத்தி. அதில் வன்முறையை கட்டவிழ்த்து விட்டு, துப்பாக்கியால் சுட்டும், பெற்றோல் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தி. பல பொலிஸாரின் உயிரைப்பறித்த ஷியா பிரிவினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களின் மரண தண்டனையை ஒரே நாளில் அதிரடியாக நிறைவேற்றி, தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை விடுக்க சவுதி அரேபியா முடிவு செய்தது.

நேற்று முன்தினம் ஒரே நாளில் ஷியா பிரிவு தலைவர் நிமர் அல் நிமர் மற்றும் 46 தீவிரவாதிகளின் தலைகள் வாள்கொண்டு துண்டிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஷியா பிரிவு தலைவர் நிமர் அல் நிமரின் மரண தண்டனையை நிறைவேற்றி இருப்பதற்கு. ஷியா ஆதரவு ஈரான் அரசு கடும் எச்சரிக்கை விடுத்தது.

"நிமர் அல் நிமரின் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ள சவுதி அரேபியா. அதற்கு கடும் விலை கொடுக்க வேண்டி வரும்" என ஈரான் கூறியது.

ஷியா பிரிவு தலைவர் நிமர் அல் நிமர், அரசுக்கு எதிராகவும் சவுதி அரச குடும்பத்திற்கு எதிராகவும் பேசியவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்திற்கு சவுதி அரேபியா தூதரை அழைத்து ஈரான் கடும் கண்டனத்தை பதிவு செய்தது என்று IRNA செய்தி வெளியிட்டு உள்ளது.நிமர் அல் நிமரின் மரண தண்டனையை நிறைவேற்றிய சவுதி அரேபியாவிற்கு எதிராக ஈரானில் போராட்டம் வெடித்துள்ளது. (இ-7)



# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எதிர்காலம் எப்படி இருக்கும்?




தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் பலவீனப்படுத்துகின்றார்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிலர் போட்டியிட்டதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கக் கூடிய நாடாளுமன்ற இருக்கைகள் குறைவடைந்துவிட்டன.அல்லாவிட்டால் நாடாளுமன்றத்தில் த.தே.கூட்டமைப்பினரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும். பேரம்பேசும்நிலைமை அதிகரித்திருக்கும். இப்பொழுதும் த.தே.கூட்டமைப்பைக் குறைகூறுவதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைக் குறைக்கவே சூழ்ச்சி செய்கின்றனர் என்ற பரப்புரைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம் எது? அதிக எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பது மட்டும் பலமாகுமா? பேரம் பேசுவதற்கு அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையென்றால் என்ன அடிப்படையில் அல்லது என்ன உறுதிமொழியில் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தனர். அப்பொழுது அருமையான பேரம் பேசும் சந்தர்ப்பம் கிடைத்ததே. அதை ஏன் தவறவிட்டனர் என்பன போன்றபலவினாக்கள்விடை கிடைக்காத வினாக்களாகவே உள்ளன. தற்பொழுது கூட மைத்திரி–ரணிலின் கூட்டு ஆட்சிக்கு எந்தவித நிபந்தனைகளுமற்ற ஆதரவை எதிர்க்கட்சி என்ற பெயரில் வழங்கி வருவது ஏன் என்பது விளக்கப்படாமலே உள்ளது. இந் நிலையில் இவற்றைப் பற்றி வினா எழுப்புவோரைப் பார்த்து த.தே. கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள் என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

### கூட்டமைப்பின் பலம் எது?

ஓர் அமைப்பின் பலம் என்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அடங்குவதல்ல. பலம் என்பது இனத்தின் உரிமைகளுக்கான உறுதியான இலட்சியக் கொள்கைகளிலும் அதனை அடைய துணிவுடன்உழைப்பதிலேயேஉள்ளது. ஆனால் இங்கே என்ன நிலைமை. தேசியம் என்பதை நிலை நிறுத்த எடுக்கப்படுகின்ற முயற்சிகள் எவை? வரலாற்றுத் தாயகம் தனிப் பண்பாடு, தாய்மொழி இவற்றைக் கொண்டது தானே தேசியம். அத்தனையும் நிறைவாகவுள்ள தமிழினத்தின் மீட்சிக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது? கூறுவதற்கு எதுவுமேயில்லை அது மட்டுமல்ல த.தே.கூட்டமைப்பு வெறுமனே ஒரு நெல்லிக்காய் மூட்டை போன்றதே. எனது கட்சிதான் பெரிய கட்சி. எனவே எமது கருத்துக்கள் தான் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். மற்றவை சிறிய கட்சிகள். எனவே இதனைப் பதிவு செய்து ஒரு கட்சியாக ஆக்கமுடியாது என்பது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பலமா? பலவீனமா? என்ற வினா எழுவது இயற்கைதானே. எனவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் அவர்கள் தனித்தனிக்கட்சிகளே என்பதன் மூலம் த.தே.கூட்டமைப்பு பலமற்ற ஒரு அமைப்பு என்று தானே பொருள்படும்.

### வரலாறு காட்டும் பாடம்

1947 இல் மிகவும் பலமான தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்மக்களின் உரிமைக்கான குரலாக ஒலித்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை மிகப்பெரும் தமிழினத் தலைவராகத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் 1949 இல் தந்தை செல்வா, வன்னியசிங்கம், நாகநாதன் போன்றோர் இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கினர். எவரும் பலம் பொருந்திய காங்கிரசைப் பலவீனமாக்குகின்றீர்களே என்று செல்வாவை பார்த்துக் கேள்வி எழுப்பவில்லை. ஆனால் மக்கள் 1952 இல் நடந்த தேர்தலிலும் பொன்னம்பலத்தையே தலைவராக ஏற்றுக் கொண்டனர். தந்தை செல்வா, காங்கேசன்துறைத் தொகுதியில் தோல்வியடைந்தார். பின்னர் தமிழர் தாயக மெங்கணும் சென்று கொள்கை விளக்கம் செய்து மக்களை விழிப்படையச் செய்து 1956 முதல் 1976 வரை அக்கட்சியைப் பலமுள்ள ஒரு அரசியல் இயக்கமாக வழிநடத்தினார். இந் நிலையிலேயே 1956 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் சில தமிழ்ப் பெரியார்கள் தமிழரசுக் கட்சியையும் காங்கிரஸ் கட்சியையும் போட்டித் தவிர்ப்புச் செய்து நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வைக்கவேண்டும் என்று முயற்சித்தனர். இம்முயற்சிக்கும் இரு பகுதியினரையும் அழைத்துப் பேசுவதற்கும் காலஞ்சென்ற தலைமை நீதியரசர் சி.நாகலிங்கம் தலைமை தாங்கினார். ஆனால் அம்முயற்சி வெற்றி பெறவில்லை. ஏனெனில் ஒற்றுமை என்பதன் அடிப்படை என்பது என்ன? நாடாளுமன்றத்திற்கு யார் யார் செல்வது என்பதற்கான தேர்தல் கூட்டணி ஒற்றுமையா? தமிழ்மக்களின் உரிமைகளை அடைவதற்காக ஒரு கொள்கையை வகுத்து அதற்காகப் பாடுபடுவதற்கான ஒற்றுமையா? என்ற வினா அங்கு தந்தை செல்வா தரப்பால் எழுப்பப்பட்டது. இலட்சியமற்ற, அடிப்படைக் கொள்கைகளற்ற நாடாளுமன்ற இருக்கைகளுக்கான ஒற்றுமை என்றால் அது பலன் தராது என்பது தமிழரசுக் கட்சியின் நிலையாக இருந்தது. அதனால் அன்று இரு கட்சிகளும் தனித்தனியாகவே செயற்பட்டன. தமிழரசுக் கட்சி பெரிய கட்சியாக 1976 வரை இருந்தது.

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றம்

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது. அம்முன்னணி ஆட்சிக்கு வந்தால் நாடாளுமன்றத்தை அரசியல் அமைப்பு அவையாகக்கொண்டு ஒரு புதிய குடியரசு யாப்பை உருவாக்குவதென தேர்தல் வாக்குறுதி கொடுத்திருந்தது. அதற்கமைய புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டது. அப்பொழுது தமிழ் அரசியல் கட்சி களை இணைத்து ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அதற்குத் தமிழர் கூட்டணி எனப் பெயர் சூட்டினர். அத்தமிழர் கூட்டணியில் காங்கிரஸ் இணைந்திருந்தாலும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.அருளம்பலம், ஆ.தியாகராசா, வீ.ஆனந்தசங்கரி ஆகிய மூவரும் தமிழர் கூட்டணிக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருந்து ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்கி வந்தனர். 1972 மே 22 இல் புதிய குடியரசு அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. முன்னைய அரசியல் யாப்பில் இருந்த சில சலுகைகள் கூடப் பறிக்கப்பட்டுச் சிங்கள பௌத்த குடியரசாக முழு இலங்கைத்தீவும் கொண்டுவரப்பட்டது. இந்த ஆபத்தைத் தடுப்பதற்காகத்தந்தை செல்வா தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்திடம் தானே சென்று தமிழ்மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி ஓரணியாகச் செயற்பட வேண்டி அவருக்கு அழைப்பு விடுத்தார். ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அதனை ஏற்றுக்கொண்டார். அதற்கமையவே 1976 ஆம் ஆண்டு தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்திய வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றியது. 1956 இல் ஏற்படாத ஒற்றுமை 1976 இல் ஏற்பட்டது. த.வி.கூட்டணியின் தலைவர்களாக ஜீ.ஜீ.பொன்னம்பலமும் தந்தை செல்வாவும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். (விதிவிலக்குடன் தொண்டைமானும் தலைவரில்ஒருவராகக்கொள்ளப்பட்டார்) இது தேர்தல் கூட்டணியல்ல. இது முழுக்க முழுக்கத் தமிழினம் சார்ந்த இலட்சியத்திற்காகக் கொள்கைக்காக உழைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டணியாகும். தமிழரசுக் கட்சிதான் பெரிய கூட்டணி. தமக்குக் கூட்டணியில் அதிக உரிமை இருக்கவேண்டும் என்று தந்தை செல்வா என்றும் கூறியதில்லை. உண்மை நிலை என்னவென்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றம் ஒரு புதிய இயக்கத்தின் தோற்றமாகும். அதன் பின்னர் தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் என்ற சிந்தனை அறவே அற்ற ஓர் அமைப்பாக இயங்குவதே தந்தை செல்வாவின் நோக்கமாக இருந்தது. ஆனால் இன்று இதற்கு முற்றிலும் எதிரான நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது.

தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னர் தமிழரசுக் கட்சியைத் தொடர்ந்து வைத்திருக்க எடுத்த முனைப்பும் தமிழ்க் காங்கிரஸ் பின்னர் தனித்து இயங்க வழக்காடு மன்றம் வரை சென்றதும் பிந்திய தலைமைகளின் ஒற்றுமையின்மையையே காட்டின. அத்துடன் அன்று செல்வா, ஜீ.ஜீ.ஏற்படுத்திய கூட்டணி இன்று திசைமாறிப் போய் மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டது. அத் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் காப்பாற்றத் தவறியவர்களை அழைத்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தமிழினத் தலைவர் பிரபாகரன் நிறுவினார். 2009 வரை கட்சி வேறுபாடுகளைக் காட்டாமல் இருந்து வந்தவர்கள் பின்னர் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் கூட்டமைப்பில் தாங்கள் பெரிய கட்சி என்றும் மற்றையவர்கள் சிறிய கட்சியினர் என்றும் கூறித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதியாது காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் என்ற வேறுபாடுகளை மறந்து ஒரேயணியாகத் தமிழரின் விடுதலையையே நோக்காகக் கொண்டு பணியாற்றவே தமிழர் விடுதலைக் கூட்டணி பதிவு செய்யப்பட்டது. அங்கு வேற்றுமைகள் மறக்கப்பட்டன. பெரிய கட்சி, சின்ன கட்சி என்ற பாகுபாடு மறக்கப்பட்டது. ஆனால் இங்கு தேர்தல் மாத்திரமே சிந்தனை. கட்சி கள் தங்கள் அடையாளங்களைவைத்துக் கொண்டு கூட்டமைப்பு என்று கூறுவது கொள்கைகளுக்காகவோ இலட்சியத்திற்காகவோ அல்ல.

இந்த வேறுபாடுகள்தான்த.வி.கூட்டமைப்பின் பலவீனம். இந்தப் பலவீனம் தான் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பை பலமில்லாததாக்குகின்றது இதனைச் சரிசெய்யாமல் வீணாக வெளியே இருந்து யாரோ கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த முயற்சிப்பதாக எழுதிப்பேசி மக்களை ஏமாற்றலாம் என்று சிலர் நினைக்கின்றனர்.

வெறுமனே தேசியம் என்பது பெயராக இல்லாமல் அடிப்படை இலட்சியமாகக் கொள்ளப்பட்டு அந்தத் தேசியத்தை நிலை நாட்டத் தாயகம் தேவை என்று வலியுறுத்த ஒரு அமைப்பு இருக்கவேண்டும். அதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலட்சியமாக இருந்தால் கட்சிகளைக் கலைத்துவிட்டு ஒரே பெயரில் இயங்கவேண்டும். அதனைப் பதிவு செய்து ஒற்றுமையாகச் செயற்பட்டால் வேறு எவரும் த.தே.கூட்டமைப்பைப் பலவீனமடையச் செய்யமுடியாது. எட்ட நிற்பதாகக் கருதப்படுபவர்களும் ஒன்றிணைந்து வர மக்கள் முயற்சிப்பர். ஆனால் செல்வாவால் கட்டி எழுப்பப்பட்ட இலட்சியக் கனவை மறந்து அவரது கொள்கைகளுக்கு முற்றாக எதிரான நிலைப்பாட்டுடன் அரசியல்செய்தால்அதுதான்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதேயன்றி வேறு எதுவும் அதனைப் பலவீனப்படுத்த முடியாது.

வெறும் சொற்களான் சாணக்கியம், இராஜதந்திரம் என்பன தொடர்ந்தும் மக்களை ஏமாற்றப் பயன்படா என்பதைப் புரிந்து கொண்டுதமிழினத்திற்காக உழைக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு முன்வராவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னைத் தானே பலவீனப்படுத்துவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

**முத்துச்செல்வன்**

# சீன இராணுவத்தில் மூன்று புதிய பிரிவுகள்
## ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்



உலகின் மிகப்பெரிய இராணுவ மாக சீன ராணுவம் திகழ்கிறது. இந்த நிலையில், அந்த ராணுவம் தனது படை பலத்தை அதிகரித்துக் கொள்ளும் விதத்தில் 3 புதிய பிரிவு கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த பிரிவுகளை ஜனாதிபதி ஷி ஜின் பிங் தொடங்கி வைத்து, பிரிவு களின் தலைவர்களிடம் இரா ணுவ கொடிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஷி ஜின் பிங் பேசும்போது, "இராணுவத் தினை நவீன மயமாக்குவதின் ஒரு அங்கமாக 3 புதிய பிரிவு களை தொடங்கியுள்ளோம். இதன மூலம் வலுவான படை பலம் என்ற கனவை சீன இராணுவம் நனவாக்கும்" என தெரிவித்தார். புதிதாக உருவாக்கப்பட்டு ள்ள 3 பிரிவுகளில் பொது இரா ணுவ பிரிவு, ஏவுகணைப்பிரிவு, கொள்கை ஆதரவு படை ஆகியவை அடங்கும என மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதன்கோட் தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம்

பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில் உள்ள விமானப்படை தளத்துக்குள் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலு க்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வோஷிங்டன் மாநில செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில் நேற்று முன்தினம் நடந்த தீவிர வாதிகள் தாக்குதலை அமெரிக்கா வன்மையாக கண்டிக்கிறது.

இந்த தாக்குதலில் பலியான வீரர்களின் குடும்பங்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்த பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் தீவிர வாதிகளின் கட்டமைப்பை முழு வதுமாக அழித்தொழிக்க வேண டும். தீவிரவாதத்திற்கு எதிராக இந்திய அரசுடன் இணைந்து அமெரிக்கா தீரத்துடன் போராடும் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அமெரிக்கா அச்சுறுத்தல்
## புடின் அறிவிப்பு

ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அமெ ரிக்கா அச்சுறுத்தலாக விளங்குவ தாக முதல் முறையாக அறிவிக்கப் பட்டுள்ளது பரப்பரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின புத்தாண்டு அன்று ரஷ்ய கூட்டமை ப்பின் தேசிய பாதுகாப்பு பற்றி உத்தி கள் என்ற ஒரு ஆவணத்தில் கையெ முத்திட்டார்.

அதில் அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் ரஷ்யாவின் பாது காப்புக்கு கடும் அச்சுறுத்தலாக விளங்குவதாக கூறப்பட்டுள் ளது.

முதல் முறையாக அதிகார பூர்வ ஆவணம் ஒன்றில் தனது பாதுகாப்புக்கு அமெரிக்கா அச் சுறுத்தலாக விளங்குவதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 150 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 400 | 700 | 600 | 600 |
| தக்காளி | 140 | 100 | 90 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 130 | 150 | 150 | 120 | 160 | 100 |
| கரட் | 200 | 250 | 200 | 200-300 | 480 | 200 |
| பூசணி | 60 | 50 | 35 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 100 | 60 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 140 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 150 | 200 | 150 | 200 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 120 | 260 | 180 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 180 | 120 | 120 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 180 | 160 | 140 | 120 | 200 | 120 |
| பீற்றூட் | 180 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 350 | — | 250 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | — | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | — | — | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 180 | 100 | 70 | 150 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 20-35 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 160 | 200 | 100 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 300 | 150 | — | 200 | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 70 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 10 | 30 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 40 | — | 80 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு
## இலங்கை நோக்கி பழ.நெடுமாறன் படகில் பயணம் 70

...எங்கள் கோரிக்கையை மக்கள் ஏற்று 16 உறுப்பினர் களைப் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ள னர்.

### மாற்று யோசனை

தனி நாடு கோரிக்கைக்குப் பதிலாக ஜெயவர்த்தனா அரசாங்கம் வேறு மாற்று யோசனை சொன்னால் அதை நான் ஒருவன் மட்டும் தனிப் பட்ட முறையில் ஏற்றுக் கொள்ள முடியாது.

அந்த மாற்று யோசனையை எங்கள் கட்சி முன் எடுத்து வைப்பேன். அத்துடன் அந்த யோசனையை மக்கள் முன்பு வைப்போம். கட்சியும் மக் களும் ஏற்றுக்கொண்டால் அதற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன். ஆனால், எந்த யோசனையையும் நான் மட் டும் ஏற்று முடிவு எடுக்க மாட் டேன். கட்சியின் கொள்கை யைத் தனிப்பட்ட ஒருவரால் மாற்றிவிட முடியாது.

### அறிவிக்கட்டும்

அந்த மாற்றுத் திட்டம் மாற்று யோசனை என்ன என்று ஜெயவர்த்தனா அரசா ங்கம் முதலில் வெளிப்படை யாக அறிவிக்கட்டும். வெளிப் படையாக அறிவிக்கும் முன்பு அதுபற்றி எங்களால் எதுவும் சொல்ல முடியாது.

### முக்கிய மாற்றம்

இலங்கைத் தமிழர் பிரச் சினையில் சமாதானம் செய்து வைக்க பிரதமர் இந்திரா முயற்சி எடுத்துள்ளது. இப் போதுள்ள நிலையில் ஒரு முக்கியமான மாறுதலை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையே கலாசாரப் பண்பாட்டுத் தொடர்பு இருப் பதுடன் கணிசமான இந்தியர் கள் வாழும் நாடு இலங்கை. அத்துடன் எங்கள் நாட்டின் அருகேயுள்ள மிகப்பெரிய நாடு இந்தியா.

அந்த அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் இந்தியா எடுத்துக் கொண்ட அக்கறை மிகவும் நியாயமானதுதான்.

### மறு பரிசீலனை

இலங்கைத் தமிழர்கள் இப்போது சிங்களவர்களால் படுகொலைக்கு ஆளான பிறகு தலைமன்னாரில் எங்கள்



கட்சியின் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் இனிமேல் ஜெயவர்த்தனா அரசாங்கத் துடன் பேச்சு வார்த்தை நடத்துவது என்ற பேச்சுக்கே இடம் கொடுக்கக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது.



சமரச முயற்சியில் இப் போது இந்தியா ஈடுபட்டுள்ள தால் எங்கள் நிலையை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட் டுள்ளது.

### நன்றி

எங்கள் பிரச்சினையில் இந்திரா காந்தி மிகுந்த அனு தாபம் காட்டுவதற்காக அவரு க்கு நன்றி செலுத்து கிறேன்.

இந்தியாவில் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி, இல ங்கை திரும்பியதும் அங் குள்ள தமிழர் தலைவர் களுடன் விவாதிப்பேன்.

### தமிழர்கள் சொத்துகள்

தமிழர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களை அரசாங்கமே எடுத்துக் கொள்ள புதிய சட்டம் கொண்டு வரப்பட் டிருக்கிறது. இது சம்பந்த மாக இலங்கை அரசாங்கத்து க்கு நான் பல கடிதங்கள் எழுதி இருக்கிறேன். இவ் வாறு அமிர்தலிங்கம் கூறி னார்.

### இந்திய இராணுவம்

அதன்பிறகு ஒரு நிருபர் இந்திய இராணுவத்தை அனு ப்ப வேண்டும் என்று சொல் கிறார்களே! அதை ஆதரிக் கிறீர்களா? என்று கேட்டார்.

அதற்கு அமிர்தலிங்கம் இப்போது அப்படிப்பட்ட சூழ்நிலை எதுவும் இல்லை. எனவே இப்போது அதற் கான அவசியமும் எழ வில்லை.

இலங்கைத் தமிழர்கள் மீது ஜூன் மாத கடைசியில் நடந்த கொலை வெறி தாக் குதலைப் போல மீண்டும் தாக்குதல் நடந்தால், அங் குள்ள இந்தியர்களைப் பாது காக்கவும் காப்பாற்றவும் இந்திய இராணுவம் அனுப்பு வதில் தவறில்லை. இந்தியா தன் மக்களைக் காப்பாற்ற இராணுவத்தை அனுப்பு வதில் என்ன தவறு? என்று கேட்டார்.


### சுதந்திர தின விழா

சுதந்திர தினத்தை முன் னிட்டு டெல்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் இந்திரா காந்தி தேசியக் கொடியை ஏற்று வைத்தார்.

அவர் பேசும்போது கூறிய தாவது:-

சும்மா இருக்க முடியாது

இலங்கையின் உள்நாட் டுப் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்ற எண்ணம், இந்தியாவுக்கு இல்லை.



(தொடரும்)

# அரசியல்கைதிகள் விடுவிப்பில் சட்டமா அதிபர் கடும் போக்கு!

(கொழும்பு)

**அரசியல் கைதிகள் விவகாரத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் முன்னைய அரசின் நடைமுறைகளையே பின்பற்றுகின்றது என்று அரசியல் கைதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தமது வழக்குத் தொடர்பான வாக்குமூலம் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்ட பின்னும் வழக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட புதிய விசேட நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இதேவேளை, அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் தற்போது நடைபெற்று வரும் நீதிமன்றங்களில் இருந்து வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறான ஒரு சம்பவமாக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரட்ணம் ஜீவரட்ணம் (வயது - 44) என்ற அரசியல் கைதி தற்போது மகஸின் சிறைச்சாலையில் உள்ளார். அவர் 2007 ஆம் ஆண்டு, ஆனி மாதம் 23ஆம் திகதி கருணா குழுவினரால் திருகோணமலை மொரவெவ பகுதியில் வைத்துப் பிடிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் குறித்த நபரை திருகோணமலை பொலிஸாரிடம் கருணா குழுவினர் ஒப்படைத் துள்ளனர்.

பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணை மேற்கொண்ட பின்னர், பொலிஸார் திருகோணமலை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

அந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், கடந்த 2014 ஆம் ஆண்டு திருகோணமலை உயர் நீதிமன்றால், அவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆனால், அது தொடர்பான கட்டளை இன்னும் வழங்கப்படாத நிலையில், அவரது வழக்கு விசேட நீதிமன்றுக்குச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மாற்றப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். இது தம்மை அச்சத்துக்குள்ளாக்கியுள்ளது என்றும் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களம் நல்லாட்சி அரசின் சட்ட திட்டங்களை கடைப்பிடிக்காது பழைய அரசின் சட்ட திட்டங்களையே கடைப்பிடித்து வருகின்றார்கள்.

இவ்வாறு அரசியல் கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்புவதாக பெயர் வெளியிடப்பட்ட அரசியல் கைதிகளின் வழக்குகளும், வழக்கு விசாரணை திகதிகளும் 6 மாதங்களுக்கு மேல் ஒத்திவைக்கப்படுகின்றன என்றும், அதனால் தாம் அவல நிலையில் உள்ளோம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளாத

# அமைச்சர்கள் பற்றி ரகசிய அறிக்கை கோரும் பிரதமர்

கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளத் தவறிய அமைச்சர்கள் பற்றி இரகசிய அறிக்கை ஒன்றை பிரதமர் கோரியுள்ளார்.

அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளாத அனைத்து அமைச்சர்கள் பற்றியும் இரகசிய அறிக்கை ஒன்றை அவசரமாக பிரதமர் கோரியுள்ளார்.

· பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நெருக்கமான அரச உயர் அதிகாரிகள் இந்த அறிக்கையை தயாரிக்கவுள்ளனர்.

அமைச்சுப் பதவிப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள், சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்கள், ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சுப் பதவிக்கான பொறுப்பினையும் அரசாங்கத்திற்கான கூட்டுப் பொறுப்பு தொடர்பிலும் உரிய முறையில் பங்களிப்பு வழங்கத் தவறிய அமைச்சர்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பு உள்ளிட்ட சிவில் அமைப்புக்கள் அமைச்சர்களின் நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் செய்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்படவுள்ளது.

இரண்டு முக்கிய அமைச்சர்கள் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் இந்த இரண்டு அமைச்சர்கள் தொடர்பிலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்பட உள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது இந்த அறிக்கையின் உள்ளீடுகள் கவனத்தில் கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (இ-7)

# லசந்த கொலை குறித்து 18 பேரிடம் விசாரணை

(கொழும்பு)

சண்டே லீடர் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டு 7 ஆண்டுகள் இந்த வாரத்தில் பூர்த்தியடைகின்ற நிலையில் தற்போது வரையில் அவரின் கொலை தொடர்பில் 18 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தில் குறித்த விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

எனினும் புதிய அரசாங்கம் இந்த விசாரணைகளை துரிதமாக முன்னெடுத்து வருகிறது.

ஏற்கனவே கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் இறந்த நிலையில் ஒருவர் நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



அவரை மீண்டும் கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சீஐடியினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடமும் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. இதனையடுத்து பல இராணுவ அதிகாரிகளும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (இ-7)

# விமானத்தின் மீது வாகனம் மோதியது

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமானத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானம் ஒன்றுடன் கனரக வாகனம் ஒன்று மோதியுள்ளது.

இதன் காரணமாக பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவையின் 103வது ஆண்டு நிவைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வின் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த கனரக வாகனம், கடந்த 28 ஆம் திகதியன்று இரவு இசைக் கருவிகளை ஏற்றிச் சென்ற நிலையில் ஏ-340 விமானத்தில் மோதியுள்ளது.

இதன்போது விமானத்தின் இடதுபக்க இறக்கை பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்கு வேண்டும் நல்ல நண்பர்கள்

'உங்கள் நண்பர்களை பற்றிச் சொல்லுங்கள், உங்களைப்பற்றிச் சொல்கிறேன்' என்று ஒரு அறிஞர் சொன்னதை நாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். நண்பர்கள் நமது வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். வாழ்க்கையில் வெற்றி பெற நினைக்கிறார்கள். நினைக்கிறார்கள் தங்கள் நண்பர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

உடல் வளர்வதற்காகத்தான் வாய் உண்கிறது. வாய் உண்பதற்காக கை உதவுகிறது. கண்கள் உறங்க வேண்டும் என்பதற்காகவே காது இசையைக் கேட்கிறது. கால்கள் சரியாக நடக்க வேண்டியே கண்கள் பார்க்கின்றன. இடுப்பில் உள்ள ஆடை நழுவும் போது கை உதவுகிறது. உடலில் காயம் பட்டால் கண் அழுகிறது. இப்படித்தான் நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பர்.

நல்ல ஆலோசனைகளை சொல்ல, கவலைகளைப் பகிர்ந்துகொள்ள, தொழில்களில் பங்குதாரர்களாக, நலிவு ஏற்படும் போது தாங்கிப் பிடிக்க, விருதுகள் மூலம் மனச் சோர்வைப் போக்க, தகவல்களைப் பரிமாறிக் கொள்ள, ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க– இப்படி இன்னும் எத்தனையோ முறைகளில் நண்பர்கள் உறுதுணையாக உங்களுக்கு இருப்பர்.

உறவினர்கள் நம்மிடம் எப்போதும், எதையாவது எதிர்பார்த்துக் கொண்டே இருப்பர். நண்பர்கள்தான் நமக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பர்.

நல்ல நண்பர்களாகத் தேர்வு செய்ய வேண்டும். நல்ல நண்பரைத் தேர்ந்தெடுக்கும் வரை நிதானம் வேண்டும். தேர்ந்தெடுத்த பின் உறுதியாக இருக்க வேண்டும். தேவையில்லாத சந்தேகங்களுக்கு இடம் தரக் கூடாது. நல்ல நண்பர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் வெற்றியிலும் தோல்வியிலும் உங்களுடன் இருப்பர். உங்கள் நிலை மோசமாகும் போது நழுவி விடுவர். நல்ல நண்பர்கள் கண்ணாடி போன்றவர்கள். முக அழகையும் காட்டுவர். அதேபோல் அழுகையும் காட்டுவர். பாராட்டும்போது பாராட்டுவர், கண்டிக்கும்போது கண்டிப்பர். கெட்ட நண்பர்கள் நம்மைப் புகழ்ந்துகொண்டே தங்கள் காரியத்தை சாதித்துக்கொள்வர்.

'உன்னைவிட உயர்வான மனிதரைத் தவிர மற்றவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டாம்' என்பார் சிந்தனையாளர் கன்பூஷியஸ். நல்ல நண்பன் வெயில் காலத்தில் விசிறியகவும் குளிர்காலத்தில் குளிர்காய நெருப்பாகவும் இருப்பான். மனைவியைவிட நண்பனிடமே சில விடயங்களை மனம் விட்டுப் பேச முடியும். நல்ல நண்பர்கள் இருந்தால் உங்களால் பதற்றமின்றி பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியும்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உறவு கொள்ளும் கலையைப்பற்றி நீங்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். உம்மணாம் மூஞ்சியாய் இருக்கக்கூடாது. யாரும் பழக வருவார்கள் என்று காத்திருப்பதைவிட நாமே மற்றவர்களுடன் பழகுவதற்குத் தொடங்க வேண்டும்.

ஒருமுறை லியோ டால்ஸ்டாய் ஒரு பூங்காவிற்கு சென்றார். அங்கு தனக்கு எதிரில் வந்தவரை பார்த்து 'ஹலோ எப்படி இருக்கிறீர்கள்' என்று நலம் விசாரித்தார். வந்தவர் சிடுமூஞ்சி. 'நாம் இதுவரை சந்தித்ததே இல்லை. அப்படி இருக்கும்போது என்ன ஹலோ வேண்டிக் கிடக்கிறது' என்று கூறி விட்டுப் போய்விட்டார். மறுநாளும் டால்ஸ்டாய் அந்தப் பூங்காவிற்கு சென்று மீண்டும் அவரை நலம் விசாரித்து, 'நேற்று நாம் இருவரும் சந்தித்துக் கொண்டோம். என்னை உங்களுக்குத் தெரியாது என்று சொல்லி விடாதீர்கள்' என்று சொல்ல அந்த நண்பர் சிரித்து விட்டார். இருவரும் அதற்குப் பிறகு நண்பர்களாகினர்.

**கொடுத்ததை மறப்பதும் பெற்றதை நினைப்பதும் நல்ல நட்புக்கு அடையாளம் என்கிறார் திருவள்ளுவர். புதிய ஆடை உடலுக்கு அழகு. ஆனால் பழைய நண்பனே வாழ்க்கைக்கு அழகு. நாம் வளமாக இருக்கும்போது நண்பர்களுக்கு நம்மைத் தெரியும். நாம் வறுமையில் இருக்கும்போது நமக்கு நண்பர்களைத் தெரியும். நல்ல நட்புக்கு எல்லா சுமைகளும் இலகுவானவை. இவற்றை மனதில் வைத்துக்கொண்டு வெற்றிகளைப் படைப்போம்.**

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# புதுவருட பலன்கள் 2016



**புதனின் பார்வை பதிகின்றது! புதிய திருப்பம் வருகின்றது! சிக்கலைத் தீர்க்கும் ஆற்றலும் மக்களை வசமாக்கும் பேச்சும் கொண்ட மிதுன இராசி நேயர்களே!**

தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த உங்களுக்கு வந்துவிட்டது புத்தாண்டு. இனி வளர்ச்சி கூடுதலாகவே கிடைக்கப் போகின்றது. வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம்தான். தனித்துப் பார்க்காமல் சூரியனோடு இணைந்து பார்ப்பது மிகுந்த யோகமாகும். புத-ஆதித்ய யோகம் செயறபடுவதோடு தனாதிபதி சந்திரனோடு குரு இணைந்து வருடம் தொடங்குவதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். முட்டுக்கட்டைகள் அகலும். முன்னேற்றம் கூடும்.

உடல்நலக் குறைபாட்டால் சோர்ந்திருந்த நீங்கள் உற்சாகத்தோடு பணிபுரியும் உன்னதமான வாய்ப்பு உருவாகும். மறைந்த சனியால் நிறைந்த பலன் கிடைக்கும். குறைந்த விலைக்கு வாங்கிய இடத்தைக் கூடுதல் விலைக்கு விற்று வளம் மிகுந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழி கிடைக்கப் போகின்றது.

**1.1.2016 முதல் 6.2.2016 வரை**

இக்காலத்தில் குரு கன்னி ராசியில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கின்றார். அதிசார குருவாக சஞ்சரிப்பது யோகம்தான். வெறும் அர்த்தாஷ்டம குருவாக இருந்தால் சிக்கல்களும், சிரமங்களும் வந்து சேரும். அதே நேரத்தில் அதிசாரத்தில் இருந்தால் அதிக நன்மைகள் உருவாகும்.

குருவைப் பொறுத்தவரை அதன் பார்வை பலனுக்குத்தான் பலரும் காத்திருக்கிறார்கள். குரு பார்க்க கோடி நன்மை அல்லவா? இக்காலத்தில் திசைமாறிய தென்முகக்கடவுளை வழிபடுவது நல்லது.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் ஜனவரி 8 ஆம் திகதி முதல் மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இந்த ராகு-கேது பெயர்ச்சிக் காலம் இனிய மாற்றங்களை ஏற்படுத்தும் காலமாக அமையலாம்.

## புதனின் பார்வை பதிகின்றது! புதிய திருப்பம் வருகின்றது!

முயற்சிகளில் வெற்றி கொடுக்கும் சூழ்நிலையை கண்டறிய மூன்றாமிடம்தான் வலிமை பெற்றிருக்க வேண்டும். அந்த இடத்தில் இப்பொழுது ராகு சஞ்சரிப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வெற்றியைக் கொடுக்கும் இடத்தில் ராகு இருப்பதால் எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கப் போகின்றது.

சகோதரர்கள் சகாயமாக நடந்து கொள்வர். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பாலும் கூட்டு முயற்சிகளால் அனுகூலம் கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

உங்கள் திறமை பளிச்சிடும் நேரமிது. தெய்வ பலம் உங்களுக்கு இருக்கிறது. 9 இல் சஞ்சரிக்கும் கேதுவால் உயர்ந்த மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். கௌரவம், அந்தஸ்து உயரும்.

பெரிய அளவில் மூலதனம் போட்டு தொழில் தொடங்க வேண்டுமானால் அரசு வழி ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும். அல்லது செல்வந்தர்களின் ஒத்துழைப்பு தேவை. இந்த இரண்டும் ஒன்றாகக் கிடைக்கும் அமைப்பு ஏற்படும்.




**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

வருடத்தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குரு பகவான் கன்னி ராசியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அவர் 7.2.2016 முதல் 1.8.2016 வரை உங்கள் ராசிக்கு மூன்றாமிடமான சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதில் 17.5.2016 வரை சிம்மத்திற்குள்ளேயே வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். 18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை சகாய ஸ்தானத்தில் குரு சஞ்சரித்து எண்ணற்ற நற்பலன்களை இதயம் மகிழ வழங்க இருக்கிறார். ராகுவும் அவரோடு இணைந்து இருப்பதால் யோகங்களை அள்ளி வழங்கப் போகின்றது.

அப்படி என்ன யோகம் என்று நீங்கள் நினைக்கலாம். அதன் பார்வை எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ அந்தந்த இடங்களில் எல்லாம் அனுகூலம் கிடைக்கும் அல்லவா? அந்த அடிப்படையில் மூன்றாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார்.

எனவே வரன்கள் வாயில் தேடி வரவில்லையே என்ற ஏங்கியவர்களுக்கு இனி நல்ல தகவல் இல்லம் தேடி வரும். கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பெற்றோர்களின் மணி விழா, பவள விழா, முத்து விழா போன்ற விழாக்களை நடத்திப் பார்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் சுபச் சடங்குகள் நடைபெற வழிபிறக்கும்.

பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் தீரும். முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்த மூத்த சகோதரர்கள் உங்களோடு வந்திணைந்து செயற்படப் போகிறார். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பொறுப்பில்லாமல் சுற்றித் திரிந்த பிள்ளைகளுக்கு பொறுப்பான வேலை கிடைக்கும். விருப்பங்களை நிறைவேற்ற உறவினர்களின் பங்களிப்பு அதிகம் உண்டு. பங்காளிப் பகை மாறும்.

லாபம் தரும் தொழிலுக்கு அஸ்திபாரம் அமைத்துக் கொள்ளப் போகிறீர்கள். பழைய பங்குதாரர்கள் விலக முன் வருவர். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து வருவாயை அதிக்ரிக்க வழிகாட்டுவர். பற்றாக்குறை பட்ஜெட் மாறும். செல்வ வளம் பெருகும் நேரமிது.

**சனியின் சஞ்சார நிலை!**
**27.3.2016 முதல் 10.8.2016 வரை**

விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகின்றார்.


**காக்கையில் ஏறும் செல்வன்**
**கனிவோடு ஆறில் வந்தால்**
**ஏக்கங்கள் யாவும் தீரும்!**
**எதிர்பார்க்கும் வெற்றி கிட்டும்!**
**தாக்கங்கள் யாவும் நீங்கும்!**
**தனவரவும் திருப்தியாகும்!**
**நோக்கங்கள் சனிமேல் வைத்தால்**
**நோயற்ற வாழ்வும் சேரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் எதிரிகள் உதிரிகளாவர். இதயத்தை வாட வைத்தவர்கள் இல்லம் தேடிவந்து சரணடைவர். எதிர்பார்த்த வெற்றி வந்துசேரும்.

அஷ்டமாதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் பலவும் தோன்றும். வயல் வைத்திருப்பவர்களுக்கு விளைச்சல் அதிகரிக்கும். வாங்கல்- கொடுக்கல்களில் பணம் கொடுத்தவர்களுக்கும் வளர்ச்சி அதிகரிக்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். இருப்பினும் சனி பகவானை முறையாக வழிபட்டு வந்தால் சஞ்சலம் தீரும்.

**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்!**
**27.2.2016 முதல் 9.9.2016 வரை**

விருச்சிக ராசியில் சனியும், செவ்வாயும் சேர்க்கை பெறுகிறார்கள். இக்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. தடைகளும், தாமதங்களும் வந்து கொண்டேயிருக்கும். விழிப்புணர்ச்சி இல்லாவிட்டால், தொழிலில் நம்பிக் கைக்குரியவர்களே ஏமாற்றக்கூடும்.




அதிகச் செலவு வந்து ஆர்ப்பரிக்கும். புதியவர்களுக்கு பொறுப்பு சொல்லி அதன் மூலம் சிக்கல்கள் உருவாகலாம்.

அதே நேரத்தில் 6, 11 இறகு அதிபதியான செவ்வாய் 25.10.2016 முதல் 6.12.2016 வரை உச்சம் பெறுகிறார். இக்காலத்தில் உத்தியோக ஏற்பாடுகள் கைகூடும். நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். கடல் தாண்டும் முயற்சி கைகூடும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் புதன் என்பதால் விஷ்ணுவை வழிபடுவதோடு, ஏகாதசி விரதமும் இருப்பது நல்லது. அருள் வழங்கும் திருமகள் அலர் மேலுமங்கை உடனாய திருவேங்கடத்தானை வழிபட்டால் பெருமைகள் வந்துசேரும்.

**மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு உங்களுக்கு ஒரு இனிய ஆண்டாகும். வேலை தேடும் பெண்களுக்கு வேலை கிடைக்கும். மாலை தேடும் பெண்களுக்கு மாலை கிடைக்கும். சோலையில் பூத்த பூவைச் சூட்டி நந்தீஸ்வரரை வழிபட்டால் வாழும் வாழ்க்கை வளமாக அமையும்.

கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். சிரித்த முகத்தோடு செயறபடுவீர்கள். உடல்நலக் குறைபாடுகள் உடனுக்குடன் சரியாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஒரு சில தொல்லைகள் வந்தாலும் குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் குழப்பங்கள் அகலும். வெளிநாடு அல்லது வெளி மாநிலம் செல்ல எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

குடும்ப ஒற்றுமை பலப்படும். ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக பெற்றோர் வழியில் இருந்த பிரயம் குறையலாம்.

ஒரு சில பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்கலாம். வளரச்சி அதிகரிக்கவும், வருமானம் திருப்தி தரவும் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. புதன்கிழமை பெருமாளை வழிபட்டால் புதிய பாதை புலப்படும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**ஆடி பதினெட்டில் தேடி வரும் யோகம்!**

ஆடி பதினெட்டு முதல் அதாவது 2.8.2016 முதல் குரு பகவான் 4 ஆம் இடத்தில் முறையாகச் சஞ்சரிக்கப் போகின்றார். அப்பொழுது அதன் பார்வை உங்கள் ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. அந்த அடிப்படையில் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

சமுதாயப் பணியில் ஈடுபட்டதன் மூலம் ஏற்பட்ட வீண் பழிகள் விலகும். உத்தியோக முன்னேற்றங்களும், சம்பள உயர்வு பற்றிய சந்தோஷ தகவலும் வந்து சேரும். ஒரு சிலருக்குத் தான் கேட்ட இடத்திற்கே வேலை மாற்றம் கிடைக்கும். தொழில் செய்பவர்கள் கிளைத் தொழில் செய்ய முன்வருவர்.

அன்னிய தேசப்பயணம் எண்ணியபடி கைகூடலாம். புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத் தொல்லை அகலும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

நாளை கடகம

## 7000மெற்றிக்தொன் நெல் விநியோகிக்கப்படவில்லை

2014ஆம் ஆண்டு இறக்குமதிசெய்யப்பட்ட சுமார்7 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் விநியோ கிக்கப்படா மல் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தற்போது அந்த பாதிக்கப்பட்ட நெல் தொகையை விலங் குண வாக பயன்படுத்துவ தற்கான கேள்விப்பத்திரம் கோரப் பட்டுள்ளது.


நுகர்வோர் பாதுகாப்பு தேசிய இயக்கத்தின் தகவல்படி இந்தியா மற்றும் மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 84ஆயிரம் மெற்றிக்தொன் நெல் சந்தைப்படுத்தப்படவில்லை என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பின் னரே குறித்த நெல் கேள்விப் பத்தி ரத்தின் மூலம் கோரப்பட்ட நெல் அல்ல என்பது தெரிய வந்தது. எனவே அதனை விநியோகிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## ஈழத்தமிழரின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு ஆன்மீக யாத்திரை



ஈழத்தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டும், காணாமல் போனவர்களை கண்டறிய கோரியும், ஓம் நமசிவாய ஆராதனையும் சிவ ஆராதனையும் ஆன்மீக யாத்திரையும் நல்லைக் குருமுதல்வரின் நல்லாசி நிகழ்வும் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் நடைபெற்றது. வழிபாடுகளை தொடர்ந்து நல்லூரிலிருந்து வண்ணார்பண்ணை சிவன் கோவில் வரையிலான பாதயாத்திரையும் நடைபெற்றது. வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறப்பு வழிபாடுகள், விசேட ஆராதனைகள், மேள வாத்தியங்கள் என்பன நடைபெற்றன. இந்நிகழ்வுகள் அனைத்தும் வீணாகான குருபீடத்தின் தலைவர் சபா.வாசுதேவ குருக்கள் தலைமையில் நடைபெற்றிருந்தன. (படங்கள்:-உ.சாளின்)





## முக்கிய கொலை விசாரணைகளை மேற்கொள்வதற்கு கடும்இடையூறு

முக்கிய கொலை விசாரணைகளை மேற்கொள்வதற்கு கடும் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

லசந்த விக்ரமதுங்க, நடராஜா ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் , பிரகீத் எக்னெலிகொட உள்ளிட்ட சர்ச்சைக்குரிய படுகொலைச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதில் புலனாய்வு பிரிவினர் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த கொலைகளை மேற்கொள்வதற்கு உத்தரவு பிறப்பித்த உயர் இராணுவ அதிகாரிகள் இன்னமும் குறித்த பதவிகளை வகித்து வருவதனால், விசாரணைகளுக்கு இவர் கள இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர். இந்தக் கொலைகள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணை நடத்தி வருவதுடன் சில கொலைகள் பற்றிய உண்மைகளை கண்டறிந்துள்ளனர்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில், கொலைகளை மேற்கொள்ள புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு பிறப்பித்த உயர் இராணுவ அதிகாரிகள் இன்னமும் அதே பதவிகளை வகித்து வருகின்றனர்.இதனால் விசாரணைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதுடன், இடையூறும் ஏற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.இந்த உயர் இராணுவ அதிகாரிகள் கொலையாளிகளை பாதுகாகக முயற்சித்து வருவதனால் விசாரணைகளை முன்னெடுப்பதில் சிரமங்கள்ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது. (இ-7)

## இரு கற்கைநெறிகள் இன்று இடம்பெறாது

2016ஆம் ஆண்டுக் கான முதலாம் தவணை கல் விச் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் இன்று ஆரம் பிக்கப்படவுள்ள நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியில் க.பொ.த உயர்தர கணிதம், விஞ்ஞானப் பிரிவு களது கற்கை நெறி செயற் பாடுகள் இன்றைய தினம் இடம் பெறமாட்டாது என கல் லூரி அதிபர் அறிவித்துள் ளார்.

க.பொ.த. சாதாரண விடை த்தாள் மதிப்பீடுகள் நடைபெறும் கார ணத்தாலேயே இக் கல்விச் செயற்பாடுகள் இன் றையதினம் ஆரம்பிக் கப்படமாட்டாது.


ஏனைய கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் இன்றையதினம் ஆரம் பிக் கப்படவுள்ளது.

இன்றையதினம் ஆரம் பிக்கப்படாத கணித, விஞ் ஞான உயர்தரப் பிரிவு கற்கை நெறிகள் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம் பிக்கப்படுமென அதிபர் மேலும் அறிவித்தார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 593

Search for people, places and things Nagendram Home


அனிஷ்மன்





நிவேதிகன்



மதீசன்




விதுசன்




சர்மிளா




திசிந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தகவல் அறியும் உரிமை

## (Right to information (RTI))



க. அருந்தவபாலன்
சாவகச்சேரி.

மக்களின் இறைமைக்கு முன்னுரிமையளிக்கும் ஜனநாயக அரச கட்டமைப்பு ஒன்றின் முக்கிய உறுப்புக்களில் ஒன்றாக தகவலறியும் உரிமை காணப்படுகின்றது. நாடொன்றின் அரச நிர்வாகம் வெளிப்படையானதாகவும் வகைகூறும் தன்மையுடையதாகவும் அமைகின்ற போதே அந்நாட்டு மக்கள் தங்கள் பிரதிநிதிகளினூடாக பயன்தரு வகையில் தமது இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியும். இவ்வடிப்படையில் இலங்கையில் தகவல் அறியும் உரிமைக்கான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றில் மிக விரைவாக கொண்டு வருவதற்காக அமைச்சரவை அனுமதியளித்திருப்பதுடன் அது தொடர்பான மாகாண சபைகளினது கருத்துக்களையும் பெறுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வுரிமை தொடர்பாகவும் அதன்மூலம் நாடும் மக்களும் பெறக்கூடிய பயன்கள் தொடர்பாகவும் அறிந்திருப்பது அவசியமாகும்.

### தகவல் அறியும் உரிமை என்றால் என்ன?

அரச செயற்பாடுகள் தொடர்பாக, தொடர்புடைய துறைகளுக்குப் பெறுப்பான அரச அதிகாரிகளிடமிருந்து பொதுமகன் ஒருவன் தரவுகளை அல்லது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையே இதுவாகும். தனது கோரிக்கையின் பேரில் அரசதுறை ஒன்றிடமுள்ள தரவுகளை எழுத்து மூலம் பெறுவதற்கு அல்லது நிராகரிக்கப்படுமானால் நிராகரிப்புக்கான காரணத்தை எழுத்து மூலம் பெறுவதற்கு ஒருவருக்குள்ள உரிமையாகும். அமைச்சுக்கள் தொடங்கி அடிமட்ட அரச நிர்வாக அலகுகள் வரை இதனுள் அடங்கும். கட்டணமின்றியோ அல்லது மிகக் குறைந்த கட்டணத்துடனோ இதனைப் பெறுவதற்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். மாறாக தரவுகளைப் பெறுவதற்கு உயர்ந்த கட்டணம் விதிக்கப்படுமானால் தகவல் அறியும் உரிமையின் நோக்கமே இல்லாமற் செய்யப்படும். தகவல் அறியும் உரிமையானது பின்வரும் மூன்று அடிப்படை நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1.அரச துறையின் கொள்கைகளை வகுப்பதில் பொதுமக்களின் ஈடுபாட்டையும் பங்களிப்பையும் மேம்படுத்தல்.

2.அரச செயற்பாடுகளில் வெளிப்படையான மற்றும் வகை கூறும் தன்மைகளை ஊக்குவித்தல்.

3.அரச வளங்களின் விரயங்களையும், பொறுப்பான அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் ஊழல்களையும் இழிவுபடுத்துதல் அல்லது இல்லாமல் செய்தல்.

அமெரிக்க ஐக்கியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஆபிரகாம் லிங்கனின் ஜனநாயகம் தொடர்பான மக்களால், மக்களுக்காக, மக்களது என்ற பிரசித்தி பெற்ற வாசகம் நாம் அறிந்ததே. நவீன பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி முறையில், அரச பணிகளைத் தங்கள் சார்பாக மேற்கொள்வதற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள். எனவே அப்பணிகளில் தங்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் என்ற வகையில் அமைகின்றன என்பதை அறிவதற்கான தரவுகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

### தகவல் அறியும் உரிமையின் தோற்றம்

நாடுகளில் ஜனநாயகக் கூட்டமைப்புக்கள் தோற்றம் பெற்று விருத்தியடைய அதனுடன் இணைந்த வகையில் தகவல் அறியும் உரிமையும் விருத்தியடையத் தொடங்கியது எனலாம். எனினும் இவ்வுரிமையின் தனித்துவமான வெளிப்பாடு பதினெட்டாம் நூற்றாண்டில் சுவீடன் நாட்டில் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. காரணம் தகவல் அறியும் உரிமைக்கான சட்டமூலத்தை முதலில் கொண்டு வந்த நாடாக சுவீடன் அமைவதனாலாகும். 1766 ஆம் ஆண்டு சுவீடன் நாட்டில் கொண்டு வரப்பட்ட பத்திரிகைச் சுதந்திரச் சட்டம் அரசாங்க ஆவணங்களைப் பொது மக்கள் பார்வையிடுவதற்கும் அறிவதற்குமான உரிமையை வழங்கியது. இதன் தாக்கம் படிப்படியாகப் பல ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான சட்டமூலங்களைத் தோற்றுவிக்க வழிவகுத்தது.

ஆசிய நாடுகளைப் பொறுத்தமட்டில் இவ்வுரிமைக்கு உத்தரவாதம் வழங்கும் முன்னோடி நாடாக இந்தியா அமைந்துள்ளது. 1990 களில் தகவல் அறியும் உரிமைகக்கான போராட்டங்கள் இந்தியாவின் கிராமங்கள் சிலவற்றில் தோற்றம் பெற்று மாநில மட்டத்திற்கு உயர்ந்து 2005 ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசானது தகவல் அறியும் உரிமைக்கான சட்டமூலத்தை மக்களவையில் கொண்டு வருவதற்கு வழிவகுத்தது.

1990 களின் தொடக்கத்தில் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் தேவதுங்கிரி கிராமத்தில் கடும் வரட்சி ஏற்பட்டதால் அங்குள்ள மக்கள் வறுமையின் கோரப் பிடிக்குள் அகப்பட்டனர். இதனால் மாநில அரசு இம்மக்களுக்கான நிவாரண உதவிகளை அறிவித்தது. எனினும் அரசின் உதவிகள் முழுமையாக அம்மக்களைச் சென்றடையவில்லை. வழமை போலவே உதவிகளில் பெரும்பகுதி அரச அதிகாரிகளினால் ஏப்பம் விடப்பட்டன.

இந்நிலையில் அக்கிராமத்தின் சமூகத் தலைவர்கள் மஸ்டூர் கிசான் சக்தி சங்கதன் (MKSS) என்ற சமூக அமைப்பை உருவாக்கி அதன்மூலம் மாநில அரசின் செயற்றிட்டங்கள் தொடர்பான தரவுகளைப் பலவழிகளிலும் சேகரித்து அங்கு நடைபெற்ற ஊழல்களையும் விரயங்களையும் வெளிக்கொண்டு வந்தனர். அத்துடன் தகவல் அறியும் உரிமைக்கான கோரிக்கையை முன்வைத்து பரவலாக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதன் காரணமாக ராஜஸ்தான் மாநிலம் இந்தியாவில் முதன்முதலாக இது தொடர்பான சட்ட மூலத்தைச் சட்டசபையில் நிறைவேற்றியது. இவ்வகையில் மிகப் பெரும் ஜனநாயக நாடான இந்தியாவில் 2005 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் உரிமைக்கான சட்டமூலத்தின் பிதாமகர்களாக தேவதுங்கிரி கிராம மக்களே காணப்படுகின்றனர்.

### தகவல் அறியும் உரிமையும் இலங்கையும்

தகவல் அறியும் உரிமைக்கான தனித்துவமான, வெளிப்படையான சட்டமூலம் எதுவும் இன்றுவரை இலங்கையில் உருவாக்கம் பெறவில்லை என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும். எனினும் இலங்கையின் அரசியல் அமைப்பில் மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகள் சிலவற்றில் இவ்வுரிமை இழையோடியிருப்பதுடன், நிறுவப்பட்டுமுள்ளன.

இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தில் 10 ஆவது உறுப்புரை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருந்ததற்கான அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரம் உட்பட சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச் சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றுக்குரித்துடையவராதல் வேண்டும்.

அதேபோல உறுப்புரை 14 (1) (அ) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

ஒவ்வொரு பிரஜையும் வெளியிடுதல் உட்பட பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவிததல் சுதந்திரமும் உரித்துடையவராவார்.

மேலும் 1975 ஆம் ஆண்டு சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்பாட்டுச் சட்டமும, இச்சட்டத்திற்கு 1988 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தமும் மக்களின் தகவல் அறியும் உரிமைக்கான சில வழிகளைத் திறந்து விட்டுள்ளன எனலாம். இச்சட்டம் சில அரச அதிகாரிகளதும் மக்கள் பிரதிநிதிகளதும் சொத்துக்கள் தொடர்பான விபரங்களைப் பார்க்கவும் பெறவும் பொதுமக்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. நிறுவனங்களின் தலைவர்கள், நீதிபதிகள், பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நெறியாளர்கள் போன்றவர்கள் இதனுள் அடங்குகின்றனர். இதேபோல இலங்கையின் அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு ஆணையகத்தின் மூலமும் இதன் நோக்கங்கள் சில அடையப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் வேறு பல சட்டங்கள் பொதுமக்கள் தகவல்களைப் பெறுவதற்கான உரிமைகளைக் கட்டுப்படுத்துபவையாகவும் உள்ளன. இவற்றுள்,

1955 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க அலுவலக இரகசியங்கள் சட்டம்.

1973 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைச் சபைச் சட்டம்.

1971 ஆம் ஆண்டு இலங்கை தாபன விதிகள்.

1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம்.

போன்றவற்றை முக்கியமாகச் சுட்டிக் காட்ட முடியும்.

எனினும் இலங்கையில் சில வழக்குகளின் நீதிமன்றத் தீர்ப்புக்கள் தகவல் அறியும் உரிமைக்குச் சாதனமான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளதையும் அவதானிக்க முடியும். இதிலொன்று யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளிவந்த 'Saturday Review' ஆங்கிலப் பத்திரிகையினைத் தடை செய்தமைக்கெதிராக அதன் வாசகர் சிலர் தொடுத்த வழக்கு (விஸ்வலிங்கம் எதிர் லியனகே - 1984)

அவசர கால விதிகளின் கீழ் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியினால், மேற்படி பத்திரிகை நிறுத்தப்பட்டதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இவ்வழக்கில், பெரும்பான்மையான நீதிபதிகள் அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (அ) ஆனது மக்களின் தகவலறியும் உரிமையையும் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி வழக்காளிகளுக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கினர். இதேபோலவே பெர்னாண்டோ எதிர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (1996) வழக்கிலும் நீதியரசர் மார்க் பெர்னாண்டோ அவர்கள் அரசியலமைப்பின் உறுப்புரைகள் 14 (1) (அ), மற்றும் 10 என்பவற்றைச் சுட்டிக்காட்டி மக்களின் தகவலறியும் உரிமைக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கினார்.

### தகவல் அறியும் உரிமையின் பயன்கள்

நாட்டின் வளங்களின் விரயம், ஊழல் போன்றவற்றை இழிவளவாக்கி, அவ்வளங்களின் பயன்பாட்டை உச்சப்படுத்துவதற்கு இச்சட்டம் உதவும் என்பதற்கு மேலாக இது அரச அதிகாரிகளின் நேர்மையான வெளிப்படையான செயற்பாடு களைத் தூண்டுவதால் தனி மனிதர்களும், சமூகமும் நன்மையைப் பெறும்.

உதாரணமாக அரச பாடசாலையொன்றில் தனது பிள்ளையைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும் போது பெற்றோர் குறித்த பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்ந்தமை தொடர்பான சகல தகவல்களையும் கோரிப் பெற வாய்ப்பு ஏற்படுவதால், தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமை பொருத்தமானதா? இல்லையா? என்ற தெளிவைப் பெற முடியும். மறுபுறத்தில் இவ்வாறான நிலைமை காணப்படுமிடத்து பாடசாலை நிர்வாகம் நேர்மையான முறையில் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்க முயற்சிக்கும்.

இதேபோல உள்ளூராட்சிச் சபையொன்று தமது கிராம வீதிக்கு நிதி ஒதுக்கியும் அது சரியான முறையில் செய்யப்படவில்லை எனக் குடியிருப்பாளர் கருதினால, அது பற்றிய தரவுகளைக் கோரிப் பெற்று கேள்வி எழுப்ப முடியும். இவ்வாறு பொதுமக்கள் தங்கள் தங்கள் பிரதேசத்தில் இடம்பெறும் அரச செயற்றிட்டங்களின் அமுலாக்கம தொடர்பாக விழிப்புணர்வைக் கொண்டிருக்க இது வழிவகுக்கின்றது.


இதேவேளை, ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றான ஊடகங்கள தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்யவும் அதன் மூலம் மக்களுக்குச் சரியான தகவல்களை வழங்குவதற்கும் இச்சட்டம் பெரிதும் உதவும்.

நம்பகமானதும் துல்லியமானதுமான தகவல்களை வழங்க முடிதல், முழுமையாக ஆக்கங்களை வழங்க முடிதல், சமூகப் பொறுப்பை நிறைவேற்றுதல் போன்றவற்றில் ஊடகங்களுக்கு வாய்ப்பாக அமையும். குறித்தவொரு விடயம் அல்லது பிரச்சினை தொடர்பாக ஊடகங்கள் ஊக அடிப்படையில் செய்திகள் வெளியிடுவதற்குப் பதிலாக சரியான தரவுகளையும் தகவல்களையும் பெற்று செய்திகளை, கட்டுரைகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். இதேபோலவே புலனாய்வு விடயங்களையும் அவை மிகச் சரியாகவும் துல்லியமாகவும் வெளிக் கொணர முடியும். ஊடகங்களின் சமூகப் பொறுப்பென்ற வகையில் அரச சம்பந்தப்பட்ட தரப்புகள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இவ்வடிப்படையில், ஜனநாயகக் கட்டமைப்பொன்றின் முக்கிய உறுப்பாக அமையும் தகவல் அறியும் உரிமையின் பெறுமானம் தொடர்பாக நாம் ஒவ்வொருவரும் சரியாக விளங்கிக் கொள்வது முதற் பணியாக உள்ளது. அதனடிப்படையில் அதற்கென தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒன்றைத் தனித்துவமான முறையில் உருவாக்குவதற்கு சகல தரப்பினரும் முயற்சி செய்ய வேண்டும். இவ்விடயத்தில் ஊடகங்கள் மற்றும் சமூக நிலைமைகளின பங்கு மிகமிக அவசியமாகும். இவற்றுக்கு மேலாக மக்களின் பிரதிநிதிகள் குறிப்பாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் சுயநலங்களையும் கருத்து வேறுபாடுகளையும் புறந்தள்ளிவிட்டு, ஒருமனதாக இச்சட்ட மூலம் உருவாக்கப்பாடுபடல் வேண்டும்.

# உயரத்தை நோக்கி...

## தொழில் ரகசியம்




உலகமே மாற்றத்தை விரும்பும் இன்றைய சூழ்நிலையில், நாம் மட்டும் உறங்கிக்கொண்டிருந்தால், வெற்றி நம்மை உதறிவிட்டு சென்றுவிடும். அனுதினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றத்தின் வழியே பயணித்துக்கொண்டிருக்கும் பரபரப்பான நமது வாழ்க்கைச்சூழலில், நாமும் நமக்கான மாற்றத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியமான ஒன்றாகிறது அல்லவா!. வெற்றியின் புதிய உயரங்களை எட்டிப்பிடிக்க நினைப்பவர்களுக்கான உத்திகளை தரும் புத்தகம் இது.

தொழில் ரீதியிலான அல்லது வேலை நிமித்தமான அல்லது தனிப்பட்ட வாழ்க்கைக்கான மேம்பாட்டு நுட்பங்களை சொல்லித்தருகிறார் "அப்கிரேடு" என்னும் இந்த புத்தகத்தின் ஆசிரியர் "மார்க் சான்போரன்". இந்த வழிமுறைகள் உங்களின் வழக்கமான செயல்பாட்டினை




நல்ல நிலைக்கும், நல்ல செயல்பாட்டினை சிறந்த நிலைக்கும், சிறந்த செயல்பாடுகளை வியக்கத்தக்க நிலைக்கும் மாற்ற உதவும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**தொடர்ச்சியான மேம்பாடு!**

ஒரு இலக்கிற்காகத் திட்டமிடுகிறோம். நமது கடின உழைப்பின்மூலம் அதில் வெற்றிபெற்று நமக்கான இலக்கை அடைந்துவிடுகிறோம். அதோடு எல்லாம் முடிந்துவிட்டதா?. போதும் என்று வெறுமனே இருந்துவிடவேண்டுமா?. கண்டிப்பாக இல்லை. எட்டிய இலக்கிற்கு அடுத்தபடியான மற்றுமொரு இலக்கினை நிர்ணயித்து, அதனை நோக்கிய பயணத்தைத் தொடங்க வேண்டும். மாற்றத்திற்கு ஏற்ப நாமும் நம்மை மேம்படுத்திக்கொள்வது அவசியமானது. நாம் நம்மை மேம்படுத்திக்கொள்வது என்பது ஒரு குறிப்பிட்ட நிலையோடு முடிந்துவிடக்கூடிய விஷயம் அல்ல. அது ஒரு தொடர்ச்சியான செயல்பாடு.

இந்த மேம்பாட்டு செயல்பாடானது நமது வாழ்க்கையில் நம்மால் அடிக்கடி உணரக்கூடிய செயலே. உதாரணமாக, நமது கணிப்பொறிக்குத் தேவையான மென்பொருள் ஒன்றை வாங்குகின்றோம். அதன் புதிய மற்றும் மேம்பட்ட பதிப்பானது ஒரு வருடத்திற்குள் பயன்பாட்டிற்கு வந்துவிடும் என்பதை அறிவோம் அல்லவா!. உண்மையில், முன்னேற்றத்திற்கான வாய்ப்பானது முடிவில்லாதது.

**வாய்ப்புகளும் தொடக்கமும்!**

வாழ்வின் முன்னேற்றத்திற்கு தொடர்ச்சியான மேம்பாடு முக்கியம். சரி, அதற்கான வாய்ப்புகள் என்ன என்பதைப் பார்ப்போம். எந்தெந்த விஷயங்களில் நம்மையும், நமது செயல் பாட்டினையும் நம்மால் மேம்படுத்திக்கொள்ள முடியும்?. நமது தொழிலையோ அல்லது தனிப்பட்ட வாழ்க்கையையோ கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தோமானால், முன்னேற்றத்திற்கான எண்ணற்ற வாய்ப்புகள் கொட்டிக் கிடப்பதை அறியலாம்.

வாய்ப்புகளுக்கு அடுத்து, இந்த மேம்பாட்டினை நாம் எங்கிருந்து தொடங்குவது என்ற கேள்வி எழுகிறது அல்லவா!. நமது தற்போதைய நிலையானது, நாம் இந்த நொடி எங்கிருக்கிறோம் என்பதே. இந்த நிலையிலிருந்து நாம் இரண்டு முக்கியமான கேள்விகளுக்கான பதிலை ஆராய வேண்டியது அவசியமான ஒன்று. முதல் கேள்வி, நாம் செல்ல வேண்டிய இடம் எது? அதாவது, நாம் அடைய வேண்டிய இலக்கு என்ன?. இரண்டாவது கேள்வி, எப்படி அந்த இடத்தை அடைவது? அதாவது, நமது இலக்கிற்கான செயல்பாடு என்ன?. இந்த 2 கேள்விகளுக்குமான பதிலே, நமது வாழ்க்கை பயணத்தை பெரிதும் பாதிக்கின்றது என்கிறார் ஆசிரியர்.

**வரலாறு முக்கியமல்ல!**

நமக்கான இலக்கை அடைவதற்கு நமது கடந்த கால வரலாறு பெரிதாக ஒன்றும் உதவுவதில்லை என்கிறார் ஆசிரியர். கடந்தகால சாதனை, விருதுகள் மற்றும் அங்கீகாரம் போன்றவை வெறுமனே நினைவுகூரத்தக்க புகைப்படங்கள் போன்றதே தவிர அவை ஒன்றும் நமது வருங்காலத்தை கணிக்கக் கூடிய விடயங்கள் அல்ல. "மரிலின் பெர்குசன்" அவர்களின் கூற்றுப படி, நமது கடந்தகாலம் நமக்கான ஆற்றலாகாது.

கடந்தகாலத்தில் நாம் அடைந்ததை எதிர்காலத்தில் நம்மால் அடையமுடியாது என்பதோ அல்லது கடந்தகாலத்தில் நாம் பெறமுடியாமல் போன விஷயங்களை நம்மால் எதிர்காலத்தில் பெறமுடியாது என்பதோ கண்டிப்பாக இல்லை.

கடந்தகாலத்தில் எதைப் பெற்றோம் அல்லது எவ்வளவு பெற்றோம் என்பதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. அவற்றையெல்லாம் விட அதிகமான குறிப்பிடத்தக்க சாதனைகளை புரிவதற்கான வல்லமை நமக்கு உண்டு என்பதை மனதில் நிலைநிறுத்த வேண்டும். பல கோடி ரூபாய் பணம் சம்பாதிக்கலாம், மிகச்சிறந்த விருதுகளை பெறலாம், வெற்றிகரமான சாம்பியன் ஆகலாம், பலரால் பெரிதும் மதிக்கப்படலாம், அடுத்தவர்களின் மீதான அன்பு அதிகரிக்கலாம். இவற்றிற்கெல்லாம் நமது கடந்த கால வரலாறு முக்கியமல்ல. நமது வாழ்வின் ஒவ்வொரு நிலையினையும் நம்மால் மேம்படுத் திக்கொள்ளவும், அதன்மூலம் மாபெரும் வெற்றியினை பெறவும் முடியும்.

**எதிர்பார்ப்புகளை உயர்த்துவோம்!**

வாழ்வில் நம்மால் எதிர்கொள்ளப்படும் மிகச்சிறந்த வரையறைகளானது, உளவியல் ரீதியிலானதே தவிர உடல் ரீதியிலானது அல்ல. இதன்மூலமே சிலர், அவர்களின் உண்மையான திறனைவிட அதிக வெற்றி களை சிலநேரங்களில் பெற்றுவிடுகின்றனர். திறன்களின் மீதான அவர்களது நம்பிக்கை மற்றும் மன வலிமையே இதற்கு காரணம். நமக்கான வெளிப்புற உலகை மாற்றுவதற்கு முன், நமது உட்புற உலகான மனதை நாம் கண்டிப்பாக மேம்படுத்திக் கொள்ளவேண்டும். சாத்தியமான விடயங்களின் மீதான நமது தனிப்பட்ட எதிர்பார்ப்புகளை முதலில் நாம் உயர்த்திக்கொள்ளாமல், குறிப்பிடத்தக்க முன்னேற்றத் திற்கான எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளக்கூடாது.

நம்முடைய சொந்த எதிர்பார்ப்புகளின் மீதான, தீவிரமாக கருத்தில்கொள்ளக்கூடிய வகையிலான கேள்விகளைக் கொடுத்துள்ளார் ஆசிரியர். என்னால் எவ்வளவு சம்பாதிக்க முடியும்?, உறவுமுறைகளில் எந்தளவு மேம்பாட்டினை பெற முடியும்?, எனது வேலையினை மேலும் எவ்வளவு சிறப்பானதாக செய்யமுடியும்?, எனது நேரத்தை மேலும் பயனுள்ளதாக எந்தளவில் உபயோகிக்க முடியும்?, தற்போதைய நிலையைவிட அதிக மகிழ்ச்சியுடன் என்னால் இருக்க முடியுமா?. இந்த கேள்விகளின் வாயிலாக நமக்கான எதிர்பார்ப்புகளை மேலும் உயர்த்திக்கொள்ள முடியும் என்பதே ஆசிரியரின் கூற்று.

**தடைகளைக் கண்டறிவோம்!**

எந்தவொரு செயல்பாடானாலும் அதன் பயணத்தில் சில தடைகளை சந்தித்தே தீரவேண்டும் அல்லவா!. கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் ஆகியவற்றை கையாள்வதற்கான மிகச்சிறந்த வழி, அவற்றை சரியாக அடையாளம் காண்பதே என்கிறார் ஆசிரியர். நமது எண்ணங்கள் மற்றும் திட்டங்களை முடக்கச் செய்யும் காரணிகள், கட்டுப்பாடுகள், தடைகள் மற்றும் தடயங்களை தீவிர தணிக்கையின் மூலமாக சரியாக தீர்மானிக்க வேண்டியது அவசியம்.

இந்தத் தடைகளின் சரியான அடையாளமே இதன தீர்வுக்கு முக்கிய காரணியாக விளங்குகின்றது.

**மாற்றங்களை ஏற்போம்!**

நமது வாழ்வில் நாம் கட்டுப்படுத்தக்கூடாத மற்றும் நம்மால் கட்டுப்படுத்த முடி யாத விஷயங்களில் ஒன்று மாற்றம். நமக்கு ஏற்படும் மாற்றங்களில் சுமார் 94 சதவீத மாற்றங்கள் மற்றவர் களாலும் நமது சூழ்நிலைகளாலும் நம்மீது திணிக்கப்பட்டவை என்பதே நிபுணர்களின் மதிப்பீடாக இருக்கின்றது. வாழ்வில் நிலையான ஒரு விடயம் இருக்குமானால், அது இந்த உலகம் எப்போதும் மாறிக் கொண்டே இருக் கின்றது என்பதேயாகும், உலகம் மாறிக் கொண்டிருக் கும் வேளையில், நாமும் மாற்றங் களை ஏற்றுக்கொண்டு அதன் வழியிலேயே வெற்றியை நோக்கி பயணிக்க வேண்டும்.

ஒரு விற்பனை பிரதிநிதி தன்னுடைய காலாண்டு விற்பனை இலக்கினை வெற்றிகரமாக முடித்துவிடும் நிலையில், அவருக்கான அடுத்த காலாண்டிற்கான இலக்கு உயர்த்தி கொடுக்கப்படுவதே இன்றைய சூழல். இந்த உல கம மிக வேகமாக மாற்றத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையில், அதற்கு ஈடான மாற்றம் நமக்குள்ளும் ஏற்பட வேண்டும். நம்மைச்சுற்றி ஏற்படும் மாற்றத்தை நாம் விரும்பவில்லை என்றாலும், நமது வேலையினையோ அல்லது முகவரியையோ மாற்றுவதன் மூலம் நம்மால் மாற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மேம்பாட்டிற்கான வழிமுறைகளையும் நமக்கான வாய்ப்புகளை யும சரியாக கண்டறிந்து, மாற்றங் களை ஏற்று, எதிர்வரும் தடைகளை தாண்டி முன்னேறிசெல்ல முடிவெடுப்போம்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,858.64 | 6,894.50 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,603.9 | 3,625.69 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 12,585.488 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ):* பிசி ஹவுஸ்(0.30), சிலோன் பிறின்டேர்ஸ் (1,965.70), பரஹன்(975.10), உடப்புசலாவ(27.90), ரன்கிரி(78.30).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ):* பிசி பார்மா(0.50),அஸ்ஹொட் ஹோல்டிங் (8.00), ஓரியன்ட் ஹாமன்ஸ் (7.30), சிஜஎப்எல்(0.70), சீலின்சிங் (1,349.80)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## இலங்கையில் பொருளாதார மாநாடு

இலங்கை பொருளாதார மாநாடு ஒன்று இந்த மாதம் 7-ம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த மன்றத்தில் உலக புகழ்பெற்ற கண்டுபிடிப்பாளர் ஜோர்ஜ் சோரொஸ் மற்றும் நோபல் பரிசில் பெற்ற ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை பிரதமர் ஆரம்பித்து வைக்கவுள்ளார். எதிர்வரும் 10 வருடங்களுக்கான அரசாங்கத்தின் பொருளாதார திட்டங்கள் குறித்து இதன்போது பேசப்படவுள்ளது.

## வட்டி விகிதங்களில் மாற்றம் இல்லை –மத்திய வங்கி

2015 -ம் ஆண்டு டிசம்பர் மாதம், நிதி கொள்கை நிலைப் பாட்டில், மத்திய வங்கியின் வட்டி விகிதங்களில் மாற்றம் இடம் பெறவில்லை என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எனவே மத்திய வங்கயின் நிலையான வைப்பு விகிதம் நூற்றுக்கு ஆறு சதவிகிதமாகவும் நிலையான கடன் வசதி விகிதம் நூற்றுக்கு 7.5 சதவிகிதமாகவும் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது

## கொமர்சல் வங்கியின் பசுமைக் கிளைகள்




கொமர்ஷல் வங்கி மேற்கொள்ளும் சுற்றாடலுக்கு நேசமான நடவடிக்கைகள் 2015ஆம் ஆண்டில் மிக உறுதியான முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. அதன் நான்கு கிளைகளில் சூரிய சக்தி பொறிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஐந்து கிளைகளுக்கான சூரியசக்தி பொறிமுறை கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளன. இவை தவிர மேலதிகமாக 20 கடதாசி பாவனையற்ற இயந்திரங்களும் தருவிக்கப்பட்டுள்ளன

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி சூரிய சக்தி மூலம் ஏற்கனவே 40 கிலோவாட் மின்சாரத்தை பெற்று வருகின்றது. பலாங்கொடை, பொரளை, நாரஹேன்பிட்டி, மகரகம ஆகிய கிளைகளில் இந்த சூரிய சக்தி மின்சார முறை அமுலில் உள்ளது. கொள்ளுப்பிட்டி, சிற்றி அலுவலகம், பிரதான வீதி, கம்பஹா மற்றும் நுகேகொடை ஆகிய இடங்களிலும் இந்த முறை அமுலுக்கு வந்ததும் சூரிய சக்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு 240 கிலோவாட்டாக அதிகரிக்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ் வங்கி அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் மேலும் ஐந்து கிளைகளில் 2016ஆம் ஆண்டில் சூரிய சக்தி முறையை அமுல் செய்யவுள்ளது

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 141.97 | 146.19 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 208.58 | 216.29 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.16 | 159.54 |
| சுவிஸ் பிராங் | 140.77 | 146.88 |
| கனேடிய டொலர் | 101.69 | 106.08 |
| அவுஸ்திரேலிய டொலர் | 102.61 | 107.61 |
| சிங்கப்பூர் டொலர் | 99.67 | 103.67 |
| ஜப்பான் யென் | 1.17 | 1.22 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.23 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



# சிறுவர் அரங்கம்

1324

## குதிரை கற்றுக்கொடுத்த பாடம்!

வீராபுரம் என்ற சிற்றூரில் கேசவன் என்ற வணிகர ஒருவர் வசித்து வநதார்.

அந்த ஊரை அடுத்துள்ள நகரத்தில் பெரிய வியாபாரியாக அவர் திகழ்ந்தார்.

கேசவன் ஒரு கடைந்தெடுத்த கருமி!

வியாபாரத்தில் கண்ணும் கருத்து மாக இருக்கும் அவர் பிறருக்கு ஒரு கவளம் சோறுகூட போட மாட்டார்.

வேலை செய் யும் பணியாளர் களுக்கும் குறை ந்த அளவே சம்பளம் தருவார்.

அவரிடம் குதிரை ஒன்று இருந்தது. அவர் எங்கு செல்வதா்னா லும் குதிரையில்தான் செல்வார்.



அந்த குதிரை இல்லா மல் அவருக்கு பொழுது போகாது. பணி நிமித்த மாக எங்கு செல்வதாக இருந்தாலும் குதிரை சவாரிதான் அவருக்கு பிரியம்.

அவரின் வாகன மான அந்த குதிரை அவரிடம் வரும் வரை நன்றாக கொழுத்து வலிமை யாக இருந்தது. கருமியான கேசவன் அதற்கு ஒழுங்காக உணவு அளிப்ப தில்லை!

நாளொன்றுக்கு சிறிதளவு புல் கட்டும் கொள்ளும் மட்டும் வைப் பார். பாவம் அது குதிரையின் கால் வயிறு க்கு கூட பத்தாது.

அதனால் அது நாளுக்கு நாள் மெலிந்து போய் கொண்டு இருந்தது. ஆனாலும் கேசவன் குதிரையை கண்டு கொள்ளவில்லை.

வடி கட்டிய கஞ்ச னான அவர் குதிரை க்கு தீனி போட முன் வரவில்லை.

அவருடைய குதிரை இரண்டு நாட்களாக பட்டினியாக கிடந்தது, அன்று அவர் வெளியில் கிளம்ப வேண்டும் என்பதற்காக ஒரு கட்டு புல்லை எடுத்து வந்து குதிரை முன் போட்டார்.

பசியில் குதிரை வேகமாக மேய ஆரம்பித்தது. பாதி தின்னும் போதே குதிரையில் ஏறி விரட்ட ஆரம்பித்தார் கேசவன்.

பாவம் குதிரை அதற்கு கால் வயிறு கூட நிரம்பவில்லை! இன்று கேசவனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என குதிரை முடிவு செய்தது.

கேசவன் செலுத் திய பாதையில் இருந்து விலகி ஓட ஆரம்பித்தது குதிரை.

கேசவன் எவ்வ ளவோ முயன்றும் அவரால் குதிரையை கட்டுப்படுத்த முடிய வில்லை!

மிக வேகமாக ஓட்டம் பிடித்த குதிரை காடு மேடு பள்ளங்களை தாண்டி ஒரு அடர்ந்த புல்வெளியை அடைந்தது.

அதற்குள் உச்சி வெயில் மண் டையை பிளக்க ஆரம்பித்திருந்தது. அந்த புல் வெளியில் கேசவனை கீழே தள்ளிய குதிரை புற்களை நிதானமாக மேய ஆரம்பித்தது.

நல்ல வெயில் குதிரையின் மிரட்டல் காரணமாக சோர்ந்து போயிருந்தார் கேசவன்.

பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. ஆனால் அந்த இடத்தில் உண்பதற்கு எதுவுமே இல்லை. சுற்றிசுற்றி பார்த்தார் ஒன்றும் கிடைக்கவில்லை!

ஊர் திரும்பலாம் என்றாலோ வழி தெரியவில்லை! குதிரையின் அருகில் சென்றாலோ குதிரை முட்டவந்தது.

மாலை மங்கிவர வயிறார உண்டு முடித்தது குதிரை அருகில் இருந்த குளத்தில் நீரை அருந்தியது. பின்னர் சற்று நேரம் ஓய்வு எடுத்தது.

ஆனால் கேசவனை அருகில் நெருங்கவிடவில்லை! பசியின் மயக்கத்தில் மிகவும் களைத்து போயிருந்தார் கேசவன்.

குதிரை அவரை சட்டை செய்ய வில்லை. மீண்டும் புற்களை மேய ஆரம்பித்தது. இருட்டும் வேளையில் குதிரை என்ன நினைத்ததோ தெரியவில்லை.

கேசவனின் அருகில் வந்து நின்றது. குதிரை மீது ஏறக்கூட சத்து இல்லாமல் கிடந்தார் கேசவன். அப்புறம் தட்டுத் தடுமாறி ஏறி குதிரை மேல் அமர்ந்தார்.

குதிரை அவரை சுமந்து .சென்று அவருடைய வீட்டில் விட்டது. அப்போது தான் அவருக்கு பசியின் கொடுமை புரிந்தது.

இத்தனை நாள் மற்றவரையும் குதிரையையும் பட்டினி போட்டோமே! இன்று ஒருநாள் பட்டினியையே நம்மால் தாங்க முடியவில்லையே!

நமக்கு சரியான தண்டனை கிடைத்தது. குதிரை நல்ல பாடம் கற்றுக் கொடுத்தது என்று எண்ணி னார்.

வீடு சேர்ந்ததும் கை கூட கழுவா மல் உணவை அள்ளி உண்டார். அவருக்கு புத்திவந்தது.

இனி கஞ்சத்தனம் செய்யக்கூடாது. அனைவருக்கும் வயிறார உணவு போட வேண்டும் என்று முடிவு செய்தார்.

அப்போது வெளியில் ஐயா! பழைய சோறு ஏதாவது இருந்தா போடுங்க என்ற குரல் கேட்டது. உடனே கேச வன் வீட்டில் இருந்த உணவுகளை எடுத்து வந்து அந்த பிச்சைக்காரனு க்குப் போட்டார்.

கருமியான கேசவன் வீட்டில் பிச்சை போடுவதை மற்றவர்கள் வியப்புடன் பார்த்தார்கள். குதிரை கற்றுக் கொடுத்த பாடம் நல்ல வேலை செய்தது.



01.2016

04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 46 - டைட்டஸ் லபீனஸ் ருஸ்பீனா என்ற நகரில இடம்பெற்ற சமரில் ஜூலியஸ் சீசரைத் தோற் கடித்தார்.
- 1493 - கொலம்பஸ் தான் கண்டுபிடித்த புதிய உலகை விட்டுப் புறப்பட்டார்.
- 1642 - இங்கிலாந்து மன்னன் முதலாம் சார்ல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்ய தனது படைவீரர்களை அனுப்பினார்.
- 1698 - லண்டனில் அரச மாளிகையான வைட் ஹோல் தீயினால் சேதமுற்றது.
- 1717 - நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகி யன கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தின.
- 1762 - ஸ்பெயின் மற்றும் நேப்பில்ஸ் மீது இங்கி லாந்து போரை அறிவித்தது.
- 1847 - சாமுவேல் கோல்ட் தனது முதலாவது சுழல் துப்பாக்கியை அமெரிக்க அரசுக்கு விலைக்கு விற்றார்.
- 1854 - கப்டன் வில்லியம் மக்டொனால்ட் என்பவர் மக்டொனால்ட் தீவுகளைக் கண்டுபிடித்தார்.
- 1878 - சோஃபியா நகரம் ஒட்டோமான் ஆட்சியிலரு ந்து விடுதலை பெற்றது.
- 1884 - ஃபாபியன் அமைப்பு லண்டனில் ஆரம்பிக் கப்பட்டது.
- 1889 - இலங்கையில் சபரகமுவா மாகாணம் என்ற புதிய மாகாணம் சேர் ஈ. என். வோக்கர் என பவரால் உருவாக்கப்பட்டது.
- 1896 - யூட்டா 45வது மாநிலமாக ஐக்கிய அமெரி க்காவுடன் இணைந்தது.
- 1912 - பிரித்தானியக் காலனித்துவ நாடுகளில் சார ணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - பர்மா ஐக்கிய இராச்சியத்திலிருந்து விடுதலை பெற்றது.
- 1951 - சீனா மற்றும் வட கொரியப் படைகள் சியோல் நகரைக் கைப்பற்றின.
- 1958 - 14 வயது பொபி ஃபிஷர் ஐக்கிய அமெரிக்கா வின் சதுரங்க சம்பியன் போட்டியில் வெற்றி பெற்றார்.
- 1958 - முதலாவது செயற்கைக் கோள் ஸ்புட்னிக் 1 தனது சுழற்சிப் பாதையை விட்டு விலகி பூமியில் வீழ்ந்தது.
- 1959 - லூனா 1 சந்திரனுக்கு மிக அண்மையில் சென்ற விண்கலம் ஆனது.
- 1990 - பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் பயணி கள் தொடருந்து ஒன்று சரக்கு தொடருந்துடன் மோதியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - அல்ஜீரியாவில் மூன்று வெவ்வேறு நிகழ்வு களில் 170 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டனர்.
- 2004 - ஸ்பிரிட் என்ற நாசாவின் தரையுளவி செவ் வாயில் தரையிறங்கியது.

### பிறப்புகள்

- 1809 - லூயி பிறெயில், புடையெழுத்து கண்டு பிடித்தவர் (இ. 1852)
- 1813 - ஐசக் பிட்மன், ஆங்கிலேய மொழியியலாலர் (இ. 1897)
- 1889 - பதஞ்சலி சாஸ்திரி, 2 ஆவது இந்தியத் தலைமை நீதிபதி
- 1941 - க. துரைரத்தினசிங்கம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி
- 1984 - ஜீவா, தமிழ்த் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1941 - என்றி பெர்குசன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு மெய்யியலாளர் (பி. 1859)
- 1960 - அல்பேர்ட் காம்யு, நோபல் பரிசு பெற்ற எழுத் தாளர் (பி. 1913)
- 1961 - எர்வின் சுரோடிங்கர், ஆஸ்திரிய-ஐரிய இயற்பியலாளர் (பி. 1887)
- 1994 - ராகுல் தேவ் பர்மன், இந்திய இசையமைப் பாளர் (பி. 1939)
- 2003 - கான்ராடு ஹால், அமெரிக்க ஒளிப்பதிவா ளர் (பி. 1927)

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தருவதை வாங்குவதா? கேட்பதைத் தருவதா?

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் உறுதிபடக் கூறியுள்ளார்.

இலங்கை அரசை நம்பி சம்பந்தர் உறுதிபடக் கூறமுடியுமா? என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

ஆக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் மட்டுமே இலங்கை அரசு சர்வதேச சமூகத்தை சமாளிக்க முடியும் என்ற அடிப்படையில் 2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என சம்பந்தர் நம்பியிருக்கலாம். எதுவாயினும் 2016இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தருக்கு வழங்கியிருக்கலாம். இந்தச் சந்தர்ப்பம் தமிழ் மக்கள் மீது கொண்ட அனுதாபத்தால் ஏற்பட்டதன்று.

மாறாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தவிர்ப்பதற்காக, பிரதமர் ரணில் மேற்போந்த உறுதிமொழியை சம்பந்தருக்கு வழங்கியிருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணையை தமிழ்த் தரப்பு வலியுறுத்துமாக இருந்தால், நிலைமை சிக்கலாகும் என்ற அடிப்படையில் 2016இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விடும். சர்வதேச விசாரணை என்பதை வலியுறுத்தாமல் மௌனமாக இருங்கள் என்று பிரதமர் ரணில் கூற, அதனை நம்பிய சம்பந்தர் போனது போகட்டும் நடப்பதைப் பார்க்கலாம் என்று தனக்கு விசுவாசமானவரையும் இரண்டு சிங்களச் சட்டத் தரணிகளையும் ஜெனிவாவுக்கு அனுப்பி விட,

வழிமேல் விழிவைத்துக் காத்திருந்த தமிழ் மக்களுக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பலத்த ஏமாற்றமே கிடைத்தது.

என்ன செய்வது? பிரதமருக்கு ஆதரவானவரை நாங்கள் ஜெனிவாவுக்கு அனுப்பி எங்கள் தலையில் நாங்களே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்ட கவலையால் போர் தந்த இழப்புக்களால் துவண்டு போன தமிழினம் தன் விதியை நொந்து கொண்டது.

கூடவே, சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் அமெரிக்காவும் ஈழத் தமிழ் மக்களை நம்ப வைத்து ஏமாற்றியது. எங்கள் இனத்தின் அரசியல் தலைமையின் பலவீனத்தால் ஏற்பட்ட பெரும் தோல்வியின் மத்தியில்,

சம்பந்தர் ஐயா கூறியபடி 2016இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற ஊசலாடும் நம்பிக்கை மட்டுமே இப்போது தமிழ் மக்களுக்கு எஞ்சியிருக்கிறது.

இது ஒரு புறம் இருக்க, 2016இல் தீர்வு காணப்படும் என்றால் தீர்வு எது? என்ற கேள்வி எழவே செய்யும். இங்குதான் அவர்கள் தருவதை நாம் வாங்கிக் கொள்வது தீர்வா? அல்லது நாங்கள் கேட்பதை அவர்கள் தருவது தீர்வா? என்பது புரியாமலே உள்ளது.

அவர்கள் தருவதை நாங்கள் ஏற்பதாக இருந்தால் எங்களிடம் எந்தத் தீர்வுத்திட்டமும் இருக்கத் தேவையில்லை.

மாறாக நாங்கள் கேட்பதை அவர்கள் தருவதாக இருந்தால் எங்களிடம் தீர்வுத்திட்டம் கட்டாயம் இருக்க வேண்டும். மேற்கூறிய இரண்டு விடயங்களில் எது சரியானது என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்வதே பொருத்துடையது.

# போர் விமானக் கொள்வனவு குறித்து இன்னமும் முடிவு தீர்மானிக்கப்படவில்லை
## விமானப்படைப் பேச்சாளர் கருத்து

(கொழும்பு)

பாகிஸ்தானிடமிருந்து போர்விமானங்களை கொள்வனவு செய்வது குறித்து இலங்கை இன்னமும் தீர்மானிக்கவில்லை என விமானப்படை பேச்சாளர் சமிந்த அல்விஸ் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது பாகிஸ்தானிடமிருந்து விமானங்களை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

விமானகொள்வனவு குறித்த மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இறுதி முடிவை இன்னமும் எடுக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு வகை விமானங்கள் குறித்து நாங்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை, எங்களது நோக்கங்களை நிறைவேற்றகூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றகூடிய விமானம் குறித்தே நாங்கள் ஆர்வம் கொண்டுள்ளோம். பாகிஸ்தான்- சீன கூட்டு தயாரிப்பு ஜேஎவ்17 தண்டர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்துவிட்டது என்ற தகவலை பரப்புவதன் மூலம் இலங்கை அரசாங்கம் அந்த வகை விமானங்களை கொள்வனவு செய்வதை உறுதிசெய்வதற்கு சில தரப்பினர் முயல்கின்றனர்.

இலங்கை விமானப்படையிடம் தற்போது உள்ள பல விமானங்கள் காலத்தால் பழையவை என்பதால் நிச்சயமாக புதிய விமானங்களை மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்படும். யுத்தம் முடிவடைந்துள்ளதால் தாக்குதல் விமானங்களிற்கான தேவை எதுவும் இல்லை.

அதேவேளை பல்வேறுபட்ட பணிகளை பூர்த்திசெய்யகூடிய விமானங்களிற்கான தேவையுள்ளது என விமானப் படை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (செ-12)

# சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளதாக கவலை

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள காளிகோயில் சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக அப்பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

வேறு மாவட்டங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகளாக வந்து செல்வோர் சீர்கேடுகளை இங்கு அரங்கேற்றுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்தகைய கலாசார சீரழிவுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் கோயில் தூய்மையற்ற நிலையில் காணப்படுவதாக ஆலய பரிபாலன சபையினராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பிரதேச இளைஞர் யுவதிகளது கலாசாரம் பாதிப்படைவதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை இடம்பெற வேண்டுமென அப்பிரதேச மக்கள் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (இ-5-60)

# மூலிகைக்காக கஞ்சா உற்பத்தி

மூலிகைத் தேவைக்காக சட்ட ரீதியாக பாதுகாப்பான முறையில் கஞ்சா பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வாத்துவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் ஆங்கில மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகும் பலருக்கு இக்கஞ்சா செடியின் மூலம் மூலிகை தயாரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கஞ்சாச் செடியினை தனியொரு நபர் வீட்டில் வளர்த்தால் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் நாட்டில் மூலிகைத் தேவையினைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-12)

# சாரதிகளுக்கான கலந்துரையாடல்

வடமராட்சி கிழக்கில் மணல் ஏற்றி இறக்கும் அப் பிரதேசத்தில் உள்ள உழவு இயந்திரங்களின் சாரதிகளுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் அனைத்து உழவு இயந்திரங்களது சாரதிகளையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-5,60)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சின் தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

க. பொ. த. சாதாரண தர பரீட்சையில சிங்களம் / தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொத்தமாக ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க. பொ. த. உயர்தர பரீட்சையில் குறைந்தது ஒரு பாடமாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த.பெ.இல.557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 01ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத் தக்கதாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பொருளும் நிகழ்ச்சியும்




நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும். எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பிலிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிதழ்ச்சி தான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள், தோற்றங்கள் அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

அதனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகின்றது. இவ்வாறு இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத் துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக்கத்தைக் கழித்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அது தானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளி தான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில், கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின்றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.

# பிறீமியர் லீக் பட்மின்டன்; சாய்னா நேவால் விலகல்



பிறீமியர் பட்மின்டன் லீக் போட்டியில் இருந்து இந்தியாவின் நம்பர் வன் வீராங்கனையான சாய்னா நேவால் விலகியிருப்பது அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிரிக்கெட், காற்பந்து, ஹொக்கி போன்ற விளையாட்டுகளுக்கு லீக் போட்டிகள் நடத்தப்படுவது வழக்கம்.

இதேபோன்று பட்மின்டனுக்கான லீக் போட்டியும் தொடங்கப்பட்டுள்ளது.

பிறீமியர் பட்மிண்டன் லீக் எனப் பெயரிடப்பட்டுள்ள இதில் இந்தியாவின் நம்பர் வன் வீராங்கனையும், உலகத் தரவரிசையில் 2-வது இடத்தில் இருக்கும் சாய்னா நேவால் அவாதே வாரியர்ஸ் அணிக்காக ஒரு லட்சம் டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தொடக்க ஆட்டத்தில் மும்பை ராக்கெட்ஸ் அணிக்கெதிராக சாய்னா விளையாடுவதாக இருந்தது.

ஆனால், காயம் காரணமாக கடைசி நேரத்தில் இந்த போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சாய்னா நேவால் கூறியதாவது, கடந்த இரண்டு வாரங்களாக என்னுடைய கால் பாதத்தில் ஏற்பட்ட காயத்தால் நான் அவதிப்பட்டு வந்தேன்.

இது மிகவும் முக்கியமானது. அதில் இருந்து நான் மீண்டு வந்து கொண்டிருக்கிறேன்.

இது ஒலிம்பிக் ஆண்டு. ஆகவே, அதில் நான் பாதுகாப்பாக காயம் இல்லாமல் விளையாட விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். அவரது விலகல் ரசிகர்களி டயே பலத்த அதிர்ச்சியை ஏற்படுததியுள்ளது. (க)


# கம்பர்மலை யங்கம்பன்ஸ் அரையிறுதிக்கு தெரிவு



கம்பர்மலையங்கம்பன்ஸ்விளையாட்டு கழகத்திற்கும் ஸ்ரீ அம்பாள் அணிக்கும் எதிரான நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் இரண்டு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டியது. முதலாவது பாதியாட்டத்தில் ரதனின் மாயக்கோல் நடுவர்களை திண்டாட வைத்தது. பின்னர் அது கோல் என நடுவர்கள் தீர்மானித்தனர். பின்னர் இரண்டாவது பாதியாட்டத்திலும் ஸ்ரீ அம்பாள் அணியின் வேகமான ஆட்டம் யங்கம்பன்ஸ் அணிக்கு சவாலாக அமைந்தது.

அதையும் பொறுப்படுத்தாத ரதனின் ஆட்டம் யங்கம்பன்ஸ் அணிக்கு வெற்றியை உறுதிப்படுத்த இரண்டாவது கோலையும் போட்டார். இறுதியில் 2:0 என்ற அடிப்படையில் யங்கம்பன்ஸ் வெற்றி பெற்றது. (க)

# பாகிஸ்தான் அணிக்கு மொகமது ஆமிர் திரும்பியது மகிழ்ச்சி: அப்ரிடி தெரிவிப்பு



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி இடது கை வேகப்பந்து வீச்சாளராக இருந்தவர் மொகமது ஆமிர். 2010-ம் ஆண்டு பாகிஸ்தான் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிக் கொண்டிருக்கும்போது மேட்ச பிக்சிங்கில் ஈடுபட்டார். இதனால் அவருக்கு ஐந்தாண்டு தடை விதிக்கப்பட்டது. இப்போது அந்த தடைக் காலம் முடிந்து, மீண்டும் அணிக்குத் திரும்பிய ஆமிர், நியூசிலாந்திற்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபது-20 தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ளார். இதற்கு பாகிஸ்தான் இருபது-20 அணி கப்டன் அப்ரிடி வரவேற்பு அளித்துள்ளார். இதுகுறித்து அப்ரிடி கூறுகையில் "பாகிஸ்தான் அணியில் மொகமது ஆமிர் மீண்டும் இடம் பிடித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இங்கிலாந் தில் வைத்து அவரிடம் நான் கேட்டதற்கு என்னிடம் முதல் முறையாக உண் மையை கூறினார். அவரதனதுதவறைஒப்புக்கொண்டதால், இப்போது நாம் அவரை ஆதரிக்க வேண்டும்" என்றார். (க)

# கிரிக்கெட் போட்டி

கிரிக்கெட் காலிறுதிப் போட்டியில் அச்சுவேலி றயிவன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்று முரசொலி விளையாட்டுக் கழகம் றயிவன் அணியுடனான கால் இறுதிப்போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதனடிப்படையில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற முர சொலி அணி முதலில் துடுப்பாடி நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்களில் 94 ஓட்டங்களை குவித்தது. அதிக பட்சமாக ம.மதுசன் 71 ஓட்டங்களை ஆட்டம் இழக்காது எடுத்தமை குறிப்பிடத்தக்கது. பதிலுக்கு துடுப்பாடிய றயிவன் அணி 47 ஓட்டங் களையே பெற்றது.

அதிக பட்சமாக ராஜ் 12 ஓட்டங்களை பெற்றார். இவ் வெற்றியின் மூலம் முரசொலி வி.க அரையிறுதிக்கு தெரிவாகி உள்ளது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

வட்டுக்கோட்டை இளைய நட்சத்திர விளையாட்டு கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து சுற்றுப்போட்டியினை பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ச.ரகுவரன் 0769287972 (க)

# மனைவியை தோற்கடிக்க வேண்டும் தென்னாபிரிக்க வீரர் கெவின்

கோல்ப் பந்தயத்தில் எனது மனைவியை தோற்கடிக்க வேண்டும் என்று டென்னிஸ் வீரர் கெவின் ஆண்டர்சன் கூறியுள்ளார்.

தெனணாபிரிக்க வீரரான கெவின் உலக தரவரிசையில் 12 ஆவது இடத்தில் இருக்கிறார். இவர் முதல் முறையாக சென்னை ஓபன் டென்னிஸில் விளையாடவிருக்கிறார்.

இது குறித்து அவர் கூறியதாவது, நான் ஏற்கனவே 2014 ஆம் ஆண்டு இந்தியாவில் விளையாடி இருக்கிறேன். அப்போது எனது மனைவியுடன் முதல்முறையாக வந்திருந்தேன்.

இந்திய மக்கள் மிகவும் நேசிக்கக்கூடியவர்கள். டென்னிஸ் ரசிகர்களும்அப்படிதான். இங்குள்ள உணவு வகைகள் ருசியாக இருந்தன. ஆனால் இந்தியாவில் ஏ.டி.பி, தொடரில் விளையாட இருப்பது இதுவே முதல் முறையாகும். சென்னை ஓபனில் களம் இறங்குவதற்கு உண்மையிலேயே மிகவும் ஆர்வமுடனும், உத்வேகத்துடனும் எதிர்நோக்கி இருக்கிறேன்.

எனது விளையாட்டு பயணத்தில், எதிராளிகளின் ஆட்ட அணுகுமுறையை அலசி ஆராயாமல், யுக்தியை களத்தில் சிறப்பாக கையாளுவேன் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில் தனது மனைவியுடன் கோல்ப் விளையாடுவது குறித்து கூறிய அவர், எனது மனைவி கோல்ப் விளையாட்டில் சிறந்தவர், எனக்கு அதிகம் டிப்ஸ் தருவார், அவருடன் நான் விளையாடும் போதெல்லாம் என்னை அவர் தோற்கடித்து விடுவார், ஒருமுறை கூட நான் வெற்றிபெற்றது கிடையாது.என்றவாது ஒருநான் அவரை தோற்கடிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். (க)



## பிரதமர் இன்று...

மணியளவில் அலரிமாளிகையில் வைத்து விசேட உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டுள்ள நிலையில், தேசிய அரசாங்கத்தினை கவிழ்க்கும் முயற்சியில் மகிந்த ஆதரவு அணி ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், புதிய கூட்டணி ஒன்றினை அமைக்கும் முயற்சியில் மகிந்த ஆதரவு அணி ஈடுபட்டுள்ளதுடன், மகிந்த அணியினைச் சேர்ந்த சிலர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஆயத்தமாகி வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று விசேட உரையாற்றவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இந்தநிலையில் குறித்த உரையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும் நம்பப்படுவதுடன், பலர் மத்தியிலும் கடும் எதிர்பார்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. (செ-12)

## முழுமையான...

இந்த நிலையில் அவரது பதவிக் காலம் நீடிக்கப்படுமா? மற்றும் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-12)

## செல்வம்...

புர வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உறுதிப்படுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஏற்பட்ட திடீர் மாரடைப்பின் காரணமாக உடனடியாக அவர் சிறி ஜெயவர்த்தன புர வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் உடல் நிலை தேறி வருவதாகவும், அவருக்கு தொடர்ச்சியாக அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என சிறி ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் மேலும் தெரிவித்தார். (செ-281)

## இலங்.வருகிறார்...

ங்கம் மற்றும் எதிர்க்கட்சி தலைவருடனும் சந்திப்புக்களை அவர் நடத்தவுள்ளார்.

கடந்த ஓகஸ்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் இலங்கையுடன் இணைந்து செயற்பட பிரித்தானியா தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளது.

மங்கள சமரவீர மீண்டும் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றதை அடுத்து ராஜாங்க அமைச்சர் ஸ்வைரி இந்த விருப்பத்தை அவரிடம் வெளியிட்டிருந்த நிலையில் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது. (செ-12)

## மைத்திரியின்...

மன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதியுடன் இணைந்து கொளளப் போவதாக செய்திகள் வெளியிட வேண்டிய அவசியமில்லை.

தற்போதும் ஜனாதிபதியுடன் நான் ஒத்துழைப்புடனேயே செயற்பட்டு வருகின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எவ்வித பிளவும் ஏற்படவில்லை.

கட்சியின் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என சமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (செ-12)

## உ/த பரீட்சை....

வகிக்கின்றனர்.

அதற்கமைய இம்முறை முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட உயிரியல் தொழில்நுட்பவியல் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடத்தையும் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் கருணைநாயகம் ரவிகரன் பெற்றுக் கொண்டுள்ளார்.

பொறியியல் தொழில்நுட்பவியல் பிரிவில் ஆங்கில மொழிமூலம் கல்வி பயின்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் பாலசுப்பிரமணியம் ஞானகீதன் மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட மட்டத்தில் தமிழ்மொழி மூலம் தோற்றி முதல் இடம்பெற்றுள்ள மாணவர்களின் விபரம் வருமாறு,

உயிரியல் பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் ஆனந்தராஜா ஹரிசங்கர் 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 24ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். கணிதப் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் கலாமணி மதனாகரன் 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் தேசிய மட்டத்தில் 22ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

வர்த்தக பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் மாணிக்கவாசர் லஜீபன் 3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் தேசிய மட்டத்தில் 62ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். கலைப்பிரிவில் அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலய மாணி குணபாலசிங்கம் நிதர்சனா 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் தேசிய மட்டத்தில் 46ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் கிளிநொச்சி ஆனந்த நகரைச் சேர்ந்த மதுரநாயகம் அஜித் ஜெரோம A.2B பெறுபேற்றைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கணிதப்பிரிவில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் முதலாம் வட்டாரம் முள்ளியவளையை சேர்ந்த விஸ்வலிங்கம் விஜிந்தன் A, 2B பெறுபேற்றைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் குறித்த பாடசாலையைச் சேர்ந்த கமலகாந்தன் பூர்வீகன் 3B பெறுபேற்றைப் பெற்று மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல்,

**உயிரியல் பிரிவு**

1 ஆம் இடம் - கே.பி.ஜி. தெபுலி உ்மேஷா - கம்பஹா ரத்னாவலி மகளிர் கல்லூரி

2 ஆம் இடம்- ஜே.எம்.மொஹமட் முன்சீப் - புத்தளம் ஜனாதிபதி கல்லூரி

3 ஆம் இடம் - யசஸ்வி வத்சலா- கொழும்பு விசாகா மகளிர் கல்லூரி

**கணித பிரிவு**

1 ஆம் இடம் - தசுன் ஓஷத - கொழும்பு றோயல் கல்லூரி,

2 ஆம் இடம் - நதீஷான் தனன்ஜய - குருநாகல் மல்லியதேவ ஆண்கள் கல்லூரி

3 ஆம் இடம் - சவித் நில்மன்த்த - இரத்தினபுரி சீவலி மத்திய மகா வித்தியாலயம்

**வணிக பிரிவு**

1 ஆம் இடம் - எஸ்.எம்.அகில் மொஹமட் - குருநாகல் மல்லியதேவ ஆண்கள் கல்லூரி

2 ஆம் இடம் - சதனி இரங்கா - கொழும்பு தேவி பாலிக்கா கல்லூரி

3 ஆம் இடம் - ரன்தி ரமேஷ் - மொறட்டுவ புனித செபஸ்தியர் கல்லூரி

**கலைப் பிரிவு**

1 ஆம் இடம் - கே.ஏ.ஜீவா நயனமாலி - குருநாகல் மல்லியதேவ மகளிர் கல்லூரி

2 ஆம் இடம் - நிராஷா நதீஷானி - கண்டி புஷ்பதான மகளிர் கல்லூரி

3 ஆம் இடம் - பாத்திமா அம்ரா - கொழும்பு 07, சீ.எம்.எஸ்.மகளிர் கல்லூரி

**தொழில்நுட்ப பிரிவு**

**பொறியியல் தொழில்நுட்ப பிரிவு**

1 ஆம் இடம் - ஷானக அநுராத - மாத்தளை புனித தோமியன் கல்லூரி

2 ஆம் இடம் -இஷார புந்திக்க - கொழும்பு ஆனந்தா கல்லூரி

3 ஆம் இடம் - பாலசுப்ரமணியம் ஞானகீதன் -யாழ். இந்து கல்லூரி

**உயிரியல் தொழில்நுட்பவியல் பிரிவு**

1 ஆம் இடம் - வாசனா நவோதனி - பண்டாரவளை தர்மபால மகா வித்தியாலயம்

2 ஆம் இடம் - கருணைநாயகம் ரவிகரன் -யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி

3 ஆம் இடம் - உபுலி அநுத்தரா - கேகாலை சுவர்ண ஜயன்த்தி மகா வித்தியாலயம். மேலும் பல பாடசாலைகளின் முன்னணி பெறுபேறுகள் உள்ளே... (செ-4,9,12)

## இனவாதத்தை...

வரங்களை தூண்டும் முன் ஆயத்த நடவடிக்கை என்று சிவில் அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. இதேவேளை உடலில் குறித்த சின்னத்தை பச்சை குத்தும் நடவடிக்கையும் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. சிங்கள பௌத்த வாதத்தை தூண்டும் இச் செயலை அண்மையில் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ கண்டித்திருந்தார்.

இதேவேளை, நுகேகொடையிலுள்ள பல முஸ்லிம்களின் வீடுகளின் சுவர்களிலும் பிரதான வாயில்களிலும் சிங்க லே என்று சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## 6 மாதங்களுக்குள்...

தென்பகுதி ஊடகம் ஒன்றுக்கு ஜனாதிபதி நேற்று வழங்கிய பேட்டியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்களின் பின்னரும் முகாம்களில் வாழும் 10 ஆயிரம் பேரிற்கு அடுத்த ஆறு மாதங்களிற்குள் வீடுகளை கட்டுவதற்கான நிலங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இது மிகவும் இலட்சியபூர்வமான இலக்கு, எனினும் உள்நாட்டில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களிற்கு வீடுகளை கட்டுவதற்கான நிலங்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்வது என் கடமைகளில் ஒன்று,

வடக்குகிழக்கில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களிற்கு மாத்திரமின்றி புத்தளத்தில் உள்ள மக்களிற்கும் இந்த வருட நடுப் பகுதிக் குள் காணிகள் வழங்கப்படும்,

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தின் போது 25 வருடங்களாக முகாம்களில் வசித்துவரும் 1300 குடும்பங்களை சந்தித்தேன்,இது ஏற்றுக்கொள்ள முடியாத துயர நிலை, இந்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை காணவிரும்புகின்றேன் நிலங்கள், வீடுகள் இல்லாததே இந்த பிரச்சினைக்கான முக்கியமான காரணம்,இதற்கு அடுத்த ஆறுமாதங்களிற்குள் தீர்வை காணுவேன்.

மேலும் அடுத்த இரு வாரங்களில் வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் பிடியில் உள்ள பெருமளவு நிலங்களை மக்களிடம் மீள ஒப்படைப்பேன். தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் படி இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட 700 ஏக்கர் நிலத்தை பொதுமக்களிடம் வழங்குவதற்காக நான் யாழ்ப்பாணம் செல்லவுள்ளேன்,

யுத்த குற்ற விசாரணைகளிற்கான பொறிமுறை குறித்து நாங்கள் ஆராய்ந்துவருகின்றோம்,நாடு மீண்டும் யுத்தத்திற்குள் தள்ளப்படுவதை தவிர்ப்பதற்காக புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கான அழைப்பை விடுக்கவுள்ளோம் என ஜனாதிபதி தெரிவித்தார். (செ-12)

## முதலீட்டாளர் ஜோர்ஜ் இலங்கை வருகை

உலகின் இரண்டாவது மிகப்பெரிய முதலீட்டாளராக கருதப்படுகின்ற ஜோர்ஜ் சொரோஸ நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ளார்.

அமெரிக்க பிரஜையான சொரோஸ் ஹங்கேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஹொங்கொங்கிலிருந்து இலங்கையை வந்தடைந்த அவருடன் அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகளும் இந்த பயணத்தில் இணைந்துகொண்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பிரதிநிதிகளை அழைக்கும் பகுதியில் அவரை வரவேற்பதற்கு விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவர் வரவேற்கப்பட்டுள்ளார்.

அத்தோடு விமான நிலையத்தில் அவருக்கு விசேட பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளும் நாட்டில் தங்கியிருக்கும் வரை அவருக்கு வழங்கப்படவுள்ளது. (செ-12)

## இலங்கை வந்தார்...

எதிர்வரும் ஏழாம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவுள்ள பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்குடனேயே இவர் இலங்கைக்கு குறித்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)


பாராட்டி வாழ்த்துகின்றேன்



திருமதி தவமலர் கனகசபை
கல்விமாணி (B.E.d) SLPS -2 II

கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையின்
உயர்வுக்கு ஊன்றுகோலாக திகழ்ந்து
அதிபர் பதவிக்கு அணிகலனாகி இன்று முதல்
கிளி/கறுக்காய்தீவு மகா வித்தியாலயத்திற்கு
நற்சேவை வழங்கச்செல்லும் எமது அதிபரை
மனதார வாழ்த்துகின்றேன்.

(3001)

முன்னாள் ஆசிரியன்
அ.லிங்கராஜ்



**உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)**
**பதவி வெற்றிடம்**

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:-கணனிப்பக்க உருவாக்குநர்
சம்பள குறியீட்டு இல:-322/15
சம்பள அளவுத்திட்டம்:-13515-110X10-120X10-15815
வயது:- 18 தொடக்கம் 45 வருடங்கள் வரை
கல்வி தகைமை:-

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் உள்ளடங்கிய 6 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 3 மாதங்களுக்குக் குறையாத முழுநேர Ms office அல்லது அதனையொத்த கணனிப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்தமைக்கான தகைமைச் சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டுக்குக் குறையாத செயல் அனுபவம்.

*குறிப்பு:-விண்ணப்பதாரர்கள் கணனியில் செய்முறையில் பரீட்சிக்கப்படுவர். விண்ணப்பப் படிவத்தை சுயமாகத் தயாரித்து சான்றிதழ்களின் பிரதியுடன் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ.சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு 18.01.2016 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.*

**பொதுமுகாமையாளர்,**
**உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்,** (சி-3310) 02.01.2016

## A/L இல் எதிர்பார்த்த பெறுபேறு இல்லையா?



**அதனாலென்ன?**

உங்களுடன் படித்து பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களை முந்திக்கொண்டு நீங்கள் பட்டத்துடன்

**தொழில்வாய்ப்பு பெறுங்கள்!**

**YES YOU CAN**

**O/L உடன்** — 3 - 6 மாத Entry Level கற்கைநெறியுடன் உள்நாட்டு - வெளிநாட்டு கல்வி - தொழில் - விசா ஏற்பாடு!

**Business / IT / Hotel Management / Media**

தேர்ச்சிபெற்ற கல்வியியலாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் தொழிற்துறை விற்பன்னர்களால் உருவாக்கப்பட்ட தொழில் உத்தரவாதமான விசேட பாடத்திட்டம்

1 - 2 வருட Certificate / Diploma உடன் — முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

1 வருட Foundation உடன் — 3 வருடங்களில் Bachelors Degree

Leading to

University of Sunderland UK | UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA | UNIVERSITY OF TORONTO

கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு — வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு VISA — உத்தரவாதம்*

* Condotions apply

உங்கள் பெயர், O/L or A/L பெறுபேறு என்பவற்றுடன் தொடர விரும்பும் பாடநெறியை SMS செய்து விசேட பரிசில், கட்டணக் கழிவு பெறுங்கள்!

**SIKARAM** Edu Solutions

Call or SMS **0773 616 798**

மேலதிக விபரங்களுக்கு **www.sikaram.lk**

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

## D.C.M

யாழ் நகர் | சுன்னாகம்

**A/L Day Class**

கலை, வர்த்தகம்

ஆரம்பம் - 06-01-2016

யாழ் நகரில் 8 am | சுன்னாகத்தில் 3 pm

(C-3312)

## D.C.M

யாழ் நகர்

**Day Class**

பொருளியல் - S.ஜெயக்குமார்

கணக்கீடு - AP. பகிரதன்

வணிகக்கல்வி - S. முகுந்தன்

ஆரம்பம் - புதன் 8 மணிக்கு

(C-3312)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**





- இலங்கையில் **FRENCH FOREIGN MINISTRY & FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1092 கிளைகள். தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- **INTERNATIONAL DIPLOMA (DELF A1,A2):** இலங்கையில் AF மட்டுமே இப்பரீட்சையை நடாத்துகிறது. எமது A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்றவேண்டியதில்லை. A1 பரீட்சைக் கட்டணம்: AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 1300/= (2.4.16 நடைபெறுகிறது). கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எம்முடன் இணையலாம்.
- **இலவசம்:** படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, புடித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை...
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள்.
- **பிரெஞ் மொழிபெயர்ப்புகள்**. பாடசாலை/பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணம் மிக குறைவு

கவனம்! யாழில் சில மோசடியான நபர்கள்!

- எமது AFஇல் படித்தவர்களையும் தமது நிலையத்தில் படித்தவர்கள் என கூறல். DELF A1 பெற்றுத்தருவதாக கூறி பலரை AFக்கு அனுப்பிவைத்தல். யாழில் தம்மைவிட்டால் சிறந்த ஆசிரியர் யாருமில்லை என கூறல். மேலும் பல பொய்கள்...
- ஏமாற்றப்பட்ட நூற்றுக்கணக்காடு AFக்கு வந்துள்ளனர்

ஆரம்பம் 10.01.16 8.30am பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (3058)

கச்சேரி பஸ் நிலையம் - புகையிரதக்கடவை - AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## ECONOMICS HALL

நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

DAY CLASS — வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்:- 06.01.2016

காலை 9.00 மணி

T.P:0776624387

(3056)

## A/L வரலாறு

M.பத்மன் MA (History)

கற்பிக்கும் இடங்கள்

DMI யாழ்ப்பாணம், உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி

(C-3145)

சகல A/L பிரிவினர்களுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய பட்டப்படிப்புகள்

NEW INTAKE 2016

**BCAS CAMPUS**

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA

Hotline **077 710 2131**

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்

விஷேட கட்டண சலுகைகள்

**பொதி விநியோக சேவை**



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுகங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101

(C-3297)

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.

**A/L DAY CLASS**

**கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்**

ஆரம்பம்

06/01/2016 புதன் 7.00 மணி

**Note:** யாழ் நகரில் கலை, வர்த்தக, தொழில்நுட்ப பெறுபேறுகளில் முன்னணி பெறுபேறுகளை பெற்று 60இற்கு மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்த ஒரே ஒரு கல்வி நிறுவனம்

பாடம் மாறி கற்பவர்களுக்கு விசேட பிரிவு

(C-3296) T.P 0774696695

## தென்மராட்சியில் A/L ICT

ஞானோதயா அக்கடமி

5 வருட கற்பித்தலில் அனுபவமுடைய பட்டதாரி ஆசிரியரினால்

தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

**A/L 2016 - Network**

Batch I - சனி, ஞாயிறு(9.00am)

Batch II - சனி, ஞாயிறு(4.00pm)

**A/L 2017 - Operating System**

Batch I - சனி, ஞாயிறு(8.00am)

Batch II - சனி, ஞாயிறு(3.00pm)

**A/L 2018 - Number System**

சனி, ஞாயிறு 10.00am

ஆசிரியர்

Mr.T.Jathubalatharan

B.Sc, Msc Computer Science

0778448002

(3063)

# பீகொன் Beacon

**தொழில்நுட்பப் பாடத்திற்கு தனித்துவமான நிறுவனம்!**

க.பொ.த உயர்தர பரீட்சையில் எமது மாணவிகளின் இமாலய சாதனை

பரீட்சைக்கு தோற்றிய 85 மாணவர்களும் திறமைச் சித்தி பெற்ற வரலாறு!

எமது நிறுவனத்தில் கல்வி பயின்று அதி உயர் பெறுபேறு பெற்ற மாணவிகள் இதோ!



மாவட்ட நிலை - 03
அகில இலங்கை - 14

சுதனா இராஜேந்திரன் 3A(உயிரியல் தொழில்நுட்பம் BioTech)



மாவட்ட நிலை - 04
அகில இலங்கை - 20

சக்தி தர்மரட்ணம் 2AB(உயிரியல் தொழில்நுட்பம் BioTech)



மாவட்ட நிலை - 11
அகில இலங்கை - 75

தர்சினி சிவராசா ABC(பொறியியல் தொழில்நுட்பம் EngTech)

அனைத்து மாணவரும் சித்தியடைந்தமை ஓர் வரலாற்று சாதனை!

மாணவ மாணவியருக்கும் அவர்களது பெற்றோருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்

**பீகொன்** வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-3298)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 A/L ICTல் எம்மிடம் கல்வி கற்று பரீட்சைக்குத் தோற்றி 100% சித்தியைப் பெற்றுத் தந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| பா.தயோதரன் | B | J/C.H.C |
| இ.லக்ஷி | B | J/S.V.C |
| ப.தேமதுரன் | C | J/C.H.C |
| ஆ.டக்ஷியானி | C | J/C.H.C |
| ஜெ.சுவர்னா | C | J/C.H.C |

இம் மாணவர்களுடன் ஏனைய சித்தி பெற்ற எமது மாணவர்களையும் பாராட்டுவதுடன் அவர்கள் மேன் மேலும் கல்விகற்று உயர்வு பெற்று வாழ வாழ்த்துகின்றோம். (3063)

0778448002 ஆசிரியர் தி.யதுபாலதரன் M.Sc

## இரகசிய முகா...

அது தொடர்பில் இலங்கையில் உள்ள தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இராணுவ ஊடக பேச்சாளர் அவ்வாறு தெரிவித்தார். (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.